மார்ச் 11, 2001 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்




## புலிகள் பணிந்து விடுவர் என்று அரசு நம்பிக்கை

## சொல்ஹெய்மின் கொழும்புத் தூது

## தடை புலிகளை பலவீனமாக்குமா?

## வடக்கே ஓடும் வெளிநாட்டு தூதுவர்கள்

# மலையகத்தில் வயிற்றுக் கொதி



# புலி என்றதும் கிலிகொண்டு தமிழ்ப் படத்துக்குத் தடை!

## தமிழ் நாடெங்கும் தமிழுணர்வுத் தீ பரவுகிறது


டைரக்டர் புகழேந்தி

வெறும் சினிமா சம்பந்தப்பட்ட பிரச்சினை என்ற நிலையிலிருந்து, தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கை என்ற கட்டத்துக்கு வந்து, இனப்பிரச்சினையாக உருவெடுத்து நிற்கிறது 'காற்றுக்கென்ன வேலி' படம்.

இதன் தயாரிப்பாளர் வணிகர் சங்கத் தலைவர் த.வெள்ளையன் என்றாலும், அவருக்குப் பின்னால் நிறைய வியாபாரிகள் இருக்கிறார்கள். அவர்களது சில்லறைகள் சேர்ந்து பணமாகி இது படமாகியிருக்கிறது.

இந்தப் படம் வெளிவர முடியாததால் ஒரு தயாரிப்பாளர் மட்டுமல்ல பல வியாபாரிகளும் நஷ்டத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்கிறது தயாரிப்பு வட்டாரம்.

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு தப்பி வந்த பெண் போராளி ஒருவருக்கு இங்குள்ள டாக்டர் சிகிச்சை அளித்து, அடைக்கலம் கொடுக்கிறார். இந்தப் பகுதியைத் தவிர படத்தில் முழுக்க முழுக்க காதல்தான் இடம் பெற்றுள்ளது.

"படத்தைத் தடை செய்யும் அளவுக்கு என்ன இருக்கிறது என்பதை பொதுமக்கள்தான் சொல்ல வேண்டும். எனவேதான் நாங்கள் பொதுமக்களைத் தேடிச் சென்று கொண்டிருக்கிறோம்" என்கிறார் டைரக்டர் புகழேந்தி.

பிரச்சினைக்குள்ளான இந்தப் படம் பற்றி நடவடிக்கை எடுப்பதற்காகவே பாரதிராஜா தலைமையில் கூட்டு நடவடிக்கைக் குழு அமைக்கப்பட்டது.

இந்தக் குழுவின் சார்பாக சென்னைக் கடற்கரையில் 'காற்றுக்கென்ன வேலி' படத்தைப் பொதுமக்களுக்கு திரையிட்டுக் காட்டுவது என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் அவர்கள் குறித்த திகதிக்கு ஒரு நாள் முன்னதாகவே இந்தப் படத்தை திரையிடக்கூடாது என்ற தடையை, தீர்ப்பை நடுவர்மன்றம் வெளியிட்டுவிட்டது.

அதுவும் மத்திய அரசு அலுவலகத்துக்கு விடுமுறை நாளான சனிக்கிழமை இந்தத் தீர்ப்பு வெளிவந்தது திட்டமிட்ட ஒன்றாகவே கருதப்படுகிறது.

எனவே மாநிலம் முழுவதும் கண்டனக் கூட்டங்களை நடத்தி மக்கள் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் இறங்கிவிட்டது கூட்டு நடவடிக்கைக் குழு.

இதற்கிடையில் சென்னை மண்டல தணிக்கைக் குழுவில் இருக்கும் சுதாங்கனும் பாரதியும் தங்களது உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்திருக்கிறார்கள். இந்தப் படத்தைத் தடைசெய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பது அவர்களது வாதம்.

சென்னை மண்டல தணிக்கை அதிகாரி ராஜு மற்றும் நான்கு உறுப்பினர்கள் உள்ளிட்ட கமிட்டியிலேயே படத்திற்கு எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. சில மாற்றங்களைச் செய்தால் படத்திற்குச் சான்றிதழ் தரலாம் என்று முடிவு செய்யப்பட்டது. தயாரிப்பாளர் மற்றும் டைரக்டர் தரப்புக்கு திருப்தி ஏற்படாததால் மறுபரிசீலனைக் கமிட்டியினர் பத்துப் பேர் படம் பார்த்தார்கள். அவர்களும் படத்தில் சில காட்சிகளை நீக்க வேண்டும், சில இடங்களில் மாற்றம் செய்ய வேண்டும் என்று கூறி விட்டார்கள்.

இதோடு தணிக்கைச் சபையின் பணி முடிந்துவிட்டது. இந்தக் கூட்டத்திற்குப் பிறகும் தணிக்கைச் சபையினருக்கும் மற்றும் தயாரிப்பாளர்களுக்குமிடையில் உடன்பாடு ஏற்படவில்லை. இதனால் நடுவர் மன்றத்திற்கு இந்தப் பிரச்சினை விடப்பட்டது.

அதன்படி டில்லி நடுவர்மன்றத்துக்கு

> முழுக்க முழுக்க காதலை மையமாக வைத்து எடுக்கப்பட்ட தமிழ்ப்படம் காற்றுக்கென்ன வேலி. அதை இந்திய தணிக்கை சபை தடை செய்திருக்கிறது.
>
> காரணம் என்ன? இலங்கையிலிருந்து தமிழகத்திற்குத் தப்பிச் சென்ற பெண் போராளி ஒருவருக்கு அங்கே டாக்டர் ஒருவர் சிகிச்சை அளிக்கிறார். அடைக்கலமும் கொடுக்கிறார். இப்படியான சில காட்சிகள் படத்தில் இடம் பெற்றிருக்கின்றன. அதனால்தான் தடை.
>
> இந்தியாவில் உள்ள தீவிரவாதிகள் சம்பந்தப்பட்ட எத்தனையோ முழு நீளத் தமிழ் படங்கள் வெளிவந்திருக்கின்றன. அவை தடை செய்யப்படவில்லையே!
>
> இந்தப்படத்துக்கு மட்டும் ஏன் தடை? தமிழ்த் துவேஷத்தின் உச்சக்கட்டமா என்று தமிழகத் தயாரிப்பாளர்கள் பலரும் போர்க்கொடி உயர்த்துகிறார்கள்.
>
> தமிழ்நாடு முழுவதும் தமிழ் உணர்வுத் தீ பரவிவருகிறது.

'காற்றுக்கென்ன வேலி' சென்றது. படத்தைப் பார்த்த மூன்று நீதிபதிகளில் இரண்டு பேர் 'திரையிடத் தடை' விதித்துவிட, ஜஸ்பால் சிங் என்ற நீதிபதி மட்டும் குறிப்பிட்ட சில காட்சிகளில் மாற்றம் செய்து படத்தைத் திரையிடலாம் என்று தீர்ப்பு வழங்கினார்.

ஒட்டு மொத்தத்தில் படம் திரையிடத் தடை என்பதாகவே தீர்ப்பு அமைந்துவிட்டது.

'காட்சிகளை மாற்றவேண்டிய அவசியம் இல்லை' என்பது தயாரிப்பாளர்களதும் டைரக்டர் தரப்பினதும் வாதம்.

தணிக்கைக் குழுவிலோ இரண்டு விதமான கருத்துக்கள். இரண்டு உறுப்பினர்கள் ராஜினாமாச் செய்யும் நிலையே உருவாகியிருக்கிறது.

அதிகாரி ராஜுவுக்கு சுதாங்கன் எழுதியுள்ள ராஜினாமாக் கடிதத்தில் மனக்குமுறல் கூர்மையாக இருக்கிறது.

இதுபற்றி ராஜுவிடம் கேட்டோம். தணிக்கைச் சபை மற்றும் நடுவர்மன்றம் எடுத்துள்ள நடவடிக்கை நியாயமானதுதான். தணிக்கை விதிகளுக்கு உட்பட்டுத்தான் நாங்கள் நடக்கிறோம். விடுதலைப்புலிகள் என்ற பெயர் பயன்படுத்தப்படவில்லையே தவிர, நடை, உடை, பாவனைகள் எல்லாம் அவர்களைக் குறிப்பனவாகவே அமைந்துள்ளன. படத்தைப் பார்க்கும் எவரும் இதனை எளிதில் புரிந்துகொள்ள முடியும் என்று நீதிபதி ஜஸ்பால் சிங் கூறியுள்ளார்.

சுதந்திரப் போராட்டத் தியாகியின் மகன் தீவிரவாதிகளுக்கு ஆதரவு கொடுப்பது போன்ற காட்சிகள் ஏற்க முடியாதவை. படத்தின் கிளைமாக்ஸில் கதாநாயகனைக் கைது செய்ய வரும் பொலிஸ் அதிகாரி அவனை அரவணைத்து அழைத்துச் செல்வது போன்ற காட்சி இடம்பெற்றுள்ளது. அப்படியானால் அந்த அதிகாரி அவனது செயல் நியாயம் என்கிறாரா? இதுபோன்ற சிக்கல்கள் படத்தில் இடம்பெற்றுள்ளன" என்கிறார் ராஜு.


குஷ்பு - சுஜிதா

தமிழர்களுக்கு எதிரான தீர்ப்பை நடுவர்மன்றம் வழங்கியுள்ளது. எனவே பொதுமக்களைச் சந்தித்து தமிழுணர்வுத் தீயை மூட்டுவோம் என்கிறார் பாரதிராஜா. தணிக்கைக்குழு உறுப்பினராக உள்ள பாரதீய ஜனதாக் கட்சிக்காரர் ஒருவரே இந்தத் தடைக்குக் காரணம் என்று தயாரிப்பு மற்றும் டைரக்டர் வட்டாரங்கள் குற்றம் சாட்டுகின்றன.

பொதுவாகவே இந்தியாவின் முன்னணி டைரக்டர்கள் பலருக்கும் தணிக்கைச் சபை மீது நல்ல அபிப்பிராயம் இருப்பதில்லை. ஒரே விஷயத்திற்கு இரண்டு விதமான முடிவுகளை எடுத்து தானும் குழம்பி, மற்றவர்களையும் குழப்பிக் கொண்டிருக்கிறது தணிக்கைச்சபை என்பதுதான் பல டைரக்டர்களின் கருத்து.

தணிக்கைச் சபை தனது கடமையைச் சரியாகச் செய்துகொண்டிருக்கிறது என்றால், ஆபாசப் படங்களும் இரட்டை அர்த்த வசனங்களும், முக்கால் நிர்வாணக் காட்சிகளும் எப்படி இவர்களைத் தாண்டி தியேட்டர்களுக்குச் செல்கின்றன?

"நூறாவது நாள்" படத்தைப் பார்த்துத்தான்


ஸ்ரீமன்

கொலை செய்தேன் என்று வாக்குமூலம் கொடுத்தானே ஜெயப்பிரகாஷ். அந்தப் படத்தை தணிக்கை செய்துதான் அனுப்பினார்களா?

தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் பெயர்களைப் பயன்படுத்தாமலே அவற்றோடு தொடர்புடைய தீவிரவாத கதாபாத்திரங்கள், காட்சிகள் ஆகியவற்றை முன்பெல்லாம் இடம்பெறவைத்தார்களே..... அவற்றை எல்லாம் அனுமதித்துவிட்டு இப்போது மட்டும் சட்ட நடைமுறைகளைக் கையில் எடுத்துக்கொண்டு விளாசுவது வேடிக்கையானதுதானே?

கோயில் கோபுரத்தை அரசு சின்னமாக வைத்திருக்கும் தமிழ்நாட்டில் கடவுள் இல்லை என்று சொல்லும் படங்களுக்கும் சான்றிதழ் கொடுக்கும் தணிக்கைச் சபை –

இதற்கு முன் தில்லே போன்ற படங்களில் தீவிரவாதிகளை உலவவிட்ட தணிக்கைச் சபை –

காவல்துறை, அரசியல்வாதி என்றாலே ஊழல் சாக்கடையில் நெளியும் புழுக்கள் என்று சித்திரிப்பதற்கு அனுமதி கொடுத்த தணிக்கைச்சபை –

இப்போது இந்தப் படத்தை இழுத்தடிப்பது, கூட்டு நடவடிக்கைக் குழு சொல்வது போன்று தமிழர்கள் உணர்வைக் கொச்சைப்படுத்துகிறதோ என்ற சந்தேகத்தைத் தோற்றுவிக்கிறது.

# பாண்டிச்சேரியால் அ.தி.மு.க கூட்டணியில் பெரும் குழப்பம்

தமிழக சட்டசபைத் தேர்தலில் ஜெயலலிதா ஒரு மகா கூட்டணியை உருவாக்கி வெற்றிக்கம்பத்தை அடைந்துவிடத் திட்டம் வகுத்தார். அந்தக் கூட்டணி முதலமைச்சர் கருணாநிதியை ஆட்சி பீடத்திலிருந்து விரட்டியடித்து விட்டுத் தன்னை முதலமைச்சராக்கும் என்று எதிர்பார்த்தார்.

அவருடைய இலக்கு தமிழகத்தின் மீது மட்டுமே இருந்ததால் அவர் பாண்டிச்சேரி பற்றி அவ்வளவு அக்கறை கொள்ளவில்லை. நல்ல தருணம் பார்த்து பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ் கருணாநிதி அணியிலிருந்து குத்துக்கரணம் அடித்தார். அவர் கேட்டதுமே பாண்டிச்சேரியைக் கைகழுவி விட்டார் ஜெயலலிதா.

மத்திய அரசில் அங்கம் வகித்த இரு ராஜாங்க அமைச்சர்களையும் பதவி விலகச் செய்துவிட்டு அ.தி.மு.க அணியில் வந்து சேர்ந்தவர் ராமதாஸ். எனவே அவர் கேட்பதை எல்லாம் கொடுக்க வேண்டும் என்ற நிலைக்கு வந்துவிட்டார் ஜெயலலிதா.

தமிழக சட்டசபையில் 27 தொகுதிகளையும் பாண்டிச்சேரியில் 10 தொகுதிகளையும் ராமதாஸுக்குத் தந்திருக்கிறார் ஜெயலலிதா. பாண்டிச்சேரியில் அ.தி.மு.க கூட்டணி வெற்றி பெற்றால் பா.ம.க உறுப்பினர் முதலமைச்சர் ஆவார். முதல் இரண்டரை வருடங்கள் பா.ம.கா உறுப்பினர் எஞ்சிய இரண்டரை வருடங்கள் அ.தி.மு.க உறுப்பினர் முதலமைச்சர் பதவியில் இருப்பர் என்பது தேர்தல் உடன்பாடு.

ஜெயலலிதா இவ்விதம் பாண்டிச்சேரியைத் தாரை வார்த்திருப்பது அவருடைய பழைய நண்பர்களான சோனியா காந்தியையும் மூப்பனாரையும் சீற்றம் அடையச் செய்திருக்கிறது.

ராமதாஸ் ஜெயலலிதா அணிக்கு வருவதற்கு முன்னர் மூப்பனாரே ஒரு சக்தி வாய்ந்த உபயகாரராக அங்கே இருந்தார். சோனியா காங்கிரஸையும் மூப்பனார் காங்கிரஸையும் தமது அணியில் சேர்த்துக் கொண்டு கருணாநிதியைக் கலக்கி எடுக்கலாம் என்று எண்ணியிருந்தார் ஜெயலலிதா.

இத்தகைய சூழ்நிலையில் ராமதாஸ் தமது பக்கம் வந்துவிடவே துள்ளிக்குதித்தார் ஜெயலலிதா. ஆனால் உண்மையில் ராமதாஸின் வருகை ஜெயலலிதாவுக்கு சீர் குலைவுகளைத்தான் தேடித்தந்திருக்கிறது.

ஜெயலலிதா ஆரம்பத்திலிருந்தே மூப்பனார் தமது பக்கம் தான் வருவார் என்று எதிர்பார்த்திருந்தார். மூப்பனாரோ தமிழகத்தில் பல்வேறு முகாம்களில் பிரிந்து இருக்கும் காங்கிரஸ் அணிகளை ஒன்று திரட்ட முயன்றார். தமது நீண்டகாலக் கனவான காமராஜர் ஆட்சியைத் தமிழகத்தில் ஏற்படுத்த முயன்றார்.

ஆனால் ஒரு புறம் கருணாநிதியும் மறுபுறம் ஜெயலலிதாவும் பலப்பரீட்சை நடத்தும் போது மூன்றாவது அணியாக நின்று தம்மால் ஆட்சியைப் பிடிக்க முடியாது என்பது அவருக்குத் தெரியும். ஆயினும் சோனியா காங்கிரஸைத் தமது பிடிக்குள் கொண்டுவந்து தமது கையைப் பலப்படுத்தலாம் என்ற ஆசை அவருக்கு ஏற்பட்டது.

த.மா.காவுக்கு இத்தனை தொகுதி தாருங்கள் என்று ஜெயலலிதாவிடம் கேட்காமல் சோனியா காங்கிரஸையும் சேர்த்து 60 தொகுதிகளைத் தாருங்கள் என்று மூப்பனார் கேட்டார். மூப்பனாரின் இந்த நிலைப்பாடு ஜெயலலிதாவுக்குப் பிடிக்கவில்லை.

இவ்வேளையில் கருணாநிதி த.மா.காவுக்கு 40 தொகுதிகள் தருகிறேன் வாருங்கள்" என்றார். காங்கிரஸைக் கைகழுவிவிட முடியாத நிலையில் மூப்பனார் அந்த வாய்ப்பை இழந்தார்.

த.மா.கா தனித்து வந்தால் 35 தொகுதிகள் தருவதற்கு முன் வந்தார் ஜெயலலிதா. மூப்பனார் நிலை தர்ம சங்கடத்திற்குள்ளானது.

மூப்பனாரின் கனவுகளைத் தகர்த்தவராக இன்று கருதப்படுகிறார் ராமதாஸ். ஜெயலலிதாவை எவருமே ஆட்டிப் படைக்க முடியாது என்கிறார்கள். ஆனால் ராமதாஸ் ஜெயலலிதாவின் கோட்டையையே கதிகலங்கவைத்து விட்டார்.

பாண்டிச்சேரியில் தற்போது காங்கிரஸ் ஆட்சியே இருக்கிறது. காங்கிரஸ் கோட்டையில் ராமதாஸ் ஆட்சி நடத்த வழிசெய்கிறேன் என்கிறார் ஜெயலலிதா. இந்நிலையில் அந்த அணியில் காங்கிரஸ் கட்சி எப்படிச் சேர முடியும்?

அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் விதத்தில் ஜெயலலிதா கூறினார்: "முதல் இரண்டரை வருட காலம் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் முதலமைச்சராக இருக்கட்டும். எஞ்சிய இரண்டரை வருட காலம் அ.தி.மு.கவுக்கு வேண்டாம். காங்கிரஸ் கட்சி உறுப்பினர் முதலமைச்சராக இருக்கட்டும்."

இந்தக் கருத்து மூப்பனார், சோனியா காங்கிரஸ் வட்டாரங்களில் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தி விட்டது.

ஜெயலலிதாவின் தேர்தல் கூட்டணி மிகவும் பலம் வாய்ந்ததாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் "கன எலி கூடினால் புற்றெடுக்காது" என்ற பழமொழி இங்கே நிதர்சனமாகிவிடுமோ என்று அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

இதேவேளையில் கருணாநிதி அணியில் புதிது புதிதாகச் சிலர் சேர்ந்து கொள்வது அன்றாட வழக்கமாக இருக்கிறது. மூப்பனாரின் தளபதியாகக் கருதப்பட்ட தலித் பிரிவு விடுதலைச் சிறுத்தைகள் அணித் தலைவர் திருமாவளவனும் கருணாநிதியுடன் சேர்ந்துவிட்டார். மூப்பனாரையும் கருணாநிதியிடம் வரும்படி அழைப்பு விடுத்திருக்கிறார்.

மற்றொரு தலித் பிரிவின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி ஏற்கனவே கருணாநிதியுடன் சேர்ந்துவிட்டார். காமராஜரின் சீடர் குமரி அனந்தன் புதிய கட்சி ஆரம்பித்து கருணாநிதியை ஆதரிக்கிறார்.

ராமதாஸின் கிரக மாற்றம் காரணமாகக் கருணாநிதிக்குக் கிடைத்த புதிய கிரக மாற்றங்கள் இவைகள்.

இதேவேளையில் கருணாநிதி தமது மகன் அழகிரியின் நடவடிக்கைகள் காரணமாக மிகவும் மனக்கலக்கம் அடைந்திருக்கிறார். மதுரையில் அழகிரி தி.மு.க அணிக்கு சோதனைகளை ஏற்படுத்தி வருகிறார். சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு முடிவு செய்திருக்கிறார்.

இது தொடர்பாக ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் நிருபர்கள் கேள்வி எழுப்பினார்கள். அதற்கு இலக்கியச் சுவை ததும்பப் பதில் தந்தார் கருணாநிதி.



ஜெயலலிதா

"நான் திருவாரூர்க்காரன். மனுநீதிச் சோழன் பரம்பரையில் வந்தவன்" என்றார் கருணாநிதி. தனது மகன் செலுத்திச் சென்ற தேர் ஒரு பசுக்கன்றைக் கொன்றுவிட்டது. எனவே தனது மகன் மீது அந்தத் தேரைச் செலுத்தி அவன் உயிரைப் பறிக்குமாறு உத்தரவு பிறப்பித்தவன் மனுநீதிச் சோழன்.

கருணாநிதி தமது மூத்த மகன் அழகிரியின் நடவடிக்கைகளால் மனமுடைந்து போயிருக்கிறார். ஆயினும் இளைய மகன் ஸ்டாலின் தமது தந்தைக்கு வெற்றிக்கனி பறித்துக் கொடுக்கத் தயாராகவிருக்கிறார்.

தி.மு.க அணியில் மேலும் சிலர் சேருவார்கள் என்று கருணாநிதி அறிவித்திருக்கிறார். ஆனால் அவ்விதம் அறிவிக்கும் நிலையில் ஜெயலலிதா இல்லை. மூன்றாவது அணி ஒன்றை மூப்பனார் ஆரம்பித்தாலும் அது கருணாநிதிக்கு சாதகமான நிலையையே ஏற்படுத்தும்.

பாண்டிச்சேரியை ராமதாஸிற்குத் தாரை வார்த்த ஜெயலலிதா தேர்தல் பலப்பரீட்சையில் இறங்குவதற்கு முன்னரே பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கிறார். இது அவரது துரதிஷ்டமே.

– கதாசி –



இந்தியாவிலுள்ள பாண்டிச்சேரி அரவிந்தர் ஆசிரமத்தின் இலங்கைக் கிளை 'ஸ்ரீ அரவிந்தர் மையம்' என்னும் பெயருடன் கொழும்பில் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்ட பாண்டிச்சேரி ஆசிரம சுவாமி ஸ்ரீ சிரத்தலு ராணடே கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்ம கணானந்தஜீ, கொழும்பு ஸ்ரீ அரவிந்தர் மையத்தின் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. முருகேசு ஆகியோர் அடியார்கள் சகிதம் வழிபாடு செய்யும் காட்சி.



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஷ்லிவில்ஸ் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிலையத்தின் (USAID) சார்பில் இரு வாகனங்களை 'யங்' என்ரர்பிறினியர்ஸ் ஒப் ஸ்ரீலங்கா என்னும் நிறுவனத்திற்கு வழங்கினார். நிறுவனத்தின் தலைவர் பட்றிக் அமரசிங்கவிடம் வாகனங்களுக்குரிய திறப்புகளை அமெரிக்கத் தூதுவர் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.


## பழுது பார்த்தல்

1975 முதல் - 25 வருடகால சேவையினை முன்னிட்டு வழங்கும் சலுகைகள்

இலவசம்

- சேவை கட்டணம்
- ஒரு வருட உத்தரவாதம்
- கொம்பியூட்டர் முறையில் ஒரு நாள் சேவை
- பொருட்களை பொறுப்பேற்பதும் -விநியோகமும்



டிஜிடெல், ஸ்டில், & வீடியோ கெமரா, பிளேக்ஸ்சேர்கியூற் றீபிளேஸ்மென்ற்ஸ், ஸ்டுடியோ பிளேஸ்ஸ், கொம்பியூட்டர் ரைஸ்ட் பிளேஸ்கன்ஸ், ஹைபை எம்பிலிபையோர்ஸ், செற்றலைற்ஸ், LD, CD, VCD, DVD கெஸைற்ஸ், CD இயந்திரங்களை VCD யாக மாற்றுதல், செலுலர் தொலைபேசிகள், பெக்ஸ் மெசின்கள், கோட்லெஸ், அனலொக் தொலைபேசிகள், எலக்ற்றோனிக் டைப்றைட்டர்கள், மைக்றோவேவ்ஸ் ஒவன், பொலிஷர், பிளேண்டேர், மின்சார விசிறிகள், சலவை இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், மோட்டார்கள்.

### டிரஸ்ட் இலெக்ட்றோனிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட்

364, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03. போன் : 575430, 565756

(P.G. மாட்டினுக்கு எதிரிலும் நெஷனல் ஷோரூம் மற்றும் ஹோட்டல் ரேணுகா மத்தியிலும்) (கடல் பக்கம்)

# சுடர் ஒளி

11 மார்ச், 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834


## மலையகச் சத்தியாக்கிரகம்

தோட்டத் தொழிலாளர்களின் அட்டன் சத்தியாக்கிரகத்தை அரசாங்கம் கையாளும் விதம் மிக மிக வேதனைக்கு உரியது.

வாழ்க்கைச் செலவு உயர்வால் ஏற்படும் பாதிப்பைச் சமாளிப்பதற்காக மற்றெல்லா ஊழியர்களுக்கும் 400 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படுகிறது.

அதைத்தானே தமக்கும் வழங்குமாறு கேட்டுத் தோட்டத் தொழிலாளர்கள் சத்தியாக்கிரகம் செய்கிறார்கள். அது தவறா? அநியாயமா?

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் ஆரம்பத்திலேயே ஜனாதிபதியை நேரில் சந்தித்து சத்தியாக்கிரகம் பற்றி அவருக்கு அறிவித்து 400 ரூபா சம்பள உயர்வு வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

தோட்டத் தொழிற்சங்கங்கள், தோட்ட நிர்வாகிகள், தொழில் திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் அடங்கிய குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்தார். விஷயத்தை அலசி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு குழுவைப் பணித்தார். அதற்குக் காலஎல்லையும் நிர்ணயித்தார்.

குறிப்பிட்ட காலத்துக்குள் குழு அறிக்கையைச் சமர்ப்பித்தது. சம்பள உயர்வு வழங்குவதற்கு தோட்ட நிர்வாகங்கள் தயாராக இல்லை என்பதை அறிக்கை தெளிவுபடுத்தியது.

அறிக்கையை ஜனாதிபதி வாங்கி வைத்துக்கொண்டு பிரதமரும் பெருந்தோட்டத் தொழில் துறை அமைச்சருமான ரத்னசிறி விக்கிரமநாயக்கவை அழைத்தார்.

தோட்டக் கம்பனிகளுடனும் தொழிற்சங்கங்களுடனும் பேசிப் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு அவரைப் பணித்தார். அவ்வளவோடு சரி. சத்தியாக்கிரகம் இரண்டரை வாரங்களைத் தாண்டிவிட்டது.

பல தோட்டங்கள் நட்டத்தில் இயங்குகின்றன. அதனால் சம்பள உயர்வு வழங்க முடியவில்லை என்கின்றன தோட்டக்கம்பனிகள்.

தொழிற்சங்கங்கள் அதை மறுக்கின்றன. தோட்டங்களில் நட்டம் என்று கம்பனிகள் கூறுவது பித்தலாட்டம் என்று தொழிற்சங்கங்கள் வாதாடுகின்றன.

தோட்டங்களில் நட்டம் என்பது உண்மையானாலும் கூட தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்க மறுப்பது பிழை என்கின்றன தொழிற்சங்கங்கள்.

உதாரணமாகத் துறைமுகத்தில் ஒரு சில காலங்களில் கப்பல் வரத்துக் குறைந்து நட்டம் ஏற்பட்டால் துறைமுகத் தொழிலாளர்களுக்கு அதைக் காரணம் காட்டிச் சம்பள உயர்வு மறுக்கப்படுகிறதா? இல்லை.

அப்படியானால் தோட்டத் தொழிலாளர்களுக்குமட்டும், தோட்டங்களின் இலாபநட்டத்தைக் கணக்கில் எடுத்துச் சம்பள உயர்வைக் கொடுக்க மறுப்பது ஏன்?

மற்றத் தொழிலாளர்களைப்போல் தோட்டத் தொழிலாளர்களுக்கும் அவர்களின் உழைப்புக்கு உரிய ஊதியத்தைக் கொடுக்கவேண்டியதுதானே!

இந்த 400 ரூபா சம்பள உயர்வு விஷயத்தில் அரசாங்கம் மிகப் பெரிய தவறு ஒன்றைச் செய்திருக்கிறது. 400 ரூபா சம்பள உயர்வை கசட் மூலம் அறிவித்தபோது இந்தச் சம்பள உயர்வு கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் வரும் ஊழியர்களுக்குப் பொருந்தாது என்று அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டது.

அப்படியிருந்தும் கூட்டு ஒப்பந்தம் செய்த மற்றத் தொழில்துறைகள் அனைத்தும் ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கிவிட்டன.

தோட்டத் தொழில்துறையில் உள்ள கம்பனிகள் மட்டும் அரசாங்க கசட் அறிவித்தலைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு சம்பள உயர்வு வழங்குவதில்லை என்று விடாப்பிடியாக நிற்கின்றன.

இந்தக் கட்டத்திலேனும் அரசாங்கம் அந்த கசட் அறிவித்தலைத் திருத்தினால் பிரச்சினை உடனே தீர்ந்துவிடும். தோட்ட நிர்வாகங்கள் பணிந்தே ஆகவேண்டும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பித்த சத்தியாக்கிரகத்தில் எல்லாப் பெரிய தொழிற்சங்கங்களும் சேர்ந்துவிட்டன. அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள், சமயப் பெரியார்கள், பிரமுகர்கள் என்று பலரும் சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்டுள்ளனர். தோட்டத் தொழிலாளர்கள் பல்லாயிரக்கணக்கில் இராப்பகலாகத் தம்மைச் சத்தியாக்கிரகத்தில் இணைத்துக் கொண்டுள்ளனர்.

வடக்கு கிழக்கிற்குப் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு எப்படியோ அப்படியே மலையகத்துக்குச் சத்தியாக்கிரகம். மக்களின் உணர்வலைகள் மலைகளிலே முட்டிமோதி எதிரொலிக்கின்றன.

இதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும். உடனே நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

# பேச்சு பற்றி முடிவில்லை என்கிறார் பாலசிங்கம்

பேச்சுவார்த்தை பற்றி இன்னும் எதுவித முடிவும் இல்லை என்கிறார் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்டன் பாலசிங்கம்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் பேச்சுவார்த்தை நடக்கும் என்று சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

மற்றும் சில பத்திரிகைகள் மே மாதம் முதல் வாரத்தில் நெதர்லாந்தில் பேச்சுவார்த்தை நடக்கும் என்று தெரிவித்திருக்கின்றன.

இன்னும் இரண்டு மாதங்களுக்குள் பேச்சுவார்த்தை நடக்கும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதுடில்லியில் குறிப்பிட்டிருந்தார்.

இவற்றை எல்லாம் மறுதலித்து பேச்சுவார்த்தை பற்றி இன்னும் எதுவித முடிவும் இல்லை என்றார் அன்டன் பாலசிங்கம்.

நோர்வேயின் விஷேச தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கடந்த வார இறுதியில் கொழும்பு வந்தார். ஜனாதிபதி, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முதலானோரைச் சந்தித்துப் பேசினார்.

இங்கிருந்து லண்டன் சென்று அன்டன் பாலசிங்கத்தைச் சந்தித்தார். அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அன்டன் பாலசிங்கத்துக்கு விளக்கிக் கூறினார்.

அதன் பின்னரே பேச்சுவார்த்தை பற்றி இன்னும் முடிவில்லை என்று அன்டன் பாலசிங்கம் கூறினார்.

என்றாலும் அரச தரப்பில் முன்னர் இருந்த இறுக்கம் சிறிது தளர்ந்து முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் அன்டன் பாலசிங்கம் தெரிவித்தார்.

அடுத்த வாரம் 'அனேகமாக 14 அல்லது 15 ஆம் திகதி பிரிட்டனில் பயங்கரவாதச் சட்டம் முற்றாக அமுலுக்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



அதாவது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட 21 உலக இயக்கங்களின் பட்டியல் நாடாளுமன்றத்தினால் அடுத்த வாரம் அங்கீகரிக்கப்பட்டு விடும். 21 இயக்கங்களும் பயங்கரவாத இயக்கங்கள் என்று ஆகிவிடும். அதன் பின்னர் அந்த இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் முன்னர் போல் இயங்கமுடியாது. இயங்கினால் கைது செய்து சிறையில் தள்ளப்படலாம்.

இந்த நிலையில் அன்டன் பாலசிங்கம் லண்டனில் இருந்துகொண்டு சொல் ஹெய்முடன் எப்படிப் பேசுவது? பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகளில் எப்படி ஈடுபடுவது? பேச்சுவார்த்தை நடக்குமானால் அதில் எப்படிக் கலந்துகொள்வது? இந்தக் கேள்விகளை அன்டன் பாலசிங்கமே எழுப்புகிறார்.

இன்றைய நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் விவகாரங்களில் ஈடுபடுவதற்கு வெளி உலகில் அன்டன் பாலசிங்கத்தை விட்டால் முதிர்ச்சியும் பக்குவமும் அடைந்த அனுபவசாலியான வேறு ஆள் எவரும் இல்லை.

பாலசிங்கம் நோர்வே சென்று அங்கே இருந்து சொல் ஹெய்முடன் பேசிக் காரியமாற்றலாம். ஆனால் அப்படிச் செய்வது நோர்வே அரசின் பக்கச்சார்பின்மையைக் கேள்விக்கும் கேலிக்கும் உரியதாக்கிவிடும்.

வேறு ஏதாவது ஒரு நாட்டுக்கு பாலசிங்கம் செல்வதானால் அவரது உடல் நிலை எப்படி ஆகும் என்று சொல்லமுடியாது. சிறுநீரக மாற்றுச் சிகிச்சை பெற்றவர் அன்டன் பாலசிங்கம். இப்போதும் கூட மருந்தும் கையுமாக இருக்கிறார். அடிக்கடி பரிசோதனைகளுக்காக ஆஸ்பத்திரி சென்றுவருகிறார். இந்த வசதி பிரிட்டனைப் போல் மற்ற நாடுகளில் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவருக்கு இல்லை.

அப்படியானால் என்னதான் முடிவு? அதுதான் அவரே சொல்லிவிட்டாரே! பேச்சுவார்த்தை பற்றி இன்னும் எதுவித முடிவும் இல்லை என்று. அதற்கு மேல் என்ன?

## புரிந்துணர்வு உடன்படிக்கை குறித்து தொடர்ந்து பிரச்சினை

*புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பெரும் பிரச்சினை. அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வாய்ப்பாக இருசாராருக்கு மிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் முயற்சியில் நோர்வேயின் விசேஷ தூதுவர் ஈடுபட்டு இருக்கிறார்.*

*யுத்த நிறுத்தம் பொருளாதாரத் தடை நீக்கம், கண்காணிப்புக் குழு நியமனம் முதலான விஷயங்கள் அடங்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை எரிக் சொல்ஹெய்ம் தயாரித்துள்ளார்.*

*அதில் இரு தரப்பினரிடமும் கையொப்பம் வாங்குவதற்கு அங்குமிங்குமாக ஓடித்திரிகிறார்.*

*ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்று எதுவும் இல்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதுடில்லி சென்ற போது அங்கே தெரிவித்தார்.*

*இது பற்றி அன்டன் பாலசிங்கம் என்ன கூறுகிறார் தெரியுமா?*

*ஜனாதிபதி அப்படித்தான் நேரத்துக்கு ஒன்று சொல்லுவார். அங்கே ஒன்று இங்கே ஒன்று கூறுவார். எதிலும் உறுதி கிடையாது என்கிறார்.*

*புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இரு தரப்பினரும் சரியாகக் கடைப்பிடிக்கிறார்களா என்பதைக் கண்காணிக்கும் குழுவில் எந்தெந்த நாடுகள் அங்கம் வகிப்பது என்பதில் பலத்த கருத்து வேறுபாடு*

*இதற்குள் இந்தியா வேறு மூக்கை நுழைத்து விஷயத்தைச் சிக்கலாக்கி வருகிறது.*

*எந்த ஒரு வல்லரசும் கண்காணிப்புக் குழுவில் இடம் பெறக்கூடாது என்று இந்தியா வற்புறுத்தி வருகிறது. இந்த வல்லரசுகள் இந்தியாவை நோட்டம் விட்டுக் கொண்டு இருக்கும் என்று இந்தியா அஞ்சுகிறது. இலங்கையில் ஏதோ ஒரு விதத்தில் வல்லரசுகள் காலூன்றுவது தென்கிழக்கு ஆசியாவில் தனது ஆதிபத்தியத்திற்குப் பெரும் ஆபத்தாக அமையும் என்று இந்தியா உள்ளூரக் கிலி கொண்டிருக்கிறது.*

*அமெரிக்கா, தான் நேரடியாக இல்லாவிட்டாலும் தன் சொல்லுக்குக் கட்டுப் படும் நாடுகளைக் குழுவில் இடம் பெறச் செய்து விட வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கிறது.*

*அமெரிக்காவைத் திருப்திப் படுத்த வேண்டிய கட்டுப்பாட்டிலிருந்து மீள முடியாத நிலையில் இலங்கை அரசு இருக்கிறது.*

*புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் இலங்கைக்கு ஆயுத உதவி அளிக்கும் நாடுகள், போருக்கு வேறு வழிகளில் உதவி செய்யும் நாடுகள், சார்க் நாடுகள் ஆகியவை கண்காணிப்புக் குழுவில் இடம் பெறக் கூடாது என்று கண்டிப்பாகக் கூறுகிறார்கள்.*

*கண்காணிப்புக் குழு விஷயமே இன்னும் முடியவில்லை. அதற்குள் பேச்சுவார்த்தை பற்றி எப்படி முடிவு வரும் என்று கேட்கிறார் அன்டன் பாலசிங்கம்.*

## பொருளாதாரத் தடையை சிறிது தளர்த்த அரசு இணக்கம்

**இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு உள்ள பொருளாதாரத் தடையை நீக்கவேண்டும் என்பது புலிகளின் கோரிக்கை. ஆனால் அப்படி ஒரு தடை இல்லை. இலங்கை அரசு இவ்வாறு சர்வதேச சமூகத்துக்குத் திரும்பத் திரும்பச் சொல்லி வந்தது.**

ஆனால் இப்போது முதல் முறையாக அரசாங்கம் பொருளாதாரத் தடை இருப்பதை ஒப்புக் கொண்டுள்ளது.

தடையைச் சிறிது தளர்த்துவதற்கு முன்வந்திருக்கிறது.

எல்லாப் பொருட்களையும் அனுப்பாவிட்டாலும் தடைசெய்யப் பட்டிருக்கும் பொருட்களில் சிலவற்றையேனும் அனுப்புவதற்கு இணங்கியுள்ளது.

முக்கியமாக எரிபொருள் அனுப்புவதற்கு அரசாங்கம் சம்மதித்திருக்கிறது.

ஆயினும் எவ்வளவு எரிபொருளை எந்தெந்த வேளைகளில் அனுப்புவது என்பதற்கு வரைமுறைகளை ஏற்படுத்த வேண்டும் என்கிறது.

அதற்குச் சிறிது காலம் தேவை என்றும் அரசாங்கம் கூறுகிறது.

இது முற்றுமுழுதாகத் திருப்தி அளிக்கக் கூடிய விஷயமாக இல்லாவிட்டாலும் அரசாங்கம் முன்னர் போல் இறுக்கமாக இல்லாமல் தளர்ச்சியைக் காட்ட முன் வந்திருக்கிறது என்பதைப் புலப்படுத்துகிறது.

அரசாங்கம் இந்த விஷயத்தில் இன்று இப்படிச் சொல்கிறது. நாளை என்ன சொல்லுமோ..! அரசுதான் ஒரு நிலையான கொள்கையில் இல்லையே என்கிறார் அன்டன் பாலசிங்கம்.

பிரிட்டிஷ் தடையோடு புலிகள் முன்போல் வீறாக எதையும் செய்ய முடியாத நிலையில் பணிந்து விடுவார்கள். அவர்களை இலகுவாகச் சமாளித்து விடலாம் என்று அரசாங்கம் நம்பியது. ஆனால் அந்த நம்பிக்கை தவறானது என்பதை அரசு உணர்ந்து விட்டது. அதன் விளைவுதான் பொருளாதாரத் தடையில் இந்தத் தளர்வு என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

## பட்ஜட் ஆலோசனைகள்

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு—செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்கள், படை வீரர்கள் ஆகியோருக்கு சம்பள உயர்வு வழங்கச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. ஓய்வூதியம் பெறுவோருக்கும் அதிகரித்த கொடுப்பனவுகள் கிடைக்கும்.

2002ஆம் ஆண்டு ஜனவரிக்குள் இந்தச் சம்பள, ஓய்வூதிய அதிகரிப்பு கிடைக்கும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மோட்டார், வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட இறக்குமதித் தீர்வை இடைநிறுத்துவதற்கும் சலுகைகளை கட்டுப் படுத்துவதற்கும் முன்மொழியப்பட்டிருக்கிறது

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை மேலும் 75 ஆயிரம் இளைஞர்களுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசிய பாதுகாப்பு வரி 1 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதமாக அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்படும்.

ஆண்டு 5 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் தொகை அதிகரிக்கப்படும்

சுகாதார காப்புறுதித்திட்டம் கொண்டு வரப்படும்.

# வன்னியாக மாறும் வாகரை படையினர் கெடுபிடி அதிகரிப்பு



மருத்துவ வசதிகள் மிகவும் அருகி விட்டதால் மக்கள் அவதி

**மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் அல்லாத வாகரைப்பகுதிக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு படையினர் தடைவிதித்துள்ளனர்.**

இந்தத் தடைவிதிப்பினால் வாகரைப் பிரதேசத்தைச் சேர்ந்த 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வாரம் அப்பகுதியில் ஒரு சம்பவம் இடம் பெற்றது.

வாழைச்சேனையில் இருந்து வாகரைப் பகுதிக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் சென்ற பொது மக்களை மாங்கேணிப் படை முகாமில் வைத்து படையினர் சோதனையிட்டனர். எந்த ஒரு உணவுப் பொருளையும் பொதுமக்கள் எடுத்துச் செல்ல முடியாது என்று கூறி அவற்றை நிலத்தில் கொட்டினர். பொதுமக்கள் கொண்டு சென்ற மண்ணெண்ணெயையும் படையினர் தம்மிடம் இருந்த வெற்றுக் கொள்கலன் ஒன்றுக்குள் ஊற்றி விட்டு வெறும் கொள்கலனையே திருப்பிக் கொடுத்தனர்.

இவற்றைத் திரும்பி



குழந்தைகளுக்கு சத்துணவு அறவே இல்லை

வந்து கேட்க வேண்டாம் எனவும் படையினர் தெரிவித்ததாக பொருட்களைப் பறிகொடுத்த பொது மக்கள் கூறுகின்றனர்.

இவற்றை நோக்கும் போது, வடக்கில் போர் அவலங்களினாலும் பொருளாதாரத் தடையாலும் பாதிக்கப்பட்டுள்ள வன்னி மக்களுக்கு ஏற்பட்டுள்ளது போன்ற ஒரு நிலைமை மட்டக்களப்பின் வாகரைப் பகுதி மக்களுக்கும் ஏற்பட்டு வருவது தெரிய வருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை நகருக்கு வடக்காக 15 கிலோ மீற்றர் தொலைவில் வாகரைப் பிரதேசம் உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பன்னிரண்டு பிரதேச செயலகப் பிரிவுகளில் வாகரையும் ஒன்று. வாகரைப் பிரதேச செயலகப் பிரிவில் மாங்கேணி வரையுமே படையினர் நிலை கொண்டுள்ளனர்.

மாங்கேணிக்கு அப்பால் பனிச்சங்கேணி, கிரிமிச்சை, ஆலங்குளம், வாகரை, ஊரியன்கட்டு, தட்டுமுனை, பால்சேனை, கதிரவெளி, கட்டுமுறிவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையில் உள்ள வெருகல் ஆகிய கிராமங்கள் வரை பெருந் தொகையான மக்கள் வாழ்கின்றனர்.

கடற்றொழில், தேன் எடுத்தல் மற்றும் கூலித்தொழில் ஆகியவை இப்பகுதி மக்களின் பிரதான தொழில்கள் ஆகும்.

கடந்த கால போர் அனர்த்தங்களினால் மருத்துவ வசதி, கல்வி வசதி என்பனவற்றுடன் பொருளாதார வளங்களையும் இழந்த நிலையில் இப்பகுதி மக்கள் வாழ்கின்றனர்.

கடைகளோ, அல்லது சந்தைகளோ இல்லாத இப்பிரதேசத்திலிருந்து பொது மக்கள் அன்றாடம் வாழைச்சேனை நகருக்கு வந்தே பொருட்களை வாங்கிச் செல்கின்றனர்.

கற்பூரம், யூரியா, பொலித்தீன், வாகன உதிரிப்பாகங்கள், பற்றறி உட்பட பல பொருட்களைக் கொண்டு செல்வதற்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ளது.

தற்போது அரிசி, மா, பிஸ்கட் வகைகள், தேயிலை, பால்மா, மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்ற பொருட்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சின்னஞ்சிறு கடைகள் கூட இல்லாத இந்தப் பிரதேசத்தில் படையினர் உணவுப் பொருட்கள் கொண்டு செல்வதற்கும் தடை விதித்துள்ளதினால் மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதேவேளை இத்தகைய தடைகளினால் மருத்துவசேவை, கல்வி வசதி என்பவை ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளன. மாங்கேணி, கதிரவெளி ஆகிய இடங்களில் அரசினர் வைத்திய சாலைகளும் வாகரையில் மத்திய மருந்தகமும் செயற்பட்டு வந்தன.

வாகரை மத்திய மருந்தகம் குண்டு போட்டுத் தகர்க்கப்பட்டு விட்டது. தற்போது வெறும் இடிபாடுகள் மட்டுமே காணப் படுகின்றன. ஏனைய இரு வைத்திய சாலைகளும் இயங்குவ தில்லை. இந்த நிலையில் வாரத்தில் இரு நாட்கள் மட்டும் செஞ்சிலுவைச் சங்கங்கள் வைத்திய சேவையை வழங்கி வருகின்றன.

அதேசமயம், பாடசாலைகள் கட்டட, தளவாட வசதிகளற்றுக் காணப்படுகின்றன. ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவுகிறது. மாணவர்கள் சில இடங்களில் வெட்ட வெளியில் இருந்து கல்வி கற்று வருகின்றனர். இந்த வேதனைகள் எப்போது வாகரை மக்களுக்குத் தீருமோ?

பொருட்கள் எடுத்துச்செல்ல விதிக்கப்பட்ட தடை குறித்து மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா வாழைச்சேனை இராணுவ முகாம் அதிகாரி மேஜர் செனிவரத்தினாவுடன் தொடர்பு கொண்டு கேட்டார். ''உணவுப் பொருட்களை எடுத்துச்செல்ல வாகரைப் பிரதேச மக்களுக்கு நாம் தடை விதிக்கவில்லை. உணவுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்படும் சம்பவங்கள் இனியும் இடம்பெறமாட்டா'' என்று ராணுவ மேஜர் தெரிவித்தார்.

எது எப்படியோ வாகரை மக்கள் இன்று போர் அவலங்களினால் பொருளாதார பலம் இழந்து கஷ்டப்படுகின்றனர் என்பது மட்டும் உண்மை.

— சத்துருக்கன்



வெட்டவெளியில் மாணவர்கள் கல்வி கற்க வேண்டிய நிலை

## ஆசிரியர் விவரங்கள் திரட்டு

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனைப் பகுதியில் உள்ள பாடசாலை ஆசிரியர்களின் விவரங்களைப் படையினர் திரட்டி வருகின்றனர்.

வாழைச்சேனை மீன்பிடித் துறைமுக படை அதிகாரிகளே விவரங்களைத் திரட்டி வருகின்றனர்.

படையினர் நேரடியாகச் செல்ல முடியாத பாடசாலைகளுக்கு கிராமசேவையாளர்கள் சென்று விவரங்களைத் திரட்ட உள்ளனர்.

இதேவேளை வாழைச்சேனைப் பகுதியில் கடந்த இருவாரகாலமாக படையினரால் குடும்ப விவரங்களும் திரட்டப்பட்டுவருகின்றன.

சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளின் போது வெளியூரைச் சேர்ந்த எவராவது தங்கியிருந்தால் அவர்களைக் கண்டுபிடிப்பதற்கே இந்த விவரம் திரட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இத்திட்டத்தை விரிவுபடுத்தும் வகையில் வாகரை, ஓட்டமாவடிப் பகுதிகளிலும் குடும்ப விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

## கிழக்கில் படை முகாம்கள் பலப்படுத்தப்படுகின்றன

மட்டக்களப்பு மாவட்டத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் இடம் பெற்ற இரு சம்பவங்களில் இரண்டு பொலிஸாரும் ஓர் அதிரடிப் படை வீரரும் அண்மையில் பலியாகினர்.

மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லைக் கிராமமான முத்துக்கல்லில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டனர்.

அக்கரைப்பற்றில் இடம்பெற்ற சம்பவத்தில் அதிரடிப்படைவீரர் ஒருவர் உயிரிழந்தார்.

விடுதலைப்புலிகளின் போர்நிறுத்தப் பிரகடனம் அறிவிக்கப்பட்டபின்பு கிழக்கில் இடம்பெற்ற முதல் சம்பவங்கள் இவை ஆகும்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின் படைமுகாம்கள் யாவும் பலப்படுத்தப் பட்டுவருகின்றன.

புதிய காவலரண்கள் அமைக்கப் படுகின்றன. முட்கம்பி வேலிகளும் திருத்தி அமைக்கப்படுகின்றன.

சத்துருக்கொண்டான் படை முகாம் பகுதியில் நிறுத்தப்பட்டுவந்த கடற்படைப் படகுகள் தற்போது பிள்ளையாரடி அதிரடிப்படை முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளன.

மேற்படி முகாமுக்கு அருகாமையில் படகுகளைக் கொண்டுசெல்வதற்காக வாவியில் இருந்து 200 அடி நீளமான கால்வாய் வெட்டப்பட்டுள்ளது.

# மலை உச்சியில் நின்று குழல் ஊதிக்களிப்பு



மலை உச்சியில் நின்று கூக்குரலிட்டாலே விண்ணில் அது எதிரொலிக்கும். மூன்று கலைஞர்கள் மலை உச்சியில் நின்று நீண்ட குழல்களில் இசை எழுப்பி மகிழ்கிறார்கள். இந்தக் குழல்கள் எழுப்பும் இசை எவ்வளவு தூரம் இனிமையாக இருக்கும் என்பதை விவரிக்க முடியுமா?



# உறுமீன் வருமளவும் வாடியிருந்தவர்கள்

"ஓடு மீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு" என்று ஒரு பழமொழி உண்டு. இங்கே அண்ணன் போட்ட தூண்டிலில் உறுமீன் ஒன்று சிக்கிவிட்டதால் தங்கைக்கு ஏக குதூகலம். ஆனால் தூண்டிலைப் போட்டு விட்டு இவர்கள் எவ்வளவு நேரம் காத்திருந்தார்களோ?



# குதிரை பூட்டிய ஏர்மூலம் உழுது விதைக்க ஆசை

மாடுகளை ஏரில் பூட்டி உழுது விதைப்பதில் விவசாயிகளுக்குள்ள ஆர்வம் தற்போது குன்றி வருகிறது. உழவு இயந்திரங்களின் ஆக்கிரமிப்பினால் எழுந்த சோம்பேறித்தனமோ இது? ஆனால் நவீன வசதிகளுள்ள டென்மார்க் போன்ற நாடுகளின் பணக்கார விவசாயிகள் குதிரை பூட்டிய ஏர் மூலம் உழுது விதைப்பதில் ஆசை கொண்டிருக்கிறார்கள்.

# பிங்பொங் விளையாட கால்கள் தேவையில்லை

"டேபிள் டென்னிஸ்" விளையாட்டுக்கு பிங்பொங் என்று பெயரிட்டு சீனர்கள் பெருமைப்படுத்துகிறார்கள். அது மாத்திரமல்ல உலகில் பிங்பொங் விளையாட்டில் சீனர்களே கொடிகட்டிப் பறக்கிறார்கள்.

பிங்பொங் விளையாட்டுக்கு ஒரு சிறிய அறையே போதுமானது. அதே வேளையில் பிங்பொங் விளையாட கால்களே தேவையில்லை. கால் ஊனமுற்ற இந்த நங்கையர் நால்வரும் தங்களுடைய தள்ளு வண்டிகளில் அமர்ந்திருந்தே பந்தாடி மகிழ்கிறார்கள்.



# ஒளிந்திருக்கும் முகம் எது?



பெப்ரவரி 25 சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் முரளியுடையது. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதியனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு:-

01. கண்மணி கோபால், ஆரையம்பதி-02
02. து.துளசிதாசன், திருகோணமலை.
03. ஏ.ஆர்.அஜ்ஹர், எருக்கலம்பிட்டி.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதியனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (04-03-2001) மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்துக்குரிய நடிகை யார்?

சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்தவாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? ராஜகுமாரி என்று தன்னைக் கூறிக்கொள்ளக் கூடிய மலர் நடிகை. மீதமுள்ள கடனை அளித்துவிட்டால் டைரக்டரைக் கலியாணம் செய்து விடலாம்.



இந்த முகத்துக்குரிய நடிகையைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதிப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

"சுடர் ஒளி"
36/2, பிரெட்றிக்கா வீதி,
கொழும்பு-06.



அமைதியும் சமாதானமும் ஏற்பட்டால் தான் வாழ்வில் ஒரு பிடிப்பு அனைவருக்கும் ஏற்படும். அமைதியின் சின்னமாக இருக்கும் பறவை புறா ஆகும். ஆனால் புறாவின் சதையை ருசிப்பதில் காட்டும் ஆர்வத்தை மக்கள் சமாதானத்தின் மீது காட்டுவதில்லை. ஆயினும் "அமைதிப் புறாக்களே அருகில் வாருங்கள்" என்று அழைப்பு விடுக்கும் இந்தப் பெண் அபூர்வமானவள்தான்.

# அமைதிப் புறாக்களே அருகில் வாருங்கள்

# மலையகத்தில் எதிரொலிக்கும் ஒற்றுமை உணர்வலைகள்!



அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் சத்தியாக்கிரக மேடையில் "சுடர்ஒளி"ப் பத்திரிகையுடன்.( அருகில் ஊவா மாகாணசபை அமைச்சர் சச்சிதானந்தன், மத்திய மாகாணசபை உபதலைவர் மதியுகராஜா, நுவரேலியா மாவட்ட எம்.பி ஜெகதீஸ்வரன் ஆகியோர் காணப்படுகின்றனர்.



சத்தியாக்கிரக மேடையில் வன்னிமாவட்ட இ.தொ.கா அமைப்பாளர் ராஜா திவ்வியராஜன் மற்றும் ஜெகதீஸ்வரன் எம்.பியும் மற்றும் சிலரும்.



தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் தொழிற்சங்கத் தலைவர்கள் ஐக்கிய உடன்பாட்டுக்கு வந்த பின் எடுக்கப்பட்ட படம். படத்தில் இ.தொ.கா நிதிச்செயலாளர் முத்து சிவலிங்கம் எம்.பி, மலையக மக்கள் முன்னணி தலைவர் பெ.சந்திரசேகரன் எம்.பி இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எம். எஸ். செல்லச்சாமி எம்.பி மலையக மக்கள் முன்னணி செயலாளர்நாயகம் எம். சிவலிங்கம் ஆகியோரும் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும்.



சத்தியாக்கிரக மேடையில் மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் படம் வைக்கப்பட்டது. அவர் வாழ்ந்த காலத்தில் பயன்படுத்திய கதிரை மேடைக்கு கொண்டு வரப்பட்டு அந்தக் கதிரையில் படம் வைக்கப்பட்டு மாலையால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.



சத்தியாக்கிரக மேடையில் தொழிற்சங்கத் தலைவர்களுடன் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான்.



## முருங்கனில் சமாதானப் பேரணி



போர் வேண்டாம் சமாதானம் மலரட்டும் என்பதை வலியுறுத்தி அண்மையில் முருங்கனில் சமாதானப் பேரணி நடத்தப்பட்டது. அங்குள்ள கிறிஸ்து அரசர் ஆலய முன்றலில் காலை 9 மணியளவில் ஒன்று கூடிய கிறிஸ்தவ இந்து மக்கள் சமய வேறுபாடின்றி வழிபாடு நடத்தினர். சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இவ்வழிபாட்டைத் தொடர்ந்து மக்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு கடும் வெயிலையும் பொருட்படுத்தாது ஊர்வலமாகச் சென்றனர். மூவாயிரத்துக்கு மேற்பட்டோர் ஊர்வலத்தில் பங்குபற்றினர்.

அங்கு பிரஜைகள் குழு இணைத் தலைவர் அருட் திரு தேவசகாயம் பிள்ளை, செயலாளர் ஞானசேகரம், சமாதான நீதிவான்களான மரியாம்பிள்ளை, ஜேசுதாஸன் ஆகியோரிடம் ஜனாதிபதிக்கான மகஜரைத் சமர்ப்பித்தனர். இம் மகஜர் பின்னர் நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் பத்திநாதனிடம் கையளிக்கப்பட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

முருங்கன் ஆலயத்தில் திரண்டிருந்த மக்கள் மத்தியில் குருவானவர் உரையாற்றுவதையும் பின்னர் ஆலயத்தில் இருந்து மக்கள் பதாகைகள் ஏந்தி ஊர்வலமாகச் செல்வதையும் படங்களில் காண்க.

எம்.அமிர்தம்







# பித்தன் பதில்கள்



சுபத்திரா,
யாழ்.நகர்.

கே : எதிலும் மௌனமாக இருப்பது சூப்பர்ஸ்டார் ரஜினி காந்த்தின் கொள்கையா? பித்தா..! நீர் என்ன நினைக்கிறீர்?

ப : யானைக்குத் தன் பலம் தெரியாது என்று கூறுவார்கள். அதே மாதிரித் தான் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்தும். அவரது கொள்கையே அதுதான். இவ்வளவு நடந்தும் இலங்கைத் தமிழர் விடயத்தில் அவர் மூச்சுவிடவில்லையே...!

என்.ஆர்.கோவிந்தசாமி, மட்டக்குளி.

கே : சில திரைப்படங்களைப் பிள்ளைகளுடன் பார்க்க முடிவதில்லையே?

ப : திரைப்படம் மட்டும்தானா? ஒரு தரம் தியேட்டருக்குள் கண்களைச் சுழலவிடும். திரையில் ஓடுவதை விட திறமான படம் ஓடும்.

ஜெயசித்திரா, கண்டி.

கே : எங்கள் ஆசிரியர் எந்த நேரத்திலும் சந்தேகங்களைக் கேட்கலாம் என்கிறாரே?

ப : அதற்காகப் பரீட்சை மண்டபத்தில் கேட்டு விடாதீர்!

கே.மாலினி, நல்லூர்.

கே : காதல் திருமணம் புரிந்தவர்களும் விவாகரத்துச் செய்துகொள்வது ஏன்?

ப : காதல் வாழ்வில் மோதல் இடம்பெறாது என்று யார் சொன்னது?

எஸ்.பாலு, தெஹிவளை.

கே : 'ஆடுற மாட்டை ஆடிக் கறக்கணும் பாடுற மாட்டை பாடிக்கறக்கணும்' என்பதன் அர்த்தம் என்ன பித்தனே?

ப : மாடு அவிழ்த்த பின்பு அந்த அர்த்தம் விளங்கும்.

எஸ்.நடேசபிள்ளை,கல்முனை.

கே : பயங்கரவாத இயக்கப்பட்டியலில் புலிகளை பிரிட்டன் சேர்ப்பதற்கு இந்தியா பேருதவி செய்ததாக லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகிறாரே?

ப : இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் கொள்கை திடீர் என மாறியபோது, மத்திய அரசின் கைகளைக் கட்டிப்போட விரும்ப வில்லை என்று கருணாநிதி கூறினார். அதனால் நிலைமை பின்பு மாறலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தொடரும் சம்பவங்களைப் பார்த்தால் இந்தியாவை நம்பலாமா? என்ற கேள்வி எழத்தான் செய்கிறது

எம்.சந்தானமூர்த்தி, நுவரெலியா.

கே : பித்தனே... அம்பிகா - ராதா சகோதரிகள் அ.தி.மு.க.வில் சேர்ந்துவிட்டார்களாமே...!என்ன காரணம்?

ப : ஆமாம்...! மார்க்கெட் போய்விட்ட இந்த நேரத்தில் அம்மா கொடுக்கும் சலுகைகள் அவர்களுக்குக் கரும்புதானே...!

ப.த.மு.நியாஸ், சிராஜ் நகர்.

கே : பித்தனே...! அடுத்த சூப்பர் ஸ்டார் அஜித்தா? அல்லது விஜய்யா?

ப : விஜய்.

றோஸ் மஞ்சுளா, குருநகர்.

கே : காதலில் தோல்வி அடைந்தவர் தாடி வளர்ப்பது ஏன்?




ப : லேடி செய்தது துரோகம் என்பதை வெளிக்காட்டத்தான் தாடி!

பி.காயித்திரி, வெள்ளவத்தை.

கே : டாக்டர்களையும் வாகனச் சாரதிகளையும் ஒப்பிட முடியுமா?

ப : இருவரும் முக்திக்கு வழி



காட்டுபவர்கள்.

எம்.எச்.எஸ்.சிபான்,பசறை.

கே : மரம்விட்டு மரம் தாவும் மந்திகளைப் போன்று மனம் விட்டு மனம் தாவும் பெண்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப : அவர்கள் நிலையற்ற மனம் கொண்டவர்கள்.அவர்களைப்பற்றி நினைப்பதைவிட நினைக்காமலிருப்பதே மேல்!

த.சோபனா, யாழ்ப்பாணம்.

கே : பித்தனே! சினிமா நடிகைகள் ஏன் தமது அங்கங்களை வெளிக்காட்டும் குறைந்த ஆடைகளை அணிகிறார்கள்?

ப : எல்லாம் காசுக்காகத்தான்.

எம்.எம்.அபூபக்கர், கொட்டாஞ்சேனை.

கே : தலிபான் ஆட்சியாளர்களினால் அழிக்கப்பட உள்ள புத்தர் சிலைகளை இந்தியாவுக்கு எடுத்துவந்து பாதுகாக்க தயாராக இருப்பதாக இந்தியா கூறுகிறதே?

ப : இலங்கைக்கு வக்காலத்து வாங்கும் இன்னொரு நடவடிக்கை இது.

ஊ.ரவி, முள்ளியவளை.

கே : விவேக்கின் நகைச்சுவையை கலைவாணருடைய நகைச்சுவையுடன் ஒப்பிடுகிறார்களே! பொருந்துமா?

ப : பொருந்துதே...! மூடநம்பிக்கைகளைச் சாடுவதில் வெளுத்து வாங்குகிறார் விவேக். பழம் பெருமை பேசும் பழசுகள் கூட ரசித்துச் சிரிக்கின்றன. ஆனால் கடவுளை விவேக் இப்படி நக்கலடிப்பது சிரிக்க வைத்தாலும் பலருக்கு மனதை உறுத்துகிறதே!

ராஜ்குமார், அச்சுவேலி.

கே : யாழ்ப்பாணத்துக்கான விமானக் கட்டணத்தைக் குறைக்கலாம்தானே?

ப : ஏவுகணைக்குப் பயந்து உயர உயரப் பறக்க வேண்டி இருப்பதால் உயர்ந்த கட்டணம். தாழப் பறக்கக் கூடிய காலம் வரும்போது கட்டணம் குறையலாம்.

ஆர்.பூபாலன், மருதானை.

கே : இக்கால இளைஞர்கள் ஏன் பெற்றோரை விழுந்து வணங்குவதில்லை?

ப : உடைதான் காரணம். மினி



ஸ்கேட்டுடனும் லோங்ஸுடனும் விழுந்து வணங்க முடியுமா?

ராதிகா வேலாயுதம், கண்டி.

கே : பித்தனே அஜித் - பிரசாந் பனிப்போர் தொடர்கிறதாமே?

ப : ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

புஷ்பவதனி, நல்லூர்.

கே : ரியூட்டரி வாசல்களில் இளைஞர்கள் கூடுவது ஏன்?

ப : மலர்த் தோட்டமும் வண்டுக்கூட்டமும் தொடர்புடையவைதானே?

லதா, கோப்பாய்.

கே : பித்தனே மரபுக் கவிதைகளுக்கும் புதுக் கவிதைகளுக்கும் சம்பந்தம் உண்டா?

ப : மாமியாருக்கும் மருமகளுக்கும் உள்ள சம்பந்தம் போன்றது.

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் (நேரடி ஒளிபரப்பு) குட்டிச் சுட்டி |
| 11.30-12.00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | பொலிஸ் டயரி | |
| 12.30-13.00 | | | | | | ஸ்டார் சமையல் | இசைக்கோலம் |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | வசந்த நிலா |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | அரட்டை அரங்கம் | ஸ்டார் ஷோ |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | காற்றாய் வருவேன் | கேள்வியின் நாயகனே | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாவித்திரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | கதைநேரம் | தித்திக்கும் ஓசை | சத்யா | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | நிம்மதி உங்கள்... | ஜன்னல் |

# தடைகள் புலிகளை பலவீனப் படுத்துமா?

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பிரிட்டனில் தடை செய்வதற்கு விதந்துரைக்கப்பட்டுள்ள 21 அமைப்புக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் ஒன்று.

இந்தப் பட்டியல் கடந்த 28 ஆம் திகதி பிரிட்டிஷ் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜாக் ஸ்ரோவினால் பிரிட்டிஷ் நாடாளுமன்றில் வெளியிடப்பட்டது.

ஆனாலும் நாடாளுமன்றிலும் பிரபுக்கள் அவையிலும் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே இந்த அமைப்புக்கள் மீதான தடை அமுல்படுத்தப்படும்.

அது மட்டுமல்ல, இந்த அமைப்புக்கள் தம் மீதான தடையை எதிர்த்துத் தமது சார்பு வாதங்களை உள்நாட்டு அமைச்சரின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கலாம். அவை அவரால் நிராகரிக்கப்படும் பட்சத்தில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யலாம். பிரிட்டிஷ் உள்நாட்டு அமைச்சர் ஜாக் ஸ்ரோ இதனைத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் உள்நாட்டுச் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றுக்குப் பாதகமான முறையில் புலிகள் நடந்து கொள்ளவில்லை. எனினும் "சர்வதேச பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்தின்" பிரதான சிற்பிகளில் பிரிட்டனும்

> "ஏற்கனவே இந்தியா, இலங்கை, அமெரிக்கா, மலேசியா ஆகிய நாடுகள் விதித்த தடை, புலிகளின் தாக்குதல் திறனைக் குறைக்கவில்லை"

ஒன்று. இதன் அடிப்படையிலேயே பிரிட்டன் 21 அமைப்புக்களைத் தனது நாட்டில் தடை செய்யச் சிபாரிசு செய்துள்ளது.

இலங்கையின் தென் பகுதியில் – குறிப்பாகத் தலைநகர் கொழும்பில் – புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள், தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், முக்கியமான அரசியல் வாதிகள் மீதான தாக்குதல்கள், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீதான கொலை முயற்சி ஆகியவையே பிரிட்டன் தனது நாட்டில் புலிகளைத் தடை செய்வதற்கு முக்கிய காரணங்கள் என்று நம்பப்படுகிறது.

இதனை பிரிட்டிஷ் உள்நாட்டுப் பிரதி ராஜாங்க அமைச்சர் சார்ள்ஸ் கிளார்க் தெளிவு படுத்தி உள்ளார்.

"தனிநாடு கோரிப் போராடுவதற்காக புலிகள் தடை செய்யப்படவில்லை. அவர்களின் நடவடிக்கைகளின் அடிப்படையிலேயே எமது அரசு இந்த முடிவுக்கு வந்தது" என்று கூறினார் சார்ள்ஸ் கிளார்க்.

"புலிகள் நிதி சேகரிக்கும் நாடுகளில் பிரிட்டன் முக்கியமானது" எனவும் அவர் கூறியுள்ளார்.

பிரிட்டனில் புலிகள் மீது விதிக்கப்படும் தடை, புலிகளை இராணுவ ரீதியில் பலவீனமாக்குமா? என்பதே இன்று இராணுவ – அரசியல் மட்டங்களில் எழுந்துள்ள முக்கியமான கேள்வி.

பெரும்பான்மை இனத்தவர்களில் பலர் "புலிகள் மீதான தடை அவர்களை நேரடியாகவும், சர்வதேச பிரசார ரீதியாகவும், நிதி சேகரிப்பு நடவடிக்கைகளிலும் பலவீனப்படுத்தும் என்கின்றனர். "காலப்போக்கில் அது அவர்களை யுத்தகளத்திலும் பலவீனப் படுத்திவிடும்" என்று நம்புகின்றனர்.

அவர்கள் நம்புவது போன்று பிரிட்டிஷ் தடை மூலம் புலிகள் பலவீனப்படுத்தப்படுவார்களா? புலிகளின் நிதி சேகரிப்பு நடவடிக்கை சீர்குலையுமா? இதனால் புலிகளின் போர்த்திறன் பாதிக்கப்படுமா?

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியை விடுதலைப் புலிகள் கொன்றனர் என்று கூறி அண்டை நாடான இந்தியா விடுதலைப் புலிகளைத் தனது நாட்டில் தடை செய்தது.

புலிகளை இந்தியா தடை செய்து விட்டதால் அவர்கள் தமது தாக்குதல்களை நிறுத்திவிட்டார்களா? அல்லது இராணுவ ரீதியில் அவர்கள் பலமிழந்து விட்டார்களா?

முற்றிலும் மாறுபட்ட வகையில் தம்மைப் பலம் மிக்க ஒரு மரபு வழி இராணுவமாக புலிகள் மாற்றி அமைத்துள்ளனர். பலம் வாய்ந்த ஓர் ஆயுத அமைப்பாக புலிகள் உருவெடுத்துள்ளனர். மொத்தத்தில் இந்தியா புலிகள் மீது விதித்த தடை அவர்களை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை.

இதேபோன்று, அமெரிக்கா தனது நாட்டில் புலிகளின் நடவடிக்கைகளைத் தடை செய்தது. அது புலிகளைப் பலவீனப்படுத்தி விட்டதா? சர்வதேச ரீதியில் அவர்களது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி விட்டதா? அதன் பின்பும் நிதி திரட்டலில் புலிகள் ஈடுபடவில்லையா?

மலேசியத்தடையும் புலிகளைப் பாதிக்கவில்லை. உண்மையிலேயே புலிகளது சர்வதேச பிரசார



வன்னியில் நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்.

வலைப்பின்னல் (International Propaganda Network) இலங்கை அரசாங்கத்தைவிடப் பலம் மிக்கது.

புலிகள் தமது சர்வதேச தலைமைச் செயலகத்தை எந்த நாட்டில் இனி அமைக்கப் போகிறார்கள் என்பதை




அறிய இலங்கைப் புலனாய்வுத் துறையினர் அங்கலாய்க்கின்றனர்.

அது தென்னாபிரிக்காவில் அமையலாம் எனச் சிலரும் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் அமையலாம் என வேறு சிலரும் சுவீடனில் அமையலாம் என மற்றும் சிலரும் ஊகங்களை வெளியிடுகின்றனர்.

புலிகள் தமது சர்வதேச தலைமைச் செயலகத்தை அமைக்கப் பல இடங்கள் இருக்கின்றன என்பதையே இந்த ஊகங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

உள்நாட்டுக் களநிலைவரங்களை அவதானித்தால் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கும் பிரதான மார்க்கமாக இலங்கை இராணுவமே விளங்குகிறது.

1997 ஜூன் மாத நடுப்பகுதியில் சிம்பாப்வே நாட்டிலிருந்து 32 ஆயிரத்து 400 மோட்டார் ஷெல்களுடன் புறப்பட்ட 'ஸ்ரில்லப் விக்டோரியா' என்ற கப்பலை விடுதலைப்புலிகள் கடத்தினர். இவற்றில் இருந்த மோட்டார் ஷெல்கள் 81 மி.மீற்றர் பருமனுடையவை.

இலங்கை அரசுப்படைகளிடம் புலிகள் பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றிய முதல் நிகழ்வு இது தான்:

அதன் பின்னர், வவுனியா – யாழ்ப்பாணம் பிரதான விநியோகப் பாதை ஒன்றைத் திறக்கப் படையினர் 1997 மே 13 இல் ஆரம்பித்து 19 மாதங்கள் தொடர்ந்து நடத்திய இராணுவ நடவடிக்கை 'ஜயசிக்குறு.'

இந்த இராணுவ நடவடிக்கையின்போது புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுத தளவாடங்கள் முக்கிய இடம்பெறுகின்றன. இந்தக் காலப்பகுதியில் 'செய் அல்லது செத்து மடி' என்ற பெயரில் ஆறு தடவைகள் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின்போதும் பெருமளவு இராணுவ தளவாடங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

இவற்றில் கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் முக்கியமானவை.

அதன் பின்னர் வன்னி மண்ணிலிருந்து இராணுவத்தை முற்றாக வெளியேற்றிய போது 1999 நவம்பர் மாதம் பலகோடி அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர். அவற்றில் 152 மில்லிமீற்றர், 122 மில்லிமீற்றர் நீண்டதூர ஆட்லறிப் பீரங்கிகளும் அடங்கும்.

அதன் பின்னர் இறுதியாக இயக்கச்சி, பளை, ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதல்களின் போது பெருமளவு ஆயுத தளவாடங்கள் புலிகளால் கைப்பற்றப் பட்டன.

சில மாதங்களுக்கு முன் திருகோணமலைக் கடற்படைத்தளம் மீது புலிகள் நடத்திய தாக்குதலை முறியடிக்க எம்.ஐ – 24 ரக ஹெலிகொப்டர் உதவிக்கு அனுப்பப்பட்டது. அதனைப் புலிகள் மாபிள் பீச் பகுதிக்கு மேலாக வைத்துச் சுட்டு வீழ்த்தினர்.

இதனைச் சுடுவதற்கு இலகுவாகக் காவிச் செல்லக்கூடிய குறுந்தூர விமான எதிர்ப்பு ஏவுகணையான எஸ்.எம் – 14 ஏவுகணையையே புலிகள் பயன்படுத்தி இருந்தனர்.

இந்த ஆயுதங்கள் புலிகளால் சர்வதேச சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டு கடல் மார்க்கமாகக் கொண்டு வரப்பட்டவை.

ஆகவே, பிரிட்டன் புலிகள் மீது விதிக்கும் தடை அவர்களைப் போர் முனையில் பலவீனப்படுத்தும் என ஊகிப்பது தவறானது ஆகும்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட, பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

"புலிகள் அண்மைக்காலச் சண்டைகளின் போது பெருமளவு மோட்டார் ஷெல்களையும் ஆர்.பி.ஜி குண்டுகளையும் பயன்படுத்தியுள்ளனர். சில சமயங்களில் நிமிடத்துக்கு பத்துக்கும் மேற்பட்ட, ஆட்லறி மோட்டார் ஷெல்கள் வீழ்ந்து வெடித்திருப்பதாகவும் சிலவேளைகளில் இவை இடைவிடாது மணிக்கணக்கில் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவை நாம் புலிகளிடம் இழந்த வெடி பொருள்களை விடப் பலமடங்கு அதிகமானவை. "புலிகள் தாம் வெளிநாடுகளில் திரட்டும் நிதி மூலம் சர்வதேச சந்தைகளிலிருந்தே இவற்றைக் கொள்வனவு செய்கின்றனர்.

இப்படி அவர் கூறினார்.

தற்போதைய நிலையில் சமாதான முயற்சிகள் தொடரலாம் அல்லது தொடராது விடலாம். ஆனால் புலிகளுக்கு எதிரான பாரிய தாக்குதல்கள் வெகுவிரைவில் மீளவும் ஆரம்பிக்கப்படும் சாத்தியக்கூறுகளே யுத்த களத்தில் அதிகம் காணப்படுகின்றன. இதைக் களமுனை ஏற்பாடுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

மனோதத்துவ வைத்தியம்
GENERAL PSYHO THERAPHY
Dr. P.ஆறுமுகம் அவர்களை
கொழும்பில் மார்ச் 18 - 25 திகதிகளில்
DR.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bnag Band Building, Entrance Bankshall Street.,
No.10, Reclamation Road, Colombo-11.
T.P 074-715547, 074-715546, செல்டெல் - 072 664867
கல்முனையில் ஏப்ரல் 3-4 திகதிகளில்
T.M.M. பாமசி கல்முனை. T.P: 067-29329
வவுனியாவில் மார்ச் 10-11 திகதிகளில்
Vanni Inn, T.P: 072-664867
கடிதத் தொடர்பு
Resident Telephone:- 065-24019
Dr.P. Arumugm,
No.51/5, Koolavady Road, Batticalo, Sri Lanka.

# ஆப்கன் புத்தர் சிலை உடைப்பில் இந்து அமைப்புக்கள் அசட்டை ஏன்?

தலிபானின் கட்டுப்பாட்டில் உள்ள ஆப்கானிஸ்தானில் புராதன பௌத்த சின்னங்களும் கலைப் பொக்கிஷங்களும் அழிக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாமியானிலும் மற்றும் சில மாகாணங்களிலும் அமைந்திருந்த மிகத் தொன்மையானதும் உயர்ந்ததுமான புத்தர் சிலைகள் தகர்க்கப்பட்டுவிட்டதாகக் கூட செய்திகள் வெளியாகி உள்ளன.

உருவ வழிபாடு இஸ்லாத்துக்கு விரோதமானது எனக்கூறி கடும்போக்கு இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பான தலிபானின் அதி உயர் தலைவர் முல்லா முஹமட் ஒமர் இந்த சிலைகளைத் தகர்த்தழிக்குமாறு உத்தரவிட்டிருக்கிறார்.

இனத்தின் பேரால் ஏனைய இனங்களுக்கும், மதத்தின் பேரால் ஏனைய மதங்களுக்கும் இழைக்கப்படும் அநீதிகளை நாகரிக சமூகம் வெறுமனே கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது.

தொல்லியல் சான்றுகளும் புராதன சின்னங்களும் வரலாற்றைத் திரிபுபடுத்தவும் பயன்படுத்துகின்றன என்றாலும் மதம், இனம் இவற்றுக்கு அப்பால் உலக வரலாற்றை - மனித குல வரலாற்றை - எடுத்துக்காட்டும் சான்றுகள் என்ற நோக்குடனாவது புராதன சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அந்த வகையில் தலிபானின் நடவடிக்கை கண்டிக்கப்பட வேண்டியதே.

தலிபானின் இந்த நடவடிக்கைக்கு எதிராக சர்வதேச அளவில் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. முஸ்லிம்களின் பாபர் மசூதியை தகர்த்தழித்த இந்திய அரசும், இந்துக்களின் பழைய ஆலயங்களைத் துவசமாக்கிய இலங்கை அரசும் கூட தலிபானின் நடவடிக்கைக்கு எதிராக ஓங்கிக் குரல் கொடுத்திருக்கின்றன.

இவற்றுக்கு அப்பால் இலங்கையில் ஏனைய மதங்களின் சார்பில் - சிறுபான்மை இன சமூகங்களின் தரப்பில் இருந்து தலிபான்களின் நடவடிக்கைக்குக் கண்டனம் வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை.

அரசில் அங்கம் வகிக்கின்ற காரணத்தால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் இது விடயத்தில் கண்துடைப்பது போன்று கண்டனம் தெரிவித்திருக்கின்றனர்.

ஆனால் நாட்டில் உள்ள இந்து மற்றும் கிறிஸ்தவ மதங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தவொரு நிறுவனமோ அமைப்போ இதுவரை தலிபானின் நடவடிக்கைக்கு கடுமையான எதிர்ப்பை அல்லது அது தொடர்பான கருத்தை வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள முக்கிய இந்து அமைப்புகளும், பீடங்களும்கூட இது விடயத்தில் இன்னமும் வாய்திறக்கவே இல்லை.

தலிபானின் நடவடிக்கையை இப்போது விமர்சிக்கத் தவறுவது, ஸ்ரீலங்கா ஒரு பௌத்த சிங்கள நாடு எனக்கூறிக் கொண்டு ஏனைய சிறுபான்மையினங்கள் சார்ந்த மதங்களை வஞ்சிக்கும் பௌத்த பேரினவாதிகளின் போக்கை ஆதரிப்பது போன்று அமைந்துவிடும் அல்லவா?

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்து நாகரிக கலைப் பொக்கிஷங்கள் பல ஆப்கானிஸ்தான் மண்ணில் உள்ளன. பௌத்த பொக்கிஷங்களைத் தொடர்ந்து இந்து சின்னங்கள் மீதும் தலிபானின் கவனம் திரும்பக்கூடும் என்று ஏற்கனவே செய்திகள் வெளியாகி உள்ளன.

அந்த நிலைமை ஏற்பட்டால்தான் இந்து அமைப்புகள் விழிக்குமா?

பௌத்த சின்னங்கள் தகர்க்கப்படும்போது மௌனமாக இருந்துவிட்டு இந்து சின்னங்கள் அழிக்கப்படும்போதுதான் இந்து அமைப்புகள் கூக்குரலிடப்போகின்றனவா?

தமிழ்த் தேசிய உணர்வு என்பது பௌத்த மதத்துக்கோ அன்றி பிற மதங்களுக்கோ எதிரானது அல்ல. அவ்வாறு எண்ணிவிட்டால் அது முட்டாள்தனமான எண்ணமாகவே இருக்கும். இதைக் கவனத்தில் கொள்வோம்.




## மாணவர் நிகழ்வுகள்

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் நடவடிக்கைகள் அண்மைக்காலமாக படையினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினரால் உற்றுநோக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

மாணவர்களின் நடவடிக்கைகள், செயற்பாடுகள், கூட்டங்கள் மட்டுமன்றி மாணவர்களால் நடத்தப்படும் கலை நிகழ்வுகள் மீதும் படைத்தரப்பு 'கண்' வைத்திருப்பதை அறிய முடிகிறது.

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம் ஆதரவற்றவர்களுக்கு கைகொடுத்து உதவும் நிதி உதவித் திட்டத்துக்காக நாடக ஆற்றுகைகளை குடாநாட்டின் பல பகுதிகளிலும் நடத்தி வருகிறது.

அந்த வகையில் 'உயிர் விசை' என்னும் நாடக ஆற்றுகை பல இடங்களில் மேடையேற்றப்பட்டு வருகிறது.

கடந்த வாரம் இந்த ஆற்றுகை நெல்லியடிப் பகுதியில் உள்ள திரையரங்கு ஒன்றில் இடம்பெற இருந்த சமயம் படையினரும் புலனாய்வுப் பிரிவினரும் முன்கூட்டியே வந்து அந்தப் பகுதியை முற்றுகையிட்டு விட்டனராம்.

ஆற்றுகையில் அரசியல்கட்சி ஒன்றைக் கொச்சைப்படுத்தும் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்பட்டதை அடுத்தே புலனாய்வாளர்கள் அங்கு வந்து முற்றுகையிட்டதாகத் தெரிகிறது.

ஆற்றுகையில் பயன்படுத்துவதற்காக மாணவர்கள் வைத்திருந்த சில கொடிகளை பரிசோதித்த சீருடையினர் மாணவர்கள் தேசியக் கொடியை அவமதிப்பதாகவும் எனவே ஆற்றுகையை நடத்த அனுமதி வழங்கமுடியாது என்றும் கூறி அந்தத் திரையரங்கின் உரிமையாளரை மிரட்டியதாகவும் தெரியவருகிறது.

## இரவு ஊரடங்கு தீவிரம்

குடாநாட்டின் பல பகுதிகளிலும் இரவு நேரத் திருட்டுக்கள் அதிகரித்து வருவதை அடுத்து இரவு ஊரடங்கைப் படையினர் கடுமையாக நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

ஊரடங்கைக் கடுமையாக நடைமுறைப் படுத்துமாறு பிரதேச படை அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இதனையடுத்து ஊரடங்கு நேரம் நெருங்கும் முன்னிரவு வேளையிலும் ஊரடங்கு அமுலில் உள்ள நேரத்திலும் படையினர் வீதி ரோந்துகளை அதிகரித்துள்ளனர். ஊரடங்கு நேரத்தில் நடமாடுவோரின் அடையாள அட்டைகளைப் படையினர் பறிமுதல் செய்துவருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

திருட்டுச் சம்பவங்கள் அதிகம் இடம்பெற்று வந்த நல்லூர் பிரதேசத்தில் கடந்த இருவாரங்களாக இரவுவேளை படையினரின் வீதிச்சோதனைகள் அதிகரித்துள்ளன. பலருடைய அடையாள அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன.

இரவுவேளை அமுல் செய்யப்படும் ஊரடங்குச் சட்டம் திருடர்களின் பாதுகாப்பான நடமாட்டத்துக்கு உதவுகிறதா என எண்ணும் அளவுக்கு இரவு நேரத் திருட்டுக்கள் அதிகரித்து வருகின்றன. இது குறித்து இப்பத்தியில் முன்னரும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

## மீண்டும் புலிகளின் கடிதம்

ஆபாசப் படங்கள் பார்த்தல், படையினருடன் சேர்ந்து வியாபாரம் செய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று அறிவுறுத்தும் கடிதங்கள் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினரால் சிலருக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அச்செழு, புன்னாலைக்கட்டுவன், ஊரெழு பகுதிகளைச் சேர்ந்த சிலருக்கே புலிகளின் அறிவுறுத்தல் கடிதங்கள் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

இந்தப் பகுதிகளில் ஸ்ரீலங்கா படையின் புலனாய்வுப் பிரிவினர் பெரும் எண்ணிக்கையில் பணியில் ஈடுபடுத்தப் பட்டிருக்கின்றனர். பலாலி மற்றும் அச்செழுவில் உள்ள பெரிய படைத் தளங்களைப் பாதுகாப்பதற்காக புலனாய்வாளர்களும், விஷேட படைப் பிரிவினரும் இந்தப் பகுதிகளில் இரவு பகலாகக் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். பொதுமக்களுடன் வியாபாரத் தொடர்புகள் மற்றும் பிற வழிகளில் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களுடன் நெருங்கிப் பழகி த்தகவல்களைச் சேகரிக்கும் நோக்குடன் படையினர் செயற்படுவதை அடுத்தே புலிகள் இப்பிரதேச வாசிகளுக்கு எச்சரிக்கை விடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

## வீடுகளைத் தகர்த்து வீதி

காடுகளை அழித்து வீதி அமைப்பதுண்டு. ஆனால் வீடுகளைத் தகர்த்து வீதி அமைத்திருக்கிறது இராணுவம்.

முழுக்க முழுக்க இராணுவ வலயமாக மாறிவிட்ட வலி.வடக்குப் பகுதியில் இது நடந்திருக்கிறது.

தெல்லிப்பளைச் சந்தியில் இருந்து புற்றுநோய் ஆஸ்பத்திரிப் பகுதி ஊடாக கிழக்காக பெரிய வீதி ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது. இந்த வீதியை அமைப்பதற்காக அங்கு பல வீடுகள் கட்டடங்கள் இருந்த இடம் தெரியாமல் அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன.

கடந்த சிவராத்திரி தினத்தன்று தெல்லிப்பளை ஊடாக கீரிமலைக்குச் சென்ற அடியார்களே இந்தப் புதிய வீதி அமைக்கப்பட்டிருப்பதையும் அதற்காகத் தங்கள் வீடுகள் தகர்க்கப்பட்டிருப்பதையும் முதலில் கண்டுள்ளனர்.

இது குறித்து அந்தப் பகுதி மக்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளனர்.

மக்கள் குடியமர அனுமதிக்கப்படாத இந்தப் பிரதேசத்தில் முழுக்க முழுக்க படைமுகாம்களே உள்ளன. இராணுவ வலயப் பகுதிகளை இலகுவாக இணைக்கவும், இராணுவ வாகனப் போக்குவரத்துக்களை இலகுவாக்கும் நோக்குடனுமே இந்தப் புதிய பாதை அமைக்கப்படுகிறது.

—வலிகாமத்தான்.

# விண்வெளியில் மனிதன் சுற்றுலா! செவ்வாயில் மனிதன் குடியேற்றம்!!

விண்வெளிக்கு மனிதன் சுற்றுலா செல்லும் ஒரு காலம் வரலாம். சந்திரனில் காலடி வைத்த உலகின் இரண்டாவது மனிதரான அமெரிக்க விண்வெளிவீரர் எட்வின் அல்ட்ரின் இந்த நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்.

சமீபத்தில் இலங்கைக்கு வந்திருந்த அவர் "சந்திரனுக்குத் தாங்கள் மேற்கொண்ட பயணம் கோடிக்கணக்கான பணத்தை வீணாக்கும் ஒரு செயல் அல்ல" என்றார். மனித குலத்தின் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு பரிசோதனை அது எனவும் சொன்னார்.

1969 ஆம் ஆண்டு ஜூலை 21ஆந் திகதி சந்திரனில் மனிதன் முதன் முதலாகத் தரை இறங்கினான். அந்த அற்புத நிகழ்ச்சியை அறிந்து, கண்டு உலகமே வியந்தது. நீல் ஆம்ஸ்ட்ரோங், மைக்கேல் கொலின்ஸ், எட்வின் அல்ட்ரின் ஆகிய மூன்று அமெரிக்க விண்வெளி வீரர்களும் அப்போலோ-11 என்னும் விண்வெளிக் கப்பலில் அந்தப் பயணத்தை மேற்கொண்டனர். ஆம்ஸ்ட்ரோங் முதன்முதலில் சந்திரனின் தரையில் கால் பதித்த வீரராவார்.

மனிதன் சந்திரனில் கால்பதித்து இன்று 42 ஆண்டுகள் கழிந்து விட்ட நிலையில் விண்வெளிக்கு உல்லாசப் பயணிகளை அழைத்துச் செல்லும் திட்டம் குறித்து ஆராயப்பட்டு வருகிறது. விண்வெளிவீரர் அல்ட்ரினுக்கு இப்பொழுது 71வயது. இலாப நோக்கமற்ற விண்வெளி ஆராய்ச்சி மன்றக் கல்லூரி ஒன்றை அவர் நடத்தி வருகிறார்.

விண்வெளிக்கு முதலாவது உல்லாசப் பயணியை அழைத்துச் செல்வதை நோக்கமாகக் கொண்ட ஆராய்ச்சியை இம்மன்றக் கல்லூரி மேற்கொண்டு வருகிறது. விமானத்திலோ, கப்பலிலோ பணம் செலுத்தி பயணம் செல்வதைப் போல இந்த விண்வெளிப் பயணத்துக்கும் பணம் அறவிடப்படும்.

இவ்வாறான ஒரு பயணத்துக்குப் போட்டாபோட்டி இருக்குமல்லவா?

பணக்காரர்களுக்கு மட்டும் இதற்கான வாய்ப்பை வழங்காமல் ஏனையோரு வாய்ப்பைப் பெறக்கூடியதாக ஒரு லொத்தர் முறை நடத்தப்படும் எனவும் அல்ட்ரின் தெரிவித்தார்.

"இந்த புத்தாயிரம் ஆண்டின் முதல் இரு தசாப்தங்களிலும் மனிதனின் விண்வெளிச் சுற்றுலா சாத்தியமாகலாம். இப் பயணத்துக்குச் செலவாகும் பெருந்தொகைப் பணத்தைக் குறைத்துக் கொள்வதற்காக ஒரு தடவை பயன்படுத்திய விண்வெளிக் கப்பலை மீண்டும் புதுப்பித்து பயன்படுத்தும் முறை குறித்து ஆராயப்படுகிறது. மனித இனம் அழிந்து விடாமல் இருக்க ஏனைய கிரகங்களில் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். செவ்வாய் உட்பட ஏனைய கிரகங்களை ஆராய்வதில் குறைந்து வரும் சிரத்தையை இந்த விண்வெளிச் சுற்றுலா தூண்டும். சந்திரனுக்கு மீண்டும் பயணம் செய்வதற்கான சூழ்நிலைகளை அது உருவாக்கும்"

விண்வெளி வீரர் அல்ட்ரின் தனது திட்டம் குறித்து இவ்வாறு விளக்கியுள்ளார்.


கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் சேர் ஆர்தர்சி கிளார்க்கும் எட்வின் அல்ட்ரினும்


விண்வெளியில் மனிதனை சுற்றுலா கூட்டிச் செல்லவும் ஏனைய கிரகங்களில் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படவும் அல்ட்ரின் திட்டமிடக் காரணம் என்ன?

"அண்டவெளியில் சுழலும் பாரிய விண் கற்களால் மனித இனம் ஆபத்தை எதிர்நோக்குகிறது. பூமியை நோக்கி ஏதாவது வந்து விழுந்தால்..... வேறு ஒரு இடத்தில் குடியேற்றம் வேண்டும். பூமி அழிக்கப்பட்டால் வேறு எங்காவது எமக்கு குடியேற்றம் வேண்டும்" என்கிறார் இந்த அமெரிக்க விண்வெளி வீரர் அல்ட்ரின்.

நல்லது, மனிதன் சந்திரனில் காலடி வைத்தான் என்று கூறப்படுவது எல்லாம் கட்டுக்கதை என்று சில சஞ்சிகைகள், பத்திரிகைகள் கூறியிருப்பது குறித்து அல்ட்ரினிடம் வினவப்பட்ட பொழுது, இவ்வாறான கேள்விகளுக்குப் பதிலளிக்க நேரத்தை வீணாக்க தான் விரும்ப வில்லை என்றார்.

-எட்வர்ட்

# மரண விடுதி



எடின்பேர்ஜ் நகரின் ஒரு சேரிப் பகுதி. அதன் எல்லையில் ஒரு விடுதி.

விடுதி வாசலிலிருந்து குதிரை ஒன்று வெளி வருகிறது. அது ஒரு கிழட்டுக் குதிரை. அதன் மீது இருவர். இருவரின் நடுவில் ஒரு தேயிலைப் பெட்டி. பின்னாலிருக்கும் குள்ள ஆசாமியான ஹெயர் பெட்டியை அணைத்துப் பிடித்துக் கொண்டிருக்கிறான்.

குன்றும், குழியுமான குறுகலான பாதையின் ஒரு தொங்கலில் வீதி விளக்கொன்று எரிந்து கொண்டிருக்கிறது. மங்கலான மஞ்சள் வெளிச்சம், ஆந்தையொன்று கூர்ந்து நோக்கிக் கொண்டிருப்பதைப் போன்று திகிலை உண்டு பண்ணுகின்றது.

லடக்! லடக்! லடக்!

மனித சஞ்சாரம் அற்றுப் போய்க் கிடக்கும் அந்த வீதியில், வாயில் நுரை பொங்கி கடைவாயில் கரைந்தொழுக அந்தக் குதிரை இலேசான வேகத்தில் பாய்ந்து ஓடுகிறது.

ஓரிடத்தில்:

''என்னை விடுடா நாயே! என்னை விடுடா கொலைகாரப் பாவியே!''

ஒரு பெண்ணின் அலறல் அமைதியைச் சிதறடிக்கிறது; கேட்பவர் இரத்தத்தை உறையச் செய்கிறது.

குதிரை மிரள்கிறது. அதன் மீதமர்ந்திருந்த இருவரும் தலையைத் தூக்கிப் பார்க்கிறார்கள்.

''ஐயா! குதிரைக்காரர்களே என்னைக் காப்பாற்றுங்கள்.'' உயிரே போவது போல அந்தப் பெண் அலறுகிறாள்.

இருளான ஓரிடத்தில் ஒரு பொலிஸ்காரனிடம் மல்லுக்கட்டிக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் கதறல் அது.

பேர்க் குதிரையிலிருந்து டக்'கென கீழே குதித்தான். பொலிஸ்காரனிடம் ''அவளொரு பிச்சைக்காரி பாவம் விட்டு விடுங்கள்'' என பவ்வியமாகக் கூறினான்.

பொலிஸ்காரன் சபலப் புத்திக்காரன். பிச்சைக்காரி சதைப் பிடிப்பாகவிருந்ததால் ஒரு கை பார்க்கலாம் என்ற அவனுடைய ஆசையில் மண் விழுந்தது. ''அடடா நல்ல சான்ஸ் தவறிப் போயிற்றே'' என சபித்துக் கொண்ட அவன், அந்தப் பெண்ணைப் பார்த்து ''இதோ பார் இந்த சேஷ்டை எல்லாம் இனிக் கூடாது'' என அதட்டிக் கொண்டு நைசாக நழுவிவிட்டான்.

பிச்சைக்காரியின் முகத்தில் பேர்க் இதமாகத் தட்டினான். அதில் காதல் ரசம் பொங்கித் ததும்பியது. ''விஸ்கி வேண்டுமா?'' பேர்க் மென்மையாகக் கேட்டான். அந்தக் கேள்வியில் இழையோடிய மென்மையில் அவள் மயங்கினாள். 'வேண்டும்' என அவள் தலை அசைகிறது.

பேர்க் பிச்சைக்காரியுடன் விடுதி நோக்கி குதூகலத்துடன் நடக்க ஆரம்பித்தான்.

* * *

விடுதியில்:

மங்கலான வெளிச்சத்தில்

பேர்க், ஹெயர், அந்தப் பிச்சைக்காரி மூவருமாக மது அருந்திக் கொண்டிருக்கிறார்கள்.

பேர்க் உயரமானவன். ஹெயர் குள்ளமானவன். உற்சாகமாக நடைபெற்றுக் கொண்டிருந்த மூவருடைய 'பார்ட்டி'யில் 'திடுதிப்'பென ஒரு மாற்றம் ஏற்பட்டது. பேர்க்கும், ஹெயரும் எதிர்பாராத வண்ணம் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள். கட்டிப்பிடித்து உருண்டார்கள். பயந்து போன பிச்சைக்காரி கத்தினாள். இருவருக்குமிடையில் புகுந்து சண்டையை நிறுத்துவதில் ஈடுபட்டாள். அப்பொழுதுதான் அந்தப் பயங்கரம் நிகழ்ந்தது.

பேர்க் ஒரு ஒட்டகச் சிவிங்கியைப் போல பிச்சைக்காரியின் கைகளுக்கூடாகத் தனது நீண்ட கைகளை நுழைத்து, சங்கிலியாகப் பிணைத்துப் பலமாக அழுத்தி, அவளின் கழுத்து எலும்பை நறுக்கென முறித்தான்.

ஆ! ஆ! ஆ!

பிச்சைக்காரியின் வேதனை நிரம்பிய முனகல். மறுபடியும் பேர்க்கின் ஒரு கை, சர்ப்பமென நெளிந்து, வளைந்து அவளின் வாயையும் தலையையும் இறுக்கி அழுத்துகிறது. இரு விரல்கள் நாசித்துவாரங்களுள் மின்னலென ஊடுருவி அவற்றை அடைக்கின்றன.

பிச்சைக்காரியின் மூச்சு அடங்கி விட்டது.

தலையைத் தூக்கிப் பிடித்த பேர்க், கால் விரல்கள் வரை அவளின் உடலை இரண்டாக மடித்து தாவித் தாவி நடு முதுகில் விழுந்தான். முழங்காலால் குத்தினான். இடுப்பெலும்புகள் காய்ந்த விறகுச் சுள்ளிகளைப் போன்று நறுக் நறுக்'கென முறிகின்றன. பின்னர் இரண்டாக மடிந்துவிட்ட உடலில் தலையையும் காலையும் சேர்த்து இறுகக் கட்டி விட்டான்.

ஹெயர் – மேசை ஒன்றின் மீது சம்மணம் இட்டு அமர்ந்து அந்தக் கொடூரக் காட்சியை வெகுவாக ரசித்துக் கொண்டிருந்தான்.

30 வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணின் நிர்வாண சடலத்தை டாக்டர் மேசையில் கிடத்திய போது அங்கு நின்றவர்களில் சார்ள்ஸ், கிறிஸ்ரோபர் என்ற இரு மாணவர்கள். நடு நடுங்கிப் போனார்கள். ''அது டொரத்தி'' என்று கிறிஸ்ரோபர் சார்ள்ஸின் காதுக்குள் கிறிஸ்டோபர் கிசுகிசுத்தான். ''ஆமாம்'' என்றவாறே சார்ள்ஸ் நடுங்கினான். டொரத்தி ஒரு விலைமாது. இந்த இருவரும் அவளைத் தேடிப் போவது வழக்கம். அவளுடைய அங்கம் முழுவதும் இவர்களுக்குத் தண்ணீர்பட்டபாடு.

காரியம் முடிந்து விட்டது. அவன் மேசை மீதிருந்து இறங்கினான். தேயிலைப் பெட்டி ஒன்றை எடுத்து வந்து சடலத்தைத் தூக்கி அதனுள் போட்டான். 'சட்சட்'டென பெட்டியின் நான்கு புறமும் ஆணிகள் அடித்து அதனை மூடினான். தேயிலைப் பெட்டி சவப்பெட்டியாகி விட்டது.

அன்று இரவு:

அந்த குறுகலான சந்தில் கிழட்டுக் குதிரை ஓடும் லடக், லடக், லடக் சத்தம் கேட்கிறது. பேர்க், ஹெயர் இருவரும் அதன் மீதமர்ந்திருக்கிறார்கள்.

அவர்கள் நடுவில் அந்தப் பெட்டி இருக்கிறது.

* * *

மரங்கள் அடர்த்தியாக வளர்ந்துள்ள ஓரிடத்தில் டாக்டர் நொக்சினுடைய சிகிச்சை நிலையம் இருக்கிறது.

சிவப்பு வெளிச்சம் எரியும் ஓர் அறையில் டாக்டர் நிற்கிறார். அவர் பார்வை ஜன்னல் வழியாக குதிரை வரும் திசையை நோக்கிக் கொண்டிருந்தது.

''அடடா குதிரை வந்து விட்டது.'' உற்சாகத்துடன் அறைக்குள்ளிருந்து ஓடி வெளியில் வந்து குதிரைக்கு அருகில் நின்றார்.

''பேர்க் எப்படிச் சரக்கு?''

''டொப் சேர்''

''சுடச்சுடவா''

''உம்''

''அப்ப இந்தா 10 பவுண்''

பேர்க் மகிழ்ச்சியோடு பெற்றுக் கொள்கிறான்.

டாக்டருக்கு பிணங்களைச் சப்ளை செய்து வந்தான் பேர்க். மயானத்திலிருந்து புதைகுழிகளைத் தோண்டி களவாக எடுத்து வரும் பிணங்களுக்கு 5 பவுண்தான். சாகடித்து உடனடியாக சுடச்சுடக் கொண்டு வரும் பிணங்களுக்கு 10 பவுண். இது தான் பேரம். டாக்டர் மனிதவுடல் ஆய்வாளர், சடலங்களை அறுத்து உயிரியல் மாணவர்களுக்கு மருத்துவம் கற்றுக் கொடுப்பவர். அதோடு பல உறுப்புகளை வெளியுலகிற்கு விற்பனை செய்து பணம் சம்பாதித்து வருபவர்.

சுடச்சுட பிணங்களுக்கு பணம் அதிகம் கிடைத்ததால் ஹெயருடன் பேர்க் கொலை நாடகத்தை ஆரம்பித்தான். முதலில் விடுதிச் சொந்தக்காரியின் உதவியுடன் விடுதியில் தங்கியிருப்பவர்களைக் கொன்று தேயிலைப் பெட்டிக்குள் அடைத்து குதிரை மேல் ஏற்றுவான். அதன் பிறகு வீதியில் அலைந்து திரியும் பிச்சைக்காரர்கள் ஒருவரையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை.

எலிகளைத் தேடித்தேடி அடித்துக் கொல்வது போல மனிதர்களை அவர்கள் கொன்றார்கள். அனைத்தும் மிகவும் மர்மமான முறையில் மயிர்க்கூச் செறியும் வகையில் ரகசியமாக நடந்தன. அத்தனை பிணங்களும் டாக்டரின் மருத்துவகூடம் சென்றன.

அன்று:

டாக்டர் நொக்சினின் அறுவைக் கூடத்தில் ஓர் அதிர்ச்சியூட்டும் சம்பவம் நிகழ்ந்தது.

30வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணின் நிர்வாணசடலத்தை டாக்டர் மேசையில் கிடத்திய போது அங்குநின்றவர்களில் சார்ள்ஸ், கிறிஸ்ரோபர் என்ற இரு மாணவர்கள் நடு நடுங்கிப் போனார்கள்.

''அது டொரத்தி'' என்று கிறிஸ்ரோபர் சார்ள்ஸின் காதுக்குள் கிசுகிசுத்தான். ''ஆமாம்'' என்றவாறே சார்ள்ஸ் நடுங்கினான்.

பகலில் ஒரு பிச்சைக்காரி போன்று திரிந்த அவள் உண்மையில் ஒரு விலை மாது. இந்த இரு மாணவர்களும் அவளைத் தேடிப் போவது வழக்கம். அவளுடைய அங்கம் முழுவதும் அவர்களுக்குத் தண்ணீர் பட்டபாடு. அவளைக் காணவில்லையே என அவர்கள் இரண்டு நாட்களாகப் பறந்து கொண்டிருந்தார்கள். இரண்டாக மடிக்கப்பட்ட சடலமாக அவளைக் கண்டபோது அவர்கள் நடு நடுங்கிப் போனார்கள்.

சார்ள்ஸ் ஆய்வு கூடத்தை விட்டு நைசாக நழுவிச் சென்றான், பொலிஸுக்குத் தகவல் கொடுத்தான். பொலிஸார் கூட்டமாக வந்து டாக்டரின் ஆய்வு கூடத்தை முற்றுகையிட்டபோது பாவம் டொரத்தி கூடத்தில் பல கூறுகளாக வெட்டப்பட்டு கிட்னி எல்லாம் அகற்றப்பட்ட நிலையில் கிடந்தாள்.

1828ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் இடம்பெற்ற இந்தக் கொலைச் சம்பவங்கள் மக்களை அதிர்ச்சியடையச் செய்தன. கிறிஸ்மஸ் காலத்திலும் இந்த வழக்கு நடைபெற்ற போது மக்கள் வெள்ளத்தால் நீதிமன்றம் நிரம்பி வழிந்தது. ஹெயர் அரச தரப்புச் சாட்சியாக மாறி, பேர்க் கொலைகளை எவ்வாறு செய்தான் என்று விவரித்த போது நீதிமன்றத்தில் பலர் மயங்கி விழுந்தார்கள். திகிலடைந்து அலறினார்கள்.

விடுதிச் சொந்தக்காரியை எடின் பேர்ஜ்ஜின் சேரி மக்கள் ஒரு விசர் நாயைக் கொல்வது போன்று விரட்டி விரட்டி அடித்துக் கொன்றார்கள்.



# கவர்ச்சிக் கன்னி ரம்யாவுக்கு காதலிக்க நேரமில்லையாம்!

'வெள்ளை மனசு' என்ற படத்தின் மூலம் 1985 ஆம் ஆண்டளவில் தமிழ்த்திரையுலகில் நுழைந்தவர் ரம்யா கிருஷ்ணன். ஆரம்பத்தில் அவருடைய சிறுபிள்ளைத்தனமான தோற்றமும் தலைகாட்டிய அப்பாவி கரெக்டர்களும் தமிழ் ரசிகர்களை ஈர்க்கவில்லை.



ரம்யா

அதனால் தெலுங்கு தேசம் போனார். அங்கு கவர்ச்சி நாயகியாக பல படங்களில் நடித்து தெலுங்கு தேசத்தில் நம்பர் வன் நிலையை அடைந்தார்.

இவர் நடித்த தெலுங்குப் படங்களைப் பார்த்த தமிழ், இந்தித் தயாரிப்பாளர்கள் இவரைத் தங்கள் மொழிப் படங்களில் ஒப்பந்தம் செய்தனர்.

இடையிடையே தமிழில் தலை காட்டி வந்த ரம்யா கிருஷ்ணனை தமிழ் ரசிகர்களுக்கு இனங் காட்டிய படம் என்றால் அது 'படையப்பா'

அப்படத்தில் சூப்பர் ஸ்டாருக்கு இணையாக நடித்து ஒரு கலக்கு கலக்கியிருந்தார்.

இப்போது தமிழ்த்திரையுலகில் முன்னணி இடத்தில் இருந்து கொண்டிருக்கிறார்.

ஆடைகுறைத்து கவர்ச்சிக்காட்சிகளில் மட்டுமல்ல, அருள்பாலிக்கும் அம்மனாகவும் நடித்துத் திறமை காட்டுபவர். இன்றைய தமிழ்த் திரையுலகில் ஒரு பாட்டுக்கு நடனமா? அம்மன் வேடமா? கூப்பிடுங்கள் ரம்யா கிருஷ்ணனை என்ற ஒரு நிலை இருக்கிறது.

'நரசிம்மா' படத்தின் படப்பிடிப்பு. பாடல் காட்சியொன்றில் விஜயகாந்துடன் ஆடிவிட்டு ஓய்வாக வந்தமர்ந்தவரிடம் பேட்டி என்றதும் உற்சாகமாக உரையாட ஆரம்பித்தார்.

**கே: வெளிவரும் பெரும்பாலான புதுப் படங்களில் ஒரு பாடல் காட்சி, பக்திப் படங்களின் கதாநாயகி என்று உங்கள் காட்டில் அடைமழையாக இருக்கிறதே?**

ப: ஆமாம் ரசிகர்களின் புண்ணியத்தில் பிஸியாக இருக்கிறேன்.

**கே: 'படையப்பா' படத்திற்குப் பிறகு உங்கள் மார்க்கெட் சூடுபிடித் திருக்கிறது என்று சொல்லலாமா?**

ப: ஆமாம் ரஜினிஸாருக்குத்தான் நன்றி சொல்லவேண்டும்.

**கே: கோலிவூட்டில் தற்போது நிலவும் பக்திப் படங்களின் படையெடுப்புக்கு என்ன காரணம்?**

ப: மக்களின் பக்திதான்.

**கே: அம்மன் வேடத்தில் நடித்துவிட்டு கவர்ச்சி வேடங்களில் நடிப்பது சிரமமாக இல்லையா?**

ப: இல்லை. இரண்டும் நடிப்புத்தான். ஆனால் பக்திப் படங்களில் நடிக்கும் போது சுத்தமாக இருந்து நடிக்க வேண்டும்.

**கே: ரஜினிகாந்த் உங்களை ரீ–என்ட்ரி செய்து வைத்திருக்கிறார். அவரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ப: நல்ல மனிதர், எளிமையானவர், கடின உழைப்பாளி, நடிப்புப் புயல்.

**கே: கிட்டத்தட்ட 16 வருடங்களாக நடித்துக் கொண்டிருக்கிறீர்கள். இன்றும் கவர்ச்சி நடிகையாக நின்று நிலைப்பதன் ரகசியம் என்ன?**

ப: இறைவனது அருளும் உடற் பராமரிப்பும்தான்.

**கே: கவர்ச்சி காட்டுவதில் கவர்ச்சி நடிகைகளையே மிஞ்சி விடுகிறீர்கள் என்று முன்னணி கவர்ச்சி நடிகையொருவர் கூறியிருக்கிறாரே?**

ப: அது அவரது கருத்து.

**கே: திருமணம் செய்துகொள்ளும் எண்ணமில்லையா?**

ப: காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும். கவர்ச்சியுள்ள போதே காசைச் சம்பாதித்து விட வேண்டும். அதனால் இப்போது திருமணத்தைப் பற்றி நினைக்க முடியாது. அவ்வளவு ஏன் காதலிக்கவே நேரமில்லை.

**கே: உங்கள் குடும்பம் பற்றி...?**

ப: அப்பா, அம்மா, நான், ஒரு தங்கை.

**கே: சினிமாவில் கனவுக் காட்சிகளில் நடித்திருக்கிறீர்கள். உங்கள் எதிர்காலக் கனவுகள் என்று ஏதாவது இருக்கிறதா?**

ப: இல்லை. நான் கனவு காண்பதில்லை.

**கே: நீங்கள் நடித்த கரெக்டர்களில் வித்தியாசமானது என நீங்கள் எண்ணுவது?**

ப: 'நீலாம்பரி' கரெக்டர்தான். ஒரு தலையாகக் காதலித்து காதல் கைகூடாததால் காதல் வெறியாக மாறி பழிவாங்கும் கரெக்டர் எனக்கு ரொம்பப் பிடித்தது.

**கே: தற்போது நடித்து வரும் படங்கள் பற்றி...?**

ப: 'நரசிம்மா', 'அத்தை மகன்', 'ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி', 'அசத்தல்'.

ஷாம்



# வாடா மகனே! டைரக்ஷனுக்கு..


மகனை எப்படியாவது நடிகனாக்கிவிட வேண்டுமென்பதில் டைரக்டர் பாரதிராஜா பிடிவாதமாக இருந்தார்.

அதற்காகவே பல புதிய நடிகைகளை மும்பையிலிருந்து இறக்குமதி செய்து மகனுடன் ஜோடி சேர்த்தார். ஆனாலும் வாரிசின் நடிப்பு எடுபடவில்லை.

இதற்கிடையில் "காய்ந்து போன ஆடுதின்ன நீதான் கம்பங்கொல்ல. ஓரம் சாரம் இத்தனை ருசியானால் பிறகு என்னத்தைச்சொல்ல?" என்று ரிச்சாவைப் பார்த்து பாட ஆரம்பித்துவிட்டார் வாரிசு.

இனியும் இப்படியே விட்டால் மகன் நடிகையுடன் மும்பைக்கு பயணமாகிவிடுவார் என்பதை உணர்ந்து தன் டைரக்ஷன் துறையிலேயே மகனையும் பயிற்றுவிக்கப் போகின்றாராம் டைரக்டர்.

# ஆளவந்தான் புதிய செய்திகள்



*'சத்யா' படத்தை அடுத்து கமல் சுரேஷ் கிருஷ்ணா கூட்டணி ஒன்று சேரும்படம்.

*ஒரே நேரத்தில் தமிழிலும் இந்தியிலும் தயாராகிறது. இந்தியில் 'அபய்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

*ஒரு நாட்டில் பிறக்கும் எல்லோரும் நாட்டை ஆளவந்தவர்கள் தான். ஒருவனது உயர்வும் தாழ்வும் பெற்றோர் மற்றும் சமூகத்தினரின் கையிலேயே உள்ளது என்பதை விளக்குவதே ஆளவந்தான் கதை.

# லைலா தமிழ் கற்கிறார்



'நந்தா'வில் சூர்யாவுடன் நடித்து வருகிறார் லைலா. 'பார்த்தேன் ரசித்தேன்' இற்குப்பிறகு ரசிகர்கள் தன்னை அடையாளங்கண்டு கொள்வதனால் தமிழில் அதிக கவனம் செலுத்தப் போகிறாராம்.

தமிழ பேசத் தெரிந்தால் தான் இது விரைவில் சாத்தியமாகும் என்பதை உணர்ந்து கொண்டதால் தமிழ் பண்டிதர் ஒருவரிடம் பிரத்தியேகமாகத் தமிழ் கற்று வருகிறாராம்.

மகள் தமிழ் கற்றுக்கொண்டிருக்க,

லைலாவின் தந்தையோ உலக நாடுகளுக்குப் பறந்து கொண்டிருக்கிறாராம். ஏன் தெரியுமா? லைலாவின் தந்தை ஒரு பைலட் (விமானி)

# ரயில் நடிகையின் மறுபக்கம்

நடிகைகள் உண்மையில் தான் காதலிக்கிறார்கள். ஆனால் அவர்களைக் காதலிக்கும் ஆண்கள் தான் பத்தோடு பதினொன்றாகக் கருதி விடுகிறார்கள்.

இந்தக் காதல் சுழலில் அகப்பட்டவர் ரயில் நடிகை. கிழக்கே போகும் ரயிலில் அறிமுகமாகி தென்னிந்திய மொழிகளில் அசத்தியவர்.

அழகுடன் அறிவும் கொண்ட நடிகை. திரையுலகில் தனக்கென ஒரு இடத்தைப்பிடித்துக் கொண்டவர்.

நடிகை தி.மு.க.வின். ஆதரவாளர். ஒரு காலத்தில் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளராக இருந்தவர்.

இவை எல்லாமிருந்தும் அம்மணி தன் தனிப்பட்ட வாழ்வில் ஒரு நிரந்தர தீர்மானம் எடுக்க முடியாதவராக இருப்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

நடிகையின் திருமண வாழ்வு நிலையற்றதாகி விட்டது.

ஒன்றிரண்டோடு நிறுத்தி விடாமல் திருமணம் செய்து கொள்வதில் அம்மணி ஹொலிவூட் நடிகை எலிசபெத் டெயிலரையும் மிஞ்சி விடுவாரோ என்ற அச்சம் *கோலிவூட்டில் ஏற்பட்டுள்ளது.

சினிமாவில் நுழைந்த சில காலத்திற்குள்ளேயே டைரக்டரும் நடிகருமான பிரதாப்பை மணந்தார். இவர்தான் நடிகையின் முதலாவது கணவர்.

சில நாட்களில் மணவாழ்க்கை கசக்கவே

கணவரை விவாகரத்து செய்துவிட்டு சுதந்திரப் பறவையானார்.


இக்கால கட்டத்தில் வெற்றிகாந்தோடும் கிசுகிசுக்கப்பட்டார். அடிக்கடி வெளிநாட்டிலுள்ள தன் தாயைப்பார்த்து வரச்சென்றார்.

இந்த வெளிநாட்டுச்சுற்றுப்பயணங்களில் அகப்பட்டவர் தான் வெளிநாட்டுக் கணவர். இவரைச் சந்தித்த சில காலத்திற்குள்ளேயே பதிவுத்திருமணமும் செய்து கொண்டார். மணவாழ்க்கையின் பெறுபேறாக ஒரு பெண் குழந்தையும் உண்டு.

சமீபகாலமாக என்னானதோ வெளிநாட்டுக் கணவரைப்பற்றிய கதையே இல்லை. நடிகையும் டி.வி தொடர் தயாரிப்பில் பிஸியாகி விட்டார்.

இப்போது மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறியிருக்கிறது. அம்மணியின் சொந்த நிறுவனம் தயாரிக்கும் 'க்விஸ்' நிகழ்ச்சியொன்றினை நடத்தி வரும் ஆணழக நடிகரை அம்மணி ரகசிய மணம் செய்து விட்டாராம். இதைப்பற்றிய செய்திகள் பரவலாக வந்து கொண்டிருக்கின்றன.

அம்மணியினால் நடிகர் சங்கத்தின் இரட்டைக்குழல் துப்பாக்கிகளான வெற்றி காந்துக்கும் ஆணழக நடிகருக்குமிடையே பனிப்போர் ஆரம்பித்துள்ளது.



# சாக்ஷி பாடும் அவர் புராணம்



"அவருடன் நடிப்பதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். முதன் முதலில் அவரைப் பார்த்த போது உருவத்தைப்பார்த்து சிறிது பயமேற்பட்டது என்னமோ உண்மைதான்.

ஆனால் பழகப்பழக அவர் குழந்தை உள்ளம் கொண்டவர் என்பது தெரிந்தது. எளிதில் கோபப்பட மாட்டார். நியாயமான விஷயங்களுக்காக மட்டுமே கோபப்படுவார்.

கோபம் வந்தால் யாரும் நெருங்க முடியாது. அவரது இந்த சுபாவம் தான் இன்ஸ்பெக்டர் வேடங்களில் அவர் நடிப்பதற்கு உதவுகின்றது.

தெலுங்கில் எல்லா முன்னணி ஹீரோக்களுடனும் நடித்து விட்டேன். ஆனால் அவர்களுடன் நடிக்கும் போது கிடைக்காத சந்தோஷத்தை அவருடன் நடிக்கும் போது உணர்ந்தேன்."

இப்படி 'அவர்' யார் என்று சொல்லாமலேயே அவர் புராணம் பாடிக்கொண்டு போன சாக்ஷியை இடை மறித்து "யாருங்க இந்த லக்கி அவர்" என்று கேட்டால், "விஜயகாந்த் ஸார் தான்" என்று நன்றியுடன் கூறுகிறார். (இருக்காதா பின்ன தமிழ்த் திரையுலகமே மறந்து போன வேளையில் அம்மணியை ரீ-என்ட்ரி செய்து வைத்த நன்றி இருக்கத்தானே செய்யும்)

# அர்ஜுனின் சுதந்திர தாகம்



அவ்வப்போது டைரக்ட் செய்வது அர்ஜுனின் பொழுதுபோக்கு.

இப்பொழுது அவர் டைரக்ட் செய்து வரும் படம் - 'வேதம்'

தேசியக் கொடியைக் கையில் பச்சை குத்திக் கொண்டிருக்கும் இவர், இந்திய சுதந்திர தினமான ஆகஸ்ட் 15ஆம் திகதி பிறந்தவர்.

'வேதம்' படத்தில் தன் கையில் இருக்கும் தேசியக் கொடியை ஒரு ஷொட்டிலாவது காட்டி விட வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறாராம்.

# படகு விபத்தில் விந்தியா

ஷூட்டிங் ஒன்றிற்காக அண்மையில் லண்டன் போயிருந்தார் விந்தியா. படகொன்றில் விந்தியா பயணம் செய்த போது, படகு கவிழ்ந்து தண்ணீரில் மூழ்கியிருக்கிறது.

யூனிட்டார் உடனடியாக விந்தியாவைக் காப்பாற்றி விட்டனர். "அடடா பிழைத்து விட்டேன். என்று எண்ணி விந்தியா தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு இருந்தபோது,

"நல்ல வேளை தப்பினீங்க மேடம். இது பொல்லாத டேஞ்சரான ஆறு. நேற்றுத்தான் இரண்டு பேர் படகு கவிழ்ந்து இறந்து போனார்கள்" என்று பக்கத்தில் நின்றவர் சொல்ல, வியர்த்துப் போனாராம் விந்தியா.



# விக்ரமின் கனவுக்கன்னி மீனா



'காதலிஸம்' பொப் அல்பத்தில் மீனாவுடன் சேர்ந்து பாடியதுடன் மிக நெருக்கமாகவும் போஸ் கொடுத்துநடித்துள்ளார் நடிகர் விக்ரம்.

இந்த அல்பம் சமீபத்தில் வெளியாகியிருக்கிறது. இதனைப்பார்த்த பலரும் "எத்தனையோ நடிகர்கள் இருக்கும்போது மீனா உங்களை அழைத்த காரணம் என்ன?" என்று விக்ரமிடம் கேட்டு நச்சரிக்கிறார்களாம்.

விக்ரம் லேசுப்பட்ட ஆளா என்ன? "மீனா என் கனவுக்கன்னி" என்று ஒரே போடாகப் போட்டிருக்கிறார். (விக்ரமைப்பாட அழைத்தது மீனா அல்ல கசெட் இயக்குனரான புஷ்ப வாசகன் என்பது வேறு விஷயம்.)

# உமா ஒரு சுமாதான்!

'வீரநடை', 'கடல்பூக்கள்' போன்ற படங்களில் நடித்தவர் உமா. இவரும் நட்சத்திர வாரிசுதான்.

நடிகை சுமித்திராவின் மகள். கொலிஜில் படித்து வருகிறார். இவரின் தோற்றத்தில் சிறு பிள்ளைத்தனம் இருப்பதனால் தான் பரபரப்பாக வளர முடியவில்லையா? என்று கேட்பவர்களுக்கு,

"இல்லை. பரபரப்பாக பேசப்பட முடியாவிட்டாலும் விரைவில் அந்த நிலையை அடைவேன். நான் முற்றுப்புள்ளி அல்ல சுமா" என்று கூறுகிறார் உமா.



உமா

# அஜித்தின் எகத்தாளம்

அஜித்தை கதாநாயகனாக வைத்து தமிழ்ப்படம் ஒன்றைத் தயாரிக்க விரும்பினார் தெலுங்குத் தயாரிப்பாளர் ஒருவர்.

டைரக்டர் பாசிலையும் ஒப்பந்தம் செய்து விட்டார். பாசில் இது விடயமாக அஜித்திடம் கதைத்த போது,

"என் ஆபீஸுக்கு வந்து கதை சொல்லுங்கள்" என்று அஜித் கூறியிருக்கிறார்.



# தபுவிற்குப் பிடித்த நாயகன்

"நான் சந்தித்த நாயகர்களில் நல்ல ஆண்மகன் நாகார்ஜுன்" இப்படிச் சொல்பவர் யார் தெரியுமா? தபு தான். "நாகார்ஜுன் உயரமானவர் என்பதனால் இப்படிச் சொல்கிறீர்களா?" என்று கேட்டால்,

"நோ எனக்கு உயரமான ஆண்களைவிட நடுத்தரவளர்த்தியுள்ள ஆண்களையே மிகவும் பிடிக்கும். ஆனாலும் நாகார்ஜுனுடைய அணுகு முறைகளால் எனக்கு அவரைப்பிடித்திருக்கிறது. கொஞ்சம் குறும்பு, கொஞ்சம் கோபம், அடக்கியாளும் தன்மை இவைகள் நாகார்ஜுன் ஒருவரிடம் மட்டுமே இருக்கிறது என்கிறார்.



நாகார்ஜுன் – ஷில்பா ஷெட்டி படம் – 'குருஷேத்திரம்'

# திரை மறைவில்

நவரச நாயகனைப்பற்றி அண்மையில் அவரை வைத்துப் படமெடுத்த இரண்டெழுத்து தயாரிப்பாளர் ஒருவர் ஏடாகூடமாகச் சொல்லி விட்டார். இதைக் கேள்விப்பட்டுக் கொதித்துப்போன நவரச நாயகன் உடனடியாக குறிப்பிட்ட நபரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு காரசாரமாகப் பேசி இனிமேலாவது அடக்கி வாசியுங்கள் என்று எச்சரித்தாராம்.

**

ஒளிமயமாக நம்பர் வன் இடத்தைப் பிடித்து விட்ட தங்கைக்குலம் வெள்ளைக்கார நடிகருடன் லிட்டில் ஸ்டார் பாடி வருவது தெரிந்ததே.

படப்பிடிப்பு முடிந்து விட்ட நிலையில் நடிகைக்கும் ஹீரோவுக்கும் இடையிலான நட்பு உண்மையிலேயே பலப்பட்டுப் போய் விட்டதாம். காத்திருந்தவன் பொண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போன கதையாக நாங்கள் பணத்தைக்கொடுத்துவிட்டுக் காத்திருக்க, வெளிநாட்டுக்காரன் அள்ளிக்கொண்டு போய் விடப் போகிறான் என்று அம்மணியிடம் கால்ஷீட் வாங்கிய தயாரிப்பாளர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஹீரோவுக்கு உள்ளூர் பிரச்சினை தெரியவா போகிறது. ஆங்கிலத்தில் ஆழமாகக் காதலித்துக் கொண்டிருக்கிறாராம்.

**

ஹீரோவுக்கு நண்பனாக தலைகாட்டிக் காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கும் சமீபத்தில் திருமணமான நடிகருக்கு கல்யாணராசி கை கொடுத்திருக்கிறது.

இதுவரை வைகைப்புயலுடன் ஜோடி சேர்ந்து அவரை உதைத்து வந்த கோவை நடிகை இப்போது புதுமாப்பிள்ளை நடிகருடன் ஜோடி சேர்ந்து அசத்தி வருகிறாராம்.

**

போனஸான கவர்ச்சி நடிகை ஓரிரண்டு படங்களில் கவர்ச்சி நடனமாடி வருகிறார். அத்துடன் அக்காவின் கணவர் தயாரிக்கும் படத்திலும் 'பெப்ரவரி 14 லவ்வர்ஸ் டே' என்ற படத்திலும் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

அண்மையில் ஸ்டார் நைட் ஒன்றிற்காக இவரை ஒப்பந்தம் செய்யப்போனார்களாம். எடுத்த எடுப்பிலேயே அம்மணி ஒரு லட்சம் கேட்டு விட வந்தவர் சொல்லாமல் கொள்ளாமல் ஓட்டம் பிடித்து விட்டாராம்.

ஓடியவரைத் துரத்திப்பிடித்த நடிகை நீங்கள் தருவதைத் தாருங்கள் என்று இறங்கி வந்திருக்கிறார். ஸ்டார் நைட் பார்ட்டி 30,000 ரூபா வோடு ஒத்துக்கொள்ள வைத்திருக்கிறார்.



அல்போன்ஸா

# சமாதானத்தைத் தேடி....

சுடர் ஒளி சிறுகதை

விமல்

அது ஓர் அநாதை மடம்.

அங்கு ஒரு கட்டடத்தின் மூலையில் குமார் அமர்ந்திருந்தான். வெளிறிய கண்கள், பழுப்பேறிய உடைகள், கவனிப்பாரற்ற தலை, இவைதான் அவனது தோற்றம். அக்கட்டடத்தின் ஒரு மூலையில் சாய்ந்து அமர்ந்தபடி எங்கோ பார்த்துக் கொண்டு இருந்தான். அவனது செயற்பாடுகள் அவன் இந்த உலகத்தைச் சேர்ந்தவன் அல்லன் என்பதைத் துல்லியமாக எடுத்துக் காட்டின. மற்றைய அநாதைச் சிறுவர்கள் தாங்கள் அநாதைகள் என்பதை மறந்து பட்டாம் பூச்சிகளாக அக்கட்டடத்துக்குள் வலம் வந்து கொண்டிருக்க அவன் மட்டும் விரக்தியோடு சிலைபோன்று அமர்ந்திருந்தான்.

"அவன் ஒரு போக்கு" இப்படித்தான் மற்றைய சிறுவர்கள் அவனைப் பற்றிக் குறிப்பிடுவார்கள். அவன் வாய்திறந்து பேசுவது இல்லை. மற்றவர்களோடு விளையாடுவதும் இல்லை. அவனைப்பற்றி மற்றவர்கள் பெரிதாக அலட்டிக் கொள்வதும் இல்லை. அவனும் அவர்கள் பற்றி அக்கறைப்படுவது இல்லை. அவனும் அவன் உலகமும் என்று அமைதியாக இருப்பான்.

தனது பெயரை யாரோ தூரத்தில் விசாரிப்பது அவனுக்குத் தெரிந்தது. அவனுக்கு வியப்பு. ஜீவன் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் அவனைச் சந்திக்க தளர்நடையோடு ஒரு கிழவி வருகிறாள்; ஏனைய சிறுவர்களிடம் அவனது பெயரை விசாரிக்கிறாள். அவனைத் தனது பேரன் என்று கூறி ஆனந்தக் கண்ணீரோடு அவர்களுக்குத் தன்னை அறிமுகப் படுத்துகிறாள்.

ஆனால் அவனிடம் எந்தவித சலனமுமில்லை.

கிழவியோ பேரனை நோக்கி "தம்பி இப்ப தோட்டப் பக்கம் ஒரு பிரச்சினையும் இல்லை; சிங்கள, தமிழ்ச் சனமெல்லாம் சந்தோசமாகத்தான் இருக்குதுகள். வா வீட்டுக்குப் போகலாம்" என்றாள்.

அவனோ நிமிர்ந்து தீர்க்கமான பார்வையோடு கடுகடுப்பாகக் கிழவியை நோக்கி "ஆச்சி நான் தோட்டப் பக்கம் வரவேமாட்டேன். வெட்டுக்குத்து, சண்டை இதுகள் இல்லை என்றால் எங்கட தோட்டப்பக்கம் சமாதானமென்று கனவு காணாதேங்க. நாளைக்கு என்ன நடக்குமோ யாருக்குத் தெரியும்?" என்று சொல்லிவிட்டு முகட்டைப் பார்க்கத் தொடங்கினான்.

கிழவியோ "அவனோடு பேசிப்பயனில்லை" என்று கண்களைக் கசக்கிக் கொண்டாள். கிழவிக்கு அவனது ஆதங்கம் புரிகிறது. அந்த நாளை அவனால், அவளால் எப்படி மறக்க முடியும்.?

சுற்றிவர தேயிலைச் செடிகள் மலையடிவாரங்களைப் பசுமையாய் போர்த்திருக்க, மலையோர மழலை சீதளக் காற்று பூமி மேனியை வருடிச் செல்ல, முகில் தாழப்பறந்தது உயரமலைகளுக்கு முத்தம் கொடுக்கும் மையத்தில் அவனுடைய அழகிய கிராமம் அமைந்திருந்தது.

அங்கே சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூவினத்தவரும் குடியிருந்த காலம் அது. அவன் அப்போது மிகச் சிறியவனாக இருந்தான். சின்னஞ் சிறு சிங்களச் சிறுவர்கள்தான் அவனது நண்பர்கள். அவர்கள் அவனது வீட்டுக்கு[...] பொங்கல் [...] தைப்பொங்கலுக்கு வருவதும், அவனும், அவனது குடும்பமும் அவர்களது கொண்டாட்டங்களுக்குப் போவதும் வருடா வருட நிகழ்வுகள். ஒரு நாள் பாடசாலை முடிந்து பின்னேரம் விளையாடுவதற்காக வீட்டின் முன்பக்கம் போனான். ஆனால் ஒரு நண்பனாவது அவனோடு விளையாட வரவில்லை. அவர்களது பெற்றோர் அவனோடு விளையாடக் கூடாது என்று தடுத்திருக்கக் கூடும். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் ஏதோ பதற்றம் நிலவுவதுபோன்று தெரிந்தது. துக்கத்தோடு தாயிடம் விசயத்தைக் கூறினான். அவனது கதை எடுபடவில்லை.

வீட்டில் அப்பா, அம்மா, அக்கா எல்லோரும் பயத்தோடு தங்களுக்குள்ளே கிசுகிசுத்துக் கொண்டு இருந்தனர். அவனது காதிலும் இரண்டொரு வார்த்தைகள் விழுந்தன.

"ரவுனுக்குள் ஏதோ பிரச்சினையாம், தமிழுங்கள வெட்டிப் போட்டாங்களாம்." அப்பா பயந்தபடி சொன்னார்.

"ரவுணுக்க ஆக்கள வெட்டினா, ஏன் பயப்பட வேண்டும். அப்பா சரியான பயந்தாங்கொள்ளி" என்று தனக்குள் சிரித்துக் கொண்டான் அவன். இரவு நேரம். அனைவரும் நித்திரையில் இருந்தோம். அப்பா பெயரை யாரோ கூப்பிட்டார்கள். போக வேண்டாம் என்று அம்மா அப்பாவைத் தடுத்தார். அப்பா வீட்டுக் கதவைத் திறக்கு முன்னே கல் மழையால் வீடு அதிர்ந்தது; கண்ணாடிகள் உடைந்தன. அவனுடைய சிறிய மீன் தொட்டி உடைந்து, மீன்கள் சிதறி விழவீடு வெள்ளமாகியது. அப்பா, அம்மா, அக்கா எல்லோரும் ஒருவரையொருவர் பயப் பிராந்தியோடு கட்டிப்பிடித்துக் கொண்டு நின்றனர்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் அவனது வீட்டை உடைக்கிறார்கள்.? உடைக்கப்பட்ட கதவினூடாக இரண்டு மூன்று முகமூடி அணிந்தோர் வந்தனர் வந்த வேகத்தில் அப்பாவின் கழுத்தில் கத்தியைப் பாய்ச்சினார்கள், அம்மாவினுடைய வயிற்றில் இன்னொருவனுடைய கத்தி இறங்கியது. அக்கா தலைதெறிக்க உள்வீட்டினுள் ஓடினாள். அவன் கதவுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டான். அக்கா கதறக் கதற அவளது உடைகளை ஒருவன் கிழித்து வீசினான். அக்காவுக்கு அவன் என்னவோ செய்தான். அக்கா வேதனையால் துடிப்பது மாத்திரம் தெரிந்தது. பக்கத்தில் கிடந்த தும்புத்தடியால் அக்கா மேல் கிடந்த அந்தக் காடையனை அவன் தாக்கினான். பக்கத்தில் நின்ற மற்றொருவன் அவனைத் தேயிலைச் செடிகளிடையே வீசினான். சற்று நேரத்தில் வீடு பற்றி எரிவதை அங்கிருந்தே விம்மலோடு பார்த்தான் அவன்.

அன்று அவ்வூரை விட்டுத் தப்பியோடி அனாதை மடத்துள் புகுந்தவன் இது வரையில் வெளி உலகத்துக்குள் காலடி வைக்கவில்லை தூரத்தே வசித்த அவனது பாட்டி அவனை அழைத்துப் போக வந்து நிற்கின்றாள்.

ஆனால் அவனோ...


"எப்ப எங்கட பக்கம் நீதியோடு சமாதானம் வருமோ அப்பதான் நான் தோட்டப் பக்கம் வருவேன்" என்று அடித்துச் சொன்னான்.

"அங்கே தோட்டப்பக்கம் ஒரு பிரச்சினையும் இல்லையடா" என்றாள் பாட்டி.

அதே நேரம் வானொலியில் செய்தி வாசிக்கிறார்கள். "இன்று தலவாக் கொல்லையில் பலர் படுகொலை செய்யப்பட்டு இருக்கின்றார்கள். பல குடும்பங்கள் வேறு இடங்களில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளன. கால வரையறையற்ற ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது."

செய்தி தொடர்கிறது.

அவன் கேள்விக் குறியுடன் பாட்டியின் மீது பார்வையைச் செலுத்துகின்றான்.



# தென்னிலங்கையில் பவனி வரும் மருதமடு மாதா

நாட்டுக்குச் சமாதானத்தைக் கொண்டு வருவதில் மதங்களும் பங்களிப்புச் செய்ய முடியும். யாகங்கள், பிரார்த்தனைகள், பூஜைகள் மூலம் இந்தப் பங்களிப்புச் செய்யப்பட்டு வருகிறது. இந்து ஆலயங்களில் சமாதானத்துக்காக யாகங்கள், வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. கிறிஸ்தவ ஆலங்களில் பிரார்த்தனைகள் இடம்பெறுகின்றன. பௌத்த விகாரைகளில் பூஜைவழிபாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன. பள்ளிவாசல்களில் சமாதானத்தொழுகைகள் நடத்தப்படுகின்றன.

இந்த வகையில் கத்தோலிக்கத் திருச்சபை சமாதானத்துக்கான தனது பங்களிப்பாக மற்றொரு முக்கிய பணியை அடுத்த வாரத்தில் ஆரம்பிக்கவிருக்கிறது. இலங்கையில் புகழ்பெற்ற கத்தோலிக்கத் திருத்தலங்களில் ஒன்றான மருதமடு திருத்தல இராக்கினியான மடுமாதாவின் திருச்சொரூபம் நாட்டின் தென்பகுதிகளில் திருப்பவனியாக எடுத்துவரப்படவுள்ளது. முன்னர் வன்னி மாவட்டத்தில் இப்பவனி நடத்தப்பட்டது.

மருதமடு மாதாவின் திருச்சொரூபம் தென்னிலங்கைக்கு பவனியாக எடுத்து வரப்படவிருப்பது இதுவே முதல் தடவை. இந்தப் பவனிக்கான ஆயத்த ஏற்பாடாக கொழும்பு மறைமாவட்ட ஆலயங்களில் கடந்த ஒரு மாதமாக ஞாயிறு தோறும் விசேட பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன.

நாட்டுக்கு இன்று அவசியமாகத் தேவைப்படும் சமாதானத்துக்காக மன்றாடுவதும் அயலாரை நேசிக்கும் பண்பை ஏற்படுத்துங்கள் என்ற செய்தியை விடுப்பதுமே இப்பவனியின் நோக்கம் என்று ஆயர்மன்றச் செயலாளரும் இரத்தினபுரி ஆயருமான மல்கம் ரஞ்ஜித் தெரிவித்துள்ளார்.



மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த மருதமடு திருப்பதி அடர்ந்த கானகத்தின் மத்தியில் அமைந்துள்ள வரலாற்றுப் பெருமைமிக்க யாத்திரைத் தலமாகும். இத்தலம் சுமார் 450 வருடங்கள் பழைமை வாய்ந்தது.

வடக்கில் போர் உச்சக் கட்டத்தை அடைந்த வேளையில் அகதிகளான அனைத்து மக்களுக்கும் இத்திருத்தலமே அபயமளித்தது. இன்றும் அபயமளித்துக் கொண்டிருக்கிறது.

கத்தோலிக்க ஆயர்கள் மன்றத்தின் ஏற்பாட்டிலான மருதமடு அன்னையின் தென்னிலங்கைத் திருயாத்திரையை எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அநுராதபுரம் மறை மாவட்டத்துக்கு 14ஆம் திகதி செல்லும் பவனி 16ஆம் திகதி சிலாபம் மறை. மாவட்டத்துக்கும் 19ஆம் திகதி நீர்கொழும்பு மறைவமாட்டத்துக்கும் செல்லும்.

நீர்கொழும்பு, கொச்சிக்கடை பாலமருகே கையேற்கப்படும் மாதாவின் திருச்சொரூபம் சமாதானப்பிரார்த்தனைகளுக்காக கொழும்பு மறை மாவட்ட ஆலயங்களுக்கு எடுத்துச் செல்லப் படும். மார்ச் 25ஆம் திகதி தேவத்தை பேராலயத்தில் இறுதிப் பிரார்த்தனை நிகழ்ச்சி நடைபெறும்.

மறுநாள் 26ஆம் திகதி குருநாகல், கண்டி மறைமாவட்டங்களுக்கு இப்பவனி செல்லும். மூன்று வாரங்கள் நீடிக்கும் மடுமாதா திருச்சொரூபப் பவனி ஏப்ரல் 2ஆம் திகதி நிறைவடையும்.

# வவுனியா செஞ்சிலுவைச் சங்கம் சீரழிவு பற்றி மேலும் தகவல்கள்!

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியாக் கிளையின் நடவடிக்கைகள் விமர்சனத்துக்குள்ளாகியிருக்கின்ற நிலையில் கடந்த வாரம் வெளியாகிய "சுடர்ஒளி" யின் கட்டுரை நிலைமையை மேலும் சூடாக்கி விட்டிருக்கிறது.

அங்கத்தவர் ஒருவர் சொன்னார். "தற்போதுள்ள இடைக்கால நிர்வாக சபையினர் கிஷோர் செய்தது போன்று அதிகப்படியாகச் செய்யாது விட்டாலும் பரவாயில்லை. அன்றாடக் கடமைகளையாவது செய்யலாம் தானே. பொது நிறுவனத்தில் சேவையாற்ற வந்துவிட்டு இப்படிப் பயந்து கொண்டிருக்க முடியுமா? சரி பயமென்றால் விட்டு விட்டு ஒதுங்கி விட வேண்டியதுதானே...!

"சங்கத்தைப் பொறுப்பேற்று நடத்த எவ்வளவோ இளைஞர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆனால் தற்போதைய நிர்வாகம் அதற்குத் தயாராக இல்லை. செஞ்சிலுவைச் சங்கத்தின் யாப்பின் படி இடைக்கால நிர்வாக சபையொன்று தெரிவு செய்யப்பட்டால் 3 மாதத்தில் தேர்தலை நடத்தி புதிய நிர்வாக சபையைத் தெரிவு செய்ய வேண்டும். ஆனால் தற்போதைய நிர்வாக சபை நியமிக்கப்பட்டு 22 மாதங்களாகி விட்டன. இன்னமும் தேர்தல் நடைபெறவில்லை.

'தினசரி கிழமை நாட்களில் செஞ்சிலுவைச் சங்க வாகனங்களில் நோயாளர்களையும் சடலங்களையும் வன்னிக்கு அனுப்ப இராணுவம் தயாராக இருக்கிறது. ஆனால் வாரத்தில் 2 நாட்கள் மட்டுமே நோயாளர்களையும் சடலங்களையும் செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் அனுப்ப முடிகிறது. இதனால் சில சமயங்களில் வன்னிக்கு அனுப்பப்பட வேண்டிய சடலங்கள் வவுனியா வைத்தியசாலையில் உள்ள பிரேத அறையில் கிடந்து நாறுகின்றன.

மேலும் வன்னிக்கு சடலங்களையோ, நோயாளிகளையோ அனுப்புவதென்றால் அவர்கள் ஏழையானாலும் கறாராகப் பணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

3 வருடங்களுக்கு தேசிய பயிற்சிச்சபை(N.A.B) வவுனியாவில் கம்பியூட்டர் பயிற்சி நிலையமொன்றை அமைக்க முன்வந்தது. அதற்கு கட்டட வசதியின்றிக் கஷ்டப்பட்டது. இதனால் முன்னைய நிர்வாகம் செஞ்சிலுவைச் சங்க அலுவலகக் கட்டடத்தின் ஒரு பகுதியை இலவசமாக வழங்கி 10 கம்பியூட்டர் மூலம் பயிற்சி நெறி நடைபெற்று வந்தது.

பின்னர் வந்த நிர்வாகம் அந்தக் கட்டடத்துக்கு வாடகை கேட்டதை அடுத்து தொழிற் பயிற்சிச் சபை அந்தக் கம்பியூட்டர்களை எடுத்துச் சென்று சிங்களப் பிரதேச சபைக் கட்டடத்தில் வைத்துவிட்டது. இதனால் தமிழ் மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஓர் இளைஞரிடம் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர் அட்டை ஒன்று கைப்பற்றப்பட்டது. இதனையடுத்து தற்போது உறுப்பினர் அட்டை வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. செஞ்சிலுவைத் தொண்டர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அடையாள அட்டைகளையும் நிர்வாகத்தினர் பறித்து விட்டனர்.

இது தவிர புலிகளால் சில ஆண்டுகளுக்கு முன் ஓர் அறிவித்தல் விடுக்கப்பட்டது. வவுனியாவில் உள்ள மக்கள் அனைவரையும் உடனடியாக இடம் பெயரும் படி அந்த அறிவித்தலில் கோரப்பட்டிருந்தது.

அறிவித்தல் வெளியாகியவுடன் மக்கள் அனைவரும் மூடை முடிச்சுக்களுடன் கிளம்பிவிட்டனர். வயோதிபர்கள், நோயாளிகள் எல்லாரும் இழுத்துப் பறித்து இடம்பெயர செஞ்சிலுவைச் சங்க உயர் பதவியாளர்கள் எல்லோரும் ஆளுக்கொரு செஞ்சிலுவைச் சங்க வாகனத்தை எடுத்துக் கொண்டு நாவலப்பிட்டி, கொழும்பு முதலான பகுதிகளுக்குச் சென்றுவிட்டனர்.

அதேபோன்று மடு தேவாலயத்தில் ஷெல் விழுந்து பலரும் காயமடைந்த போது காயமடைந்தவர்களை ஏற்றி இறக்கத் தொண்டு நிறுவனங்கள் வவுனியாக் கிளையிடம் வாகனம் கேட்டன. அப்பொழுது வாகனம் எதுவும் இல்லை என்று சொல்லப்பட்டதாம்.

இவ்வாறாக ஏராளமான குற்றச்சாட்டுகளுடன் இருக்கும் இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் வவுனியாக் கிளை பற்றி மக்கள் மத்தியில் இருக்கும் அதிருப்தியைப் போக்கவேண்டும். இந்த எண்ணத்தில் கிளையின் தலைவர் மார்க்கண்டேயரைத் தொலைபேசியில் பிடித்தோம். விளக்கங்களைக் கேட்டோம்.

"சுடர்ஒளி" யில் வெளியான விடயங்கள் பற்றி வவுனியா அரச அதிபர் கே. கணேஷிடம் முறையிட்டிருப்பதாகவும், எனவே அது பற்றி அவருடன் பேசும்படியும் தலைவர் சொன்னார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் வவுனியா அரச அதிபருக்கும் தொடர்பு எதுவும் இருப்பதாக நாம் நினைக்கவில்லை என்றபோது "தற்போதைய நிர்வாக சபையை நியமித்தவரே அரச அதிபர் தானே என்றார்.

"நிர்வாக சபையினர் அனைவரும் ராஜினாமாச் செய்த நிலையில் செஞ்சிலுவைச்சங்க வவுனியாக் கிளைக்கு நிர்வாகிகள் இல்லையென்று கருதி கிளை மூடப்பட்டுவிடக்கூடாது. இந்த நல்ல நோக்கில் அந்தத் தருணத்தில் அரசாங்க அதிபர் ஓர் உதவியாக அதனைச் செய்திருக்கலாமே தவிர செஞ்சிலுவைச் சங்கத்தின் நிர்வாகத்தில் தலையிடும் எண்ணம் அரச அதிபருக்கு இருந்திருக்காது" என்றோம்.

தேர்தலை இழுத்தடிப்பதற்கான காரணம் என்ன என்று கேட்டபோது, "அது தலைமைக் காரியாலயத்தின் தவறு. நாம் கடந்த செப்டெம்பரிலேயே தேர்தலை நடத்தும்படி தலைமைக் காரியாலயத்துக்குக் கடிதம் அனுப்பிவிட்டோம்" என்றார்.

99 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் நியமிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபையினர் 99 இலேயே தேர்தலை நடத்தியிருக்கலாம். 2000 செப்டெம்பர் வரை காத்திருந்த காரணமென்ன என்று கேட்டோம்.

"இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய தேவை எனக்கில்லை. எந்தப் பேப்பரில் எப்படி எழுதினாலும் எனக்குக் கவலை இல்லை. நான் அடுத்த முறை தேர்தலில் நிற்கப்போவதுமில்லை. எனவே நான் எவருக்கும் பதில் சொல்ல வேண்டிய தேவை இல்லை" என்றார்.

அப்படியென்றால் கடந்த வார "சுடர் ஒளி" யில் வெளியான விடயங்களில் உங்களுக்கு ஆட்சேபனை உள்ள விடயங்களைக் குறிப்பிட்டு விளக்கம் தாருங்கள் என்று கேட்டோம்.

தான் கடந்த வார "சுடர் ஒளி"யை வாசிக்கவே இல்லை என்று அவர் சாதித்தார். "அப்படியானால் கடந்த வார சுடர் ஒளியில் வெளியான விடயங்கள் பற்றி அரச அதிபரிடம் முறையிட்டிருப்பதாகச் சற்று முன்னர் சொன்னீர்களே" என்று கேட்டபோது......

எனக்கு வேறு வேலை இருக்கிறது என்று ரெலிபோனை வைக்கப் போனார். அவரைத்தடுத்து நிறுத்தி, உங்கள் தரப்பு நியாயத்தைச் சொல்லுங்கள்" என்று கெஞ்சாத குறையாகக் கேட்டோம்.

ஆனால் அவரோ பழைய சூடு மாறாமலே இலங்கை செஞ்சிலுவைச் சங்க வவுனியாக் கிளையின் சேவைகள் அனைத்தும் பழைய மாதிரியே தொடர்கின்றன. இலவசமாகவே எல்லாச் சேவைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தேர்தல் மே மாதத்தில் நடக்க இருக்கிறது." என்று பொரிந்து தள்ளிவிட்டு ரெலிபோனை வைத்துவிட்டார்.

இன்னும் கேட்க இருந்த ஏராளமான கேள்விகளுக்குப் பதில் கிடைக்காத நிலையில் அடுத்து முன்னாள் செயலாளர் கிஷோரைச் சந்தித்தோம்.

அவரும் கடந்த வாரக் கட்டுரையில் தம்மைப்பற்றிக் குறிப்பிடப்பட்ட சில பகுதிகளுக்கு ஆட்சேபம் தெரிவித்துவிட்டுப் பின்வருமாறு கூறினார்:–

"நான் விடுதலையாகி 6 மாதங்களுக்கு மேலாகிவிட்டது. இன்னமும் ஏன் தேர்தலை நடத்தவில்லை ?.

நான் விடுதலையாகும்வரை காத்திருந்ததாகக் கூறப்படுவதெல்லாம் சும்மா சாட்டு. இவர்களுக்கு இந்த வசதிகளை விட்டுப்போக மனமில்லை. இதனையும் மீறி அடுத்த தேர்தலில் தெரிவாகும் வேறு ஆட்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டிய நிலை வரும் என்பதை அறிந்திருக்கிறார்கள். தற்போது வவுனியாக் கிளையில் உள்ள 3 வாகனங்களை செஞ்சிலுவைச் சங்கத்தின் வடக்கு–கிழக்கு இணைப்பு அலுவலகத்துக்கு மாற்றிவிட்டு வங்கியிலே வைப்பாக உள்ள சுமார் 5 லட்ச ரூபா பணத்தை தலைமைக் காரியாலயத்திடம் ஒப்படைத்துவிட்டு–

அடுத்து பதவி ஏற்கும் புதிய நிர்வாக சபையிடம் சொத்துக்களில்லாத வெறும் செஞ்சிலுவைச் சங்கக் கிளையை மட்டும் கையளிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதனைத் தட்டிக் கேட்டால் தலைவர் செயலாளரைச் சாட்டுகிறார். செயலாளர் தலைவரைச் சாட்டுகிறார் – இப்படி கிஷோர் கூறினார்.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் மே 31 ஆம் திகதிக்கு முன்னர் நிர்வாக சபைத் தேர்தலை நடத்தியே தீர வேண்டுமென இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்புத் தலைமைக் காரியாலயம் உத்தரவிட்டுள்ளது.

இதே வேளை விரைவிலே தேர்தலை நடத்த வேண்டுமெனக் கோரும் கையெழுத்து வேட்டையும் அங்கத்தவர்களால் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது.

**–வன்னி மைந்தன்**

## வீடு தேடி வந்து பசி தீர்க்கும் சேவை

பணத்தைக் கையில் எடுத்துச் சென்று பொருட்களைப் பையில் வாங்கி வந்த காலம் மாறிவிட்டது. இப்போது பணத்தைப் பையில் எடுத்துச்சென்று பொருட்களைக் கையில் வாங்கி வரும் அளவுக்கு விலைவாசிகள் ஏறிவிட்டன.

அதுபோல் நாம் ஹோட்டல்களுக்குச் சென்று உணவு வகைகளையோ அல்லது சிற்றுண்டிகளையோ வீட்டுக்கு வாங்கி வர வேண்டியிருக்கும்.

குழம்புக்கு ஒரு பாத்திரம், சட்னி, சாம்பாருக்கு ஒரு பாத்திரம் என்று தனித்தனியே கையில் எடுத்துச் செல்ல வேண்டும்.

இப்போது அந்தப் பாத்திர வகைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடலாம். வெறுங் கையுடன் சென்று எல்லாவற்றையும் தனித்தனி பொலித்தீன் பைகளில் நிரப்பி பொலித்தீன் கவரில் போட்டு எடுத்து வந்துவிடலாம். நகரம் மட்டுமல்ல கிராமங்களிலும் இப்போது இந்தப் பழக்கம் பரவி வருகிறது.

தற்போது இதற்கு ஒருபடி மேலாகச் சென்று உங்களுக்குப் பசிக்கிறதா? வீட்டில் உணவே சமைக்கவேண்டாம். உங்களுக்கு உதவ நாங்க தயார் என்கிறார்கள் சிலர்.

தொலைபேசியில் அறிவித்தால்போதும் வீடுகளுக்கே நேரடியாக உணவு வகைகளை சூட்டோடு சுவை மாறாமல் கொண்டு வருகின்றனர். அத்தனை பேருக்கும் பரிமாறிச் சாப்பிட்டவர்களை கைகளை அலம்பி தூங்க வைக்காத குறையாக எல்லாம் நடத்திச் செல்கின்றனர்.

வெளிநாட்டில் மட்டுமே இருந்த இந்தப் பழக்கம் இப்போது இலங்கையிலும் பரவிவிட்டது.

இது வீட்டிலுள்ள பெண்களைச் சோம்பேறிகளாக்குகிறது' என்ற குற்றச்சாட்டும் எழுந்திருக்கிறது.

## வாசகர் இதயம் பேசுகிறது

செடி முளைத்த ரயில்ப் பெட்டிகளும் துருப்பிடித்த தண்டவாளங்களும் எப்படிச் சீரழிகின்றன என்பதனை "மிஸ்டர் க்றோ" சிறப்பாகத் தந்திருந்தார்.

**- மே. சுதர்சன்**, கல்கிசை.

சுடர் ஒளியில் பிரசுரிக்கப்படும் "வேட புலத்தில்..." பகுதியில் இடம்பெறும் தகவல்கள் சுவை நிறைந்தவையாக இருக்கின்றன. வன்னி மக்கள்படும் துன்பங்களையும் விரிவாகத் தருவதற்கு நன்றி.

**- மண்ணூர் மைந்தன்**, யாழ்ப்பாணம்.

எழில் மிகு தாஜ்மஹாலுக்குள் ஒளிந்திருக்கும் இரண்டாவது காதல் பற்றி சுடர் ஒளி மூலம் அறிந்து வியந்தேன்.

**- எம். எம். எம். ஹசினி,** கல்முனைக்குடி-1.4.

"மிஸ்டர் க்றோ" நேரடியாகச் சென்று பிரச்சினைகளைக் கண்டறிந்து அம்பலப் படுத்துவதில் சூரர்தான்

**- சி. ராஜலட்சுமி**, பிளார்விவத்தை.

எழுதப்படாத சட்டங்கள் நாட்டில் வலுவடைந்து வருகின்றனவா? அவற்றை வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது சுடர்ஒளி.

**- கிஷ்ஜனா - நந்தகுமார்**, ஆரையம்பதி-02.

இந்தியா வழங்கிய கடற்படை விமானப்பிரிவு செயலிழக்கும் நிலைக்கு வந்து விட்டதா? பாத்திரம் அறிந்து பிச்சை போட்டிருக்க வேண்டும்.

**- க. மருதமுத்து**, மத்துகாமம்.

சூடானநாட்டின் படைபகுதிகளிலும் இள வட்டங்களின் அட்டகாசம் அதிகரித்திருப்பது பற்றி "வேடபுலத்தில்" பகுதியில் படித்து அதிர்ச்சி அடைந்தேன்.

**- த. வசந்தராஜா**, மொரட்டுவை.

"மரண தண்டனை" சிறுகதையைப் படித்த போது மனதில் எழுந்த போராட்டங்கள் எத்தனை?

**-- எம். எம். ராஸீக்**, மருதமுனை.

கிரிக்கெட் விளையாட்டின் ஒரு சகாப்தமாக ஜொலித்த பிரட்மன் பற்றி சுடர்ஒளி விளையாட்டுப் பகுதியில் சிறப்பாகத் தந்திருந்தீர்கள்.

**- கே. ஆர். விஜயகுமார்**, மட்டக்களப்பு.

"ஹூலையைப் பிடித்த கிரிக்கெட்கிலி "நகைச்சுவைச் சித்திரம் நன்கு சிரிக்க வைத்து விட்டது.

**- த. வைத்திலிங்கம்.**

# கப்டன் கூல் ஆடானபோது...

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்கவும் அவரது சகோதரர் பிரசன்ன ரணதுங்கவும் பாடசாலை மாணவர்களைத் தாக்கியதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மருதானையிலுள்ள அசோகா வித்தியாலய மாணவர்களே தாக்கப்பட்டவர்களாவர்.

கடந்த 2ஆம் திகதி இவர்கள் பாடசாலை மைதானத்தில் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்தபோது அருகிலுள்ள ரணதுங்க சகோதரர்களின் தாயாரின் வீட்டு வளவில் மாணவர்கள் அடித்த பந்து விழுந்து விட்டது.

இதனால் மாணவர்கள் மதிலேறிக் குதித்து பந்தை எடுக்க முற்பட்டபோதே இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது.


அர்ஜுன

''நாம் கிரிக்கெட் விளையாடும்போது பந்து அர்ஜுனவின் வீட்டில் விழுந்துவிட்டது. அதனால் நாம் மதில் வழியாக ஏறிப் பந்தை எடுத்துத் தருமாறு கோரினோம். அதற்கு அர்ஜுனவின் தாயார் எம்மை ஏசினார். இதையடுத்து அங்கிருந்த ஒரு 'மேசன்' மற்றும் இருவர் எம்மைத் துரத்திக் கொண்டு வந்தனர்.

நாம் மதிலேறிக் குதித்து ஓடினோம். அவர்கள் மாணவன் ஒருவனை இரும்பினால் தாக்கினர். துப்பாக்கியைத் தலையின் அருகே வைத்து வானத்தை நோக்கிச் சுட்டனர். மேலும் ஐவரை அவர்கள் தாக்கினர்.

பின்னர் அர்ஜுன, பிரசன்ன உட்பட பத்துப்பேரளவில் பாடசாலை நுழைவாயில் வழியாக வந்து மாணவர்களைத் தாக்கினர். நாம் ஆசிரியர் ஒருவரிடம் ஓடி முறையிட்டோம். அங்கே வந்த ஆசிரியரையும் அவர்கள் ஏசினார்கள்.

பின்னர் மதில்வழியாக ஏறி அவர்களது வீட்டுவளவினுள் குதிக்கும்படி கூறினார்கள். நாம் பயத்தினால் அவ்வாறே செய்தோம். அங்கே அர்ஜுனவின் தாயாரை வணங்கி மன்னிப்புக் கோரும்படி கூறினார்கள். அங்கேயும் எம்மை அடித்தார்கள். புகைப்படமும் எடுத்தனர்.

அப்போது அங்குவந்த பொலிஸ் அதிகாரியொருவர் 'மாணவர்களை அடிக்க வேண்டாம் என்றார். அப்போது பொலிஸாரையும் அவர்கள் ஏசியதோடு புகைப்படமும் எடுத்தனர். பின்னர் பொலிஸார் எம்மை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர்'' இவ்வாறு காயமடைந்த மாணவர் ஒருவர் கூறியுள்ளார்.

ஆனால் தம்மிக ரணதுங்க தானோ அல்லது அர்ஜுனவோ மாணவர்களைத் தாக்கவேயில்லை என்று கூறுகிறார்.

''அன்றைய தினம் எமது தாயாரின் வீட்டு வளவில் விழுந்த பந்தை எடுக்க மாணவர்கள் வந்துள்ளனர். எமது வீட்டில் வாய்பேச முடியாத பணிப் பெண் ஒருவர் உள்ளார். மாணவர்கள் அவரிடம் பந்தை எடுத்துத் தருமாறு கேட்டுள்ளனர். அப்பெண்ணுக்கு அது புரியவில்லை.

அதன்பின் வளவினுள் குதித்த மாணவர்கள் அப்பெண்ணைப் பலகையால் அடித்துள்ளனர். இதையடுத்து வேலையாட்கள் மாணவர்களைத் தாக்கியுள்ளனர். அப்போது வெளியே வந்த எமது தாயாரையும் மாணவர்கள் மிக மோசமான வார்த்தைகளால் ஏசியுள்ளனர். இதை சகிக்க முடியாத வீட்டார் மாணவர்களைத் தாக்கியுள்ளனர். இது உண்மை.

ஆனால் நானோ அர்ஜுனவோ அப்போது வீட்டில் இருக்கவில்லை. எனினும் தாயாருக்கு இவ்வாறு ஏசியதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. நான் இருந்திருந்தால் நானும் தாக்கியிருப்பேன். ஆனாலும் நான் அப்போது வீட்டில் இருக்கவில்லை.

நான் வாகனத்தில் தாயாரின் வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தேன். தொலைபேசி மூலம் தகவல் கிடைத்தது. பாடசாலை அதிபரிடம் முறையிடுவதற்காக நான் நேராக பாடசாலைக்குச் சென்றேன். அதிபர் இருக்கவில்லை. பின் தாயார் வீட்டுக்கு வந்தேன். அப்போது பொலிஸாரும் வந்து மாணவர்களை அழைத்துச் சென்றனர்'' என்று கூறினார் பிரசன்ன.

பிரசன்ன ரணதுங்க மேல் மாகாண சபை உறுப்பினர். அத்தோடு இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் உப தலைவர்களில் ஒருவர். அத்தோடு அசோகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களில் ஒருவருமாவார்.

தாக்குதல் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யுமாறு கோரி கடந்த ஞாயிறு, திங்கள் தினங்களில் அசோகா வித்தியாலய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய விசேட பொலிஸ் குழுக்களும் அமைக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த 6ஆம் திகதியன்று பிரசன்ன உட்பட நால்வர் பொலிஸில் சரணடைந்தனர். இவர்கள் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது இவர்களை எதிர்வரும் மார்ச் 14ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

'கப்டன்கூல்' என முன்பு செல்லமாக அழைக்கப்பட்ட அர்ஜுன ரணதுங்க இச்சம்பவத்தின் பின்னர் வெளிநாடு சென்றிருந்தார்.

கென்யாவில் நடைபெற்ற கண்காட்சிக் கிரிக்கெட் போட்டியொன்றில் பங்குபற்றுவதற்காகவே அவர் சென்றார். அர்ஜுனவையும் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில் கடந்த புதனன்று நாடு திரும்பிய அர்ஜுன பொலிஸாரிடம் சரணடைந்தார். நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது 5,000 ரூபா ரொக்கப் பிணையிலும் 50,000 ரூபா சரீரப் பிணையிலும் விடுதலை செய்யப்பட்டார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த சில மாணவர்கள் சிகிச்சையின் பின் உடனடியாக வீடு திரும்பினர். இருவர் கடந்த செவ்வாயன்று வீடு திரும்பினர். மேலும் ஒருவர் புதனன்றும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

# விளையாட்டுச் சங்கங்களின் தலைமைக்கு அமைச்சர்கள்

தேசிய விளையாட்டுச் சங்கங்கள் பலவற்றின் நிருவாகிகளுக்கான தேர்தல்கள் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளன.

இவற்றின் தலைமைப் பதவிகளைக் கைப்பற்ற அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சர்களும் ஆர்வம் காட்டுகின்றனர். இப்பதவிகளுக்குப் போட்டியிட ஏற்கனவே ஐந்து அமைச்சர்களுக்கு விளையாட்டுத்துறை அமைச்சின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

மீன்பிடி நீரியல் வளத்துறை அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ (எல்லே சம்மேளனம்), மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன (ஜிம்னாஸ்டிக் சம்மேளனம்), பொதுநிருவாக மாகாண சபைகள் அமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க (ஹொக்கி சம்மேளனம்), காணி அபிவிருத்தி சிறு ஏற்றுமதித் துறை அமைச்சர் சாலிந்த திஸாநாயக்க (மல்யுத்த சம்மேளனம்), கிராமியக் கைத்தொழில் அமைச்சர் மஹிபால ஹேரத் (கபடி சம்மேளனம்) ஆகியோரே இவ்வமைச்சர்களாவர்.

சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைமைப் பதவிக்குப் போட்டியிடுமாறு கேட்கப்பட்டார்.

அனுராவுக்கும் இப்பதவியில் ஆர்வமுண்டு. ஆனால் தேர்தலில் போட்டியிட்டு மோதல்களை உருவாக்கிக்கொள்ள அவர் விரும்பவில்லை. போட்டியின்றித் தேர்வு செய்வதானால் நான் தயார் என்று கூறி விட்டார் அனுரா.

இதேவேளை தற்போது பயிற்று


லக்ஷ்மன் கிரியெல்ல

நர்களாகப் பணிபுரிபவர்கள் குறிப்பிட்ட விளையாட்டுச் சங்கங்களின் உயர் பதவிக்குத் தெரிவு செய்யப்படக் கூடாது என சட்டமொன்றைக் கொண்டு வர விளையாட்டுத் துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தீர்மானித்துள்ளார்.

இதையடுத்து சில விளையாட்டுச் சம்மேளனங்களின் தலைவர்கள் தமது பயிற்றுநர் பதவியைத் துறந்துள்ளனர்.

பல மாவட்டச் சங்கங்களுக்கு பயிற்றுநர்களே தலைவர்களாகத் தெரிவு செய்யட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்


# மே.இ. அணித் தலைவராக ஹூப்பர் நியமனம்

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக கார்ல் ஹூப்பர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்க அணியுடன் ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் மேற்கிந்திய அணி விளையாடவுள்ளது. முதலாவது போட்டி மார்ச் 9 ஆம் திகதி ஆரம்பமாகிறது. இத்தொடரில் முதன்முறையாக ஹூப்பரின் தலைமையில் மேற்கிந்திய அணி விளையாடுகிறது.

34 வயதான ஹூப்பர் மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான கயானா நாட்டைச் சேர்ந்தவர். 80 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 33.76 எனும் ஓட்ட சராசரியையும் 182 ஒருநாள் போட்டிகளில் பங்கு பற்றி 47.01 எனும் சராசரியையும் கொண்டுள்ளார்.


ஹூப்பர்


அடம்ஸ்

ஹூப்பர் கிரிக்கெட்டில் திறமையானவர் எனினும் அவரது முந்தைய நடத்தைகள் சில விமர்சனத்துக்கு உட்பட்டவையாகவுள்ளன.

ஆரம்பத்தில் 19 வயதின் கீழ் கயானா அணியின் தலைவராக ஹூப்பர் நியமிக்கப்பட்டார். எனினும் பின்னர் துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்துவதற்காக தலைமைப் பதவியைத் துறந்தார்.

1995இல் இங்கிலாந்துடனான சுற்றுப்போட்டியின் போது அனுமதி பெறாமல் அணியிலிருந்து வெளியே சென்றமைக்காக அபராதம் விதிக்கப்பட்டது.

1997இல் ஹொங்கொங்கில் நடைபெற்ற அணிக்கு ஆறுபேர் கொண்ட போட்டித் தொடருக்கு மேற்கிந்திய அணித்தலைவராக நியமிக்கப்பட்டார். அதிலும் ஏற்பாட்டாளர்களுடனான ஒரு மோதலால் விளையாட மறுத்தார்.

1998இல் இங்கிலாந்து அணிக்கெதிரான போட்டியில் கயானா அணி சார்பில் பங்குபற்றுமாறு அணி முகாமையாளர் வெஸ்லி ஹோல், பயிற்றுநர் மல்கம் மார்ஷல் ஆகியோர் கூறிய அறிவுறுத்தல்களைப் புறக்கணித்தமைக்காக அபராதம் விதிக்கப்பட்டார்.

1999இல் நடந்த உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு மூன்று வாரங்களே இருந்தபோது - ஏற்கனவே அத்தொடரிற்குத் தெரிவு செய்யப்பட்ட நிலையில் - சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். (1996 உலகக் கிண்ணப் போட்டிகளிலும் இவர் மலேரியா நோய் காரணமாகப் பங்கு பற்றவில்லை.)

இதனால் ஒரு புதிரான மனிதராக கார்ல் ஹூப்பர் கருதப்படுகிறார்.

மேற்படி காரணங்களால் அணித் தலைவர் தெரிவின் போது நான்கு தேர்வாளர்களில் ஒருவர் இவரது நியமனத்திற்கு எதிராக வாக்களித்தார்.

ஆனால் தற்போது ஹூப்பர் மேற்கிந்தியத் தீவுகளின் 'திருந்திய மகனாக'க் கருதப்படுகிறார்.

மேற்கிந்திய அணி அவுஸ்திரேலியாவில் அடிவாங்கிக் கொண்டிருந்த போது மேற்கிந்திய அணியில் விளையாட சம்மதித்தார் ஹூப்பர்.

அத்தோடு மேற்கிந்தியத் தீவு அணிகளுக்கிடையிலான புஸ்டாக் கிண்ணத் தொடரில் அவர் காட்டிய திறமை தலைமைப் பதவியும் அவருக்கே வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்படுத்தியது.

இம்முறை புஸ்டாக் கிண்ணத் தொடரில் எட்டுப் போட்டிகளில் பங்குபற்றி 889 ஓட்டங்களைக் குவித்தார். சராசரி 97. அத்துடன் 24 விக் கட்டுகளையும் கைப்பற்றினார்.

இதற்கிடையில் ஹூப்பரை தலைவராக நியமிக்காவிட்டால் 'புஸ்டா கிண்ணப் போட்டிகளைப் பகிஷ்கரிக்கப் போவதாக கயானா நாட்டவர்கள் சிலர் கூறியிருந்தனர்.

மேற்கிந்திய அணி வெளிநாடுகளில் இறுதியாக விளையாடிய 20 டெஸ்ட் போட்டிகளில் 18இல் தோல்வியுற்றுள்ளது.

எனினும் உள்ளூரில் கடந்த 27 வருடங்களில் ஒரேயொரு தடவையே டெஸ்ட் தொடரில் தோல்வியைச் சந்தித்துள்ளது.

தவிர ஹூப்பரின் சொந்த நகரான ஜோர்ஜ்டவுனிலேயே முதலாவது போட்டி நடைபெறுகிறது. இவை அவருக்கு உற்சாகத்தைக் கொடுக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

முன்னாள் தலைவர் ஜிம்மி அடம்ஸின் நிலை தான் பரிதாபம். தலைமைப் பதவி பறிக்கப்பட்டமை மட்டுமல்ல, அவுஸ்திரேலியாவில் அவரது துடுப்பாட்டம் பலவீனமாக இருந்ததால் இத்தொடருக்கான 15 பேர் கொண்ட குழாமில்கூட அவர் சேர்க்கப்படவில்லை.

புதிய தலைவர் நியமனம் மேற்கிந்திய அணியின் தோல்விகளை முடிவுக்குக் கொண்டுவருமா? அல்லது தலைமை மாற்றம் தலைவலிக்குத் தலையணையை மட்டும் மாற்றியது போலாகுமா? என்பது அடுத்த மாதம் தெரியவரும்.

# ஷுமாக்கர், ஹிங்கிஸ் வருமானத்தில் முன்னணி

கடந்த வருடத்தில் கூடுதலாக வருமானம் பெற்ற விளையாட்டு நட்சத்திரங்களின் விவரங்களை ஃபோர்பஸ் சஞ்சிகை பட்டியலிட்டுள்ளது.

வீரர்களில் ஜேர்மன் பந்தயக் காரோட்ட வீரர் மைக்கல் ஷுமாக்கர் முன்னணியில் உள்ளார். இரண்டாவது இடத்தில் கோல்ஃப் நட்சத்திரம் டைகர் வூட்ஸ் திகழ்கிறார்.


ஷுமாக்கர்

பெண்களில் முதல் ஐந்து இடங்களையும் டென்னிஸ் வீராங்கனைகளே கைப்பற்றியுள்ளனர். இவர்களில் முன்னணியில் உள்ளவர்கள் விவரம் பின்வருமாறு: (வருமானம் டொலர்களில்)


ஹிங்கிஸ்

ஆண்கள்:

1. மைக்கல் ஷுமாக்கர் (ஜேர்மன்) பந்தயக் காரோட்டம். 59 மில்லியன்
2. டைகர் வூட்ஸ் (அமெரிக்கா) - கோல்ஃப்- 53 மில்லியன்
3. மைக் டைசன் (அமெரிக்கா) - குத்துச்சண்டை - 48 மில்லியன்
4. மைக்கல் ஜோர்டன் (அமெரிக்கா) - கூடைப்பந்தாட்டம்-30மில்லியன்
5. கிராண்ட் ஹில் (அமெரிக்கா) - கூடைப்பந்தாட்டம்- 26 மில்லியன்
6. டேல் ஏர்ன்ஹார்ட் (அமெரிக்கா) - காரோட்டம்- 24.5 மில்லியன்
7. ஷகில் ஓ நீல் (அமெரிக்கா) - கூடைப்பந்தாட்டம்-24 மில்லியன்
8. லெனோக்ஸ் லூவிஸ் (பிரிட்டன்) - குத்துச்சண்டை-23மில்லியன்
9. ஒஸ்கார் டி லா ஹோயா (அமெரிக்கா) - குத்துச் சண்டை- 23 மில்லியன்
10. கெவின் கார்னெட் (அமெரிக்கா) - குத்துச்சண்டை - 21 மில்லியன்

பெண்கள்:

1. மார்ட்டினா ஹிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) - டென்னிஸ் 11 மில்லியன்
2. ஆனா கோர்னிகோவா (ரஷ்யா) - டென்னிஸ்- 10 மில்லியன்
3. வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா) - டென்னிஸ் - 10 மில்லியன்
4. செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) - டென்னிஸ்- 7.5 மில்லியன்
5. லின்ட்ஸே டெவொன்போர்ட் (அமெரிக்கா) - டென்னிஸ்- 6 மில்லியன்

# நூல் வெளியீட்டில் சாதனை படைத்தவர்

மலையக எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட்டவர் துரை விஸ்வநாதன். 1996 ஆம் ஆண்டு துரைவி பதிப்பகம் உருவாக்கப்பட்டது. அடுத்த வருடமே பெப்ரவரி மாதத்தில் 'மலையகச் சிறுகதைகள்' என்ற நூல் வெளியிடப்பட்டது. மலையகத்தைத் தளமாகக் கொண்டு எழுதப்பட்ட 52 சிறுகதைகள் நூலின் அடக்கப் பொருள்களாயின. அன்று முதல் 21.12.1998இல் அன்னார் மறையும் வரை 9நூல்களை வெளிக் கொணர்ந்து விட்ட அதிசய சாதனை அவருடையது.



துரை விஸ்வநாதன்

தினகரன் பத்திரிகையுடன் இணைந்து அகில இலங்கை ரீதியில் சிறுகதைப் போட்டியொன்றினை நடத்தினார். இதற்கு ரூ10,000/- பரிசாகக் கொடுத்தார். பதினைந்து கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவை தொகுக்கப்பட்டு அழகியதொரு தொகுதியாக்கப் பட்டன. தொகுதியை வாசித்துக் கொண்டிருந்த போதே அவர் இவ்வுலகை நீத்தார். அந்தத் துயரம் இந்த நாட்டின் எழுத்தாளர் ஒவ்வொருவரையும் மீள முடியாத சோகத்தில் ஆழ்த்தியது எனில் மிகையில்லை.

அன்னாரின் மூன்றாவது நினைவு தினம் சுகததாச ஸ்போர்ட்ஸ் ஹோட்டலில் 28.02.01 அன்று நடைபெற்றது. எழுத்தாளர்களாலும் ஊடகவியலாளர்களாலும் மண்டபம் நிரம்பிக் காட்சியளித்தது.

பேராசிரியர் சோ. சந்திரசேகரன் தலைமை வகித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் பி.பி.தேவராஜ், மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் உட்பட பல பிரமுகர்களும் உரை நிகழ்த்தினர். அனைவரும் அன்னாரின் மனிதநேய உணர்வுகள், மலையகப் படைப்புக் களை அவர் வெளிக்கொணர்ந்த விதம் ஆகியவற்றின் நினைவலை களையே வெளிப்படுத்தினர்.

அவருடைய மகன் ராஜ்பிரசாத் தமது நன்றியுரையின் போது தந்தை துரை விஸ்வநாதன் பொதுவாக சகல எழுத்தாளர்களையும் நேசித்தமையை யும் ஒவ்வொரு எழுத்தாளருடனும் நெருக்கமாகப் பழகியதையும் விவரித்த போது மனம் நெகிழ்வடைந்தது.

அமரர் துரை விஸ்வநாதன் சிறந்ததொரு இலக்கிய ஆர்வலர் என்ற நிலையைக் கடந்து 'மலையகச் சிறுகதைகள்' உழைக்கப் பிறந்தவர்கள். பாலாயி, மலையகம் வளர்த்த தமிழ், சக்தி பாலையா கவிதைகள், ஒரு வித்தியாசமான விளம்பரம், மலையக மாணிக்கங்கள், பரிசு பெற்ற சிறுகதைகள் ஆகிய நூல்களைத் தரமான வடிவத்தில் அழகிய நூல் களாக வெளியிட்டார். அந்த நூல்கள் அவர் ஒரு சிறந்த பதிப்பாளர் என்பதை வெளிப்படுத்தின.

அவரது இலக்கிய நெஞ்சமும் கவித்துவ உணர்வுகளும் எவ்வளவு உயர்வானவை என்பதை அவர் ரசித்த ஓர் ஆங்கிலக் கவிதை மூலம் அறிய முடியும். வாழ்க்கைக்கு வழி காட்டியான அந்தக் கவிதை இதுவே:-

நூல் தந்த உண்மை எல்லாம் அகத்தில் கூட்டி நுரை தள்ளும் மாடெனவே உழைத்த பின்னும் தோல்வியெனும் வஞ்சகனின் பிடியில் சிக்கி தூண்டிலிலே புழுபோலத் துடிக்கும் போதும் கால் வந்து தலைமேல் அடிக்க வெற்றிக்களிப்பினிலே நீ பாய்ந்து ஓடும் போதும்.

தோல்வியினை வெற்றியோடு சமமாய் எண்ணித் தொழிலாற்ற முடியுமெனில் மனிதன் நீயே.

**கலையமுதம்**

கே. விஜயன்

## இலக்கிய நிகழ்வுகள்

### வ.அ. இராசரத்தினம் நினைவுதினம்

முதுபெரும் எழுத்தாளர் அமரர் வ.அ.இராசரத்தினம் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் 11.03.01 அன்று ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 5.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

சட்டத்தரணி சோ. தேவராஜா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத் தில் த.கோபாலகிருஷ்ணன், இளைய தம்பி தயானந்தா, செ. யோகநாதன் ஆகியோர் உரை நிகழ்த்துவர். டாக்டர் ஜின்னா ஷரிபுதீன் கவிதாஞ்சலி நிகழ்த்துவார்.

### இராஜேஸ்வரி சண்முகத்திற்கு பாராட்டு விழா

வானொலி புகழ் இராஜேஸ்வரி சண்முகத்தின் சேவையைப் பாராட்டும் முகமாக 'காற்றின் சுவடுகள்' எனும் நூல் வெளியீடு 16-03-01 அன்று வெள்ள வத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் பி.பகல் 5.00 மணிக்கு நடைபெறும்.

அமைச்சர் அலவி மௌலானா, நாடாளுமன்ற உறுப்பினர் பி.சந்திரசேகரன் உட்பட இந்தியாவிலிருந்தும் பல பிர முகர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்வர்.

### நூல் நயம்

கொழும்புத்தமிழ்ச்சங்கமண்டபத்தில் வெள்ளி தோறும் நடைபெறும் நூல்நயங் காணல் நிகழ்ச்சியில் 16-03-01 அன்று அருணா செல்லத்துரை எழுதிய 'நந்தி உடையார்' நாடக நூலின் நயவுரைத்தல் இடம் பெறும். எழுத்தாளர் கே.விஜயன் நூல்நயம்செய்வார்.

# நல்ல நாடகத்துக்கு ஏற்பட்ட 'விலங்கம்'

சிலோன் யுனைட்டட் ஆர்ட் ஸ்டேஜ் குழுவினரின் 'சலனம்' நாடகம் 25-02-01 அன்று மருதானை டவர் அரங்கில் மேடையேறியது. இரு காட்சிகள் நடைபெற்றன. மாலை 6.30 மணி காட்சி மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தான அறங்காவலர் பொன். வல்லிபுரம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

அவர் தமது தலைமை உரையில் நாடகக் கலையின் தன்மை, இளமைக் காலத்தில் தாம் நாடகக் கலையுடன் எவ்வாறு பின்னிப் பிணைந்து போயிருந்தது என்பன குறித்துக் கூறினார். இன்றைய கலை உலகம் பல்வேறு சீர்கேடுகளுக்குள்ளாகி இருக்கின்றது என்ற மனக் கவலையும் அவருடைய உரையில் தொனித்தது.

'சலனம்' நாடகத்தின் கதையை எழுதியவரான கலாபூஷணம் ஏ.ஏ.ஜுனைதீன் உரை நிகழ்த்தினார். மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராகப் பேசிய அவர் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் இலங்கை நாடகத் துறைக்கு எதுவும் செய்யவில்லை. அவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகள் என்று குற்றஞ் சாட்டினார். அதற்கு ஆதாரமாக கடந்த காலத்தில் நடை பெற்ற அரச நாடக விழா சம்பந்தமான விபரங்களை எடுத்துக் கூறினார்.

தமிழ் நாடகங்களின் போது வழக்க மாகவே இடம்பெறும் பெரியவர் களுக்கு மாலையிடும், புகழாரம் சூட்டும் நிகழ்வுகள் முடிந்து 7.00 மணி கடந்தே நாடகம் ஆரம்பமானது.

ஒளி அமைப்புகளின் உதவியோடு காட்சி மாற்றம் நிகழ்த்தப்பட்டமையால் நாடகம் சலிப்பின்றி நகர்ந்தது.

கதையில் குழப்பமில்லை. ஓர் எழுத் தாளனின் கஷ்டமான மனநிலை யையும், குடும்பப் பிரச்சினைகளையும் அரசியல்வாதியாக மாறிவிடும் ஓர் இளமைக் கால நண்பனின் அஷாடபூதித் தனத்தையும் கதை சொல்கிறது. கருத்துள்ள கதை.

நடிகர்கள், அனைவருமே நல்ல குரல் வளமுடன் பேசி, நடிப்பில் அனுபவ முத்திரையினைப் பதிக்கிறார்கள்.

அரசியல்வாதியாக வரும் மோகன் குமார், எழுத்தாளனின் மனைவியாக வரும் மணிமேகலை, மகன் அகிலனாக வரும் உங்கள் பாக்கியராஜ், எழுத்தாளராக வரும் கதிர் சத்குருநாதன் மற்றும் எஸ்.கந்தையா, ஏ.வீர புஷ்பநாதன், ஆர்.தியாக மலர், எஸ்.பிரவின்குமார் அனைவருமே தத்தம் பாத்திரங்களுக்கே உரிய குணவியல்புகளுடன் ரசிகர்கள் அனைவரின் நெஞ்சங்களையும் தொட்டு விடும் அளவிற்கு திறம்பட நடித்தார்கள்.

நாடகம் ஓர் உயர்கலை என்பதுடன் மேடையேற்றத்தின் போது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளச் செய்வது - காட்சிகளை எளிமையாக அமைப்பதன் மூலம் கதை நகர்த்தலை ரசிகர்களின் பொறுமையை மீற விடாமல் செய்யலாம். அநாவசியமான உரையாடல்கள் சலிப்பை உண்டு பண்ணும். அவற்றைத் தவிர்ப்பது நெறியாளரின் பொறுப்பாகும்.

டைரக்டர் செல்வராஜ் சில இடங்களில் பாராட்டுக்குரிய வராகிறார். சில காட்சிகளின் போது 'அடக் கடவுளே' என தலைக் கேசத்தை பிய்த்துக்கொள்ள வைக் கிறார். அப்படியும் சில காட்சிகள்!

நாடகத்தின் இறுதிக் காட்சி இடம் பெறவில்லை. நேரம் கடந்துவிட்டது என்ற குற்றச்சாட்டுடன் அரங்கின் முகாமையாளர் நாடகத்தைத் தொடர்ந்து நடத்த அனுமதி மறுத்துவிட்டார்.

உண்மையிலேயே இந்த டவர் அரங்கு தமிழ் தலைவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்த உண்மை ஒருபுறம் இருக்க இத்தகைய ஆத்திரமூட்டும் நடவடிக்கை எந்த மொழிக் கலைக்கும் சாவு மணியடிப்பதாகும்.

மொத்தத்தில் 'சலனம்' ஒரு நல்ல நாடகம்.

# 'காலம் கடந்து வெளிவந்த நூல்'

டாக்டர் எம்.எல்.நஜிமுதீன் எழுதிய "இஸ்லாமும் குடும்பத் திட்டமும்" நூல் வெளியீட்டு விழா கடந்த மாதம் 25ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. டாக்டர் எஸ்.எப்.எல். அக்பர் தலைமை வகித்தார்.

நிரோஷன்-பாலேஸ்வரன் தமிழ் வாழ்த்தினைப் பாடினார்.

வரவேற்புரையை ஜின்னா ஷெரிபுதீன் நிகழ்த்தினார்.

டாக்டர் அக்பர் தனது உரையில் தனித்துவமான பரிபூரணத்துவ கௌரவத்தைத் தாய்மைக்கே கொடுக்க வேண்டும். நான் அவ்வாறே செய்வேன். நபிகள் நாயகம் கூட தாயின் காலடி தான் சொர்க்கம் எனக் கூறுகிறார் எனத் தெரிவித்து தமது உரையில் மேலும் கூறியதாவது:-

இயற்கையான முறையில் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள மக்கள் விரும்புகிறார்கள் இல்லை. சிசேரியன் முறைமூலமே பெறவிரும்புகின்றனர்.

இன்று திருமணப் பருவம் தாமதமடைகிறது. அதியுயர் கல்வியை அவர்கள் மேற்கொள்வதே இதற்கு அடிப்படைக் காரணம். இதனால் முஸ்லிம்களுக்கு உயர் கல்வி தேவைதானா என எண்ணத் தோன்றுகிறது என்று குறிப்பிட்டார்.

குடும்பத்திட்ட ஆலோசகரான திருமதி யோகா- பாலச்சந்திரன் அங்கு பேசுகையில் :-

நஜிமுதீனின் எழுத்துகளில் ஜீவன் இருக்கிறது. ஆத்மார்த்தமாக தனது உணர்வுகளையும் வெளிப்படுத்தியுள்ளார். இன்றைய சினிமா கிழவர்களைக் கூட ஆட்டம் போட வைக்கிறது. சமூகத்தில் பாலியல் பிரச்சினைகள் பெருகிக் கொண்டே போகின்றன எனக் குறிப்பிட்டார்.

பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எஸ்.அனஸ் சிறப்புரை ஆற்றுகையில்:-

கருச்சிதைவு செய்யவேண்டாம் என நாம் கூறினாலும் அதையும் மீறிக் கருச்சிதைவு செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகம். அந்த வகையில் இது காலம் தாழ்த்தி வெளிவரும் புத்தகமாக அமைந்துள்ளது என்றார்.

ஒரு குடும்பத்தில் இரண்டு மூன்று பிள்ளைகள் பெற்றால் போதும் எனக் கூறுகின்றனர். ஆனால் முழு சமூகத்திற்கும் இன்று அதிகம் பேர் தேவைப்படுகிறார்கள்.

எமது நாட்டில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வீரவிதான இயக்கம் சிங்கள மக்கள் அதிக பிள்ளைகளைப் பெறவேண்டும் எனக் கூறுகிறது. இப்படி இருக்கும் போது சிறுபான்மையினரான முஸ்லிம்கள் ஏன் அதிக பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடாது என வினா எழுப்பினார்.

கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி நூலை ஆய்வு செய்தார். எழுத்துத் துறையில் ஒவ்வொரு வகையிலும் அரும்பணியாற்றிய பெருந்தகைகள் மேடையில் புத்தகம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

பதிலுரை ஆற்றிய டாக்டர் எம்.எல்.நஜிமுதீன் தனது உரையில் 'வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்ட 102 நூல்களின் உதவியோடு இரண்டு வருடமாகப் படித்து ஆராய்ந்தே இப் புத்தகத்தை எழுதினேன். இந் நூலை வாசகர்கள் நிதானமாகவும் அவதானமாகவும் வாசிக்க வேண்டும்' என வேண்டுதல் விடுத்தார்.

பேராசிரியர் சோ.சந்திரசேகரம், கலாசூரி ஆர்.சிவகுருநாதன் ஆகியோரும் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

கவிஞர் ஏ.இக்பால் நன்றியுரை நிகழ்த்தினார்.

கே.மயூரன்

# பயந்துபோய் புலிகளை பேச்சுக்கு அழைக்கவில்லை

## சுதந்திரக்கட்சி மாநாட்டில் ஜனாதிபதி நிலைமை பற்றி விளக்கம்


மக்களுக்கு ஜனாதிபதி கை கூப்பி வணக்கம்

இனப் பிரச்சினையில் ஒரு பெரும் பிரச்சினையாக அரசினால் பேசப்பட்டு வந்த 'புலிகள் இயக்கத்துக்கு எதிரான பிரிட்டனின் தடை' ஒருவாறாக ஒரு முடிவைக் கண்டு விட்டது. பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் புலிகள் இயக்கத்தையும் பிரிட்டன் சேர்த்துக் கொண்டுள்ளது. இது குறித்து அரசு நிம்மதி அடையலாம்.

புலிகள் இயக்கத்தை பிரிட்டன் தடை செய்யாவிடின் இரு நாடுகளின் உறவுகளும் பாதிக்கலாம் எனக் கூறி வந்தவர் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர். தடை செய்யப்பட்ட மறு நாளே அவர் பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி பிரிட்டனுக்கு நன்றியும் தெரிவித்தார்.

"பிரிட்டனின் தடை பயங்கரவாதத்துக்கு எதிரானதேயன்றி தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல. இந்த யதார்த்தத்தை சிங்கள மக்கள் புரிந்து கொண்டு பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். இனி சமாதானமே தேவை என்றும் அமைச்சர் கதிர்காமர் பத்திரிகையாளர் மாநாட்டில் சுட்டிக் காட்டினார்.


ஜனாதிபதி மாநாட்டு மேடைக்கு அழைத்து வரப்படுகிறார்.

சமாதானம் தேவை என்பதில் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. ஆனால் அதனை அடையும் வழிகளில் தான் அபிப்பிராய பேதம் இருக்கிறது. அரசாங்கத்துக்குள்ளும் அபிப்பிராய பேதம் உண்டு.

கடந்த ஞாயிறன்று கொழும்பில் சுதந்திரக் கட்சிகளின் 13 ஆவது வருடாந்த மாநாடு பெரும் ஆரவாரத்துடன் கொண்டாடப்பட்டது. ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட கட்சித் தொண்டர்கள், ஆதரவாளர்கள் மாநாடு நடைபெற்ற பழைய குதிரைப் பந்தயத் திடலில் திரண்டிருந்தனர். ஜனாதிபதி சந்திரிகா பிரதான உரை நிகழ்த்தினார். பிரிட்டனின் தடைக்குப் பிறகு ஜனாதிபதி ஆற்றிய உரை இதுவாகும்.

"இதற்கு 14 மாதங்களுக்கு முன்னர் புலிகள் இயக்கம் என்னைக் கொல்ல முயன்றது. அதற்கு மூன்று தினங்களுக்குப் பின் நான் ஜனாதிபதியாகப் பதவியேற்றேன். இந்த கொடூர யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு நான் அப்பொழுது புலிகள் இயக்கத்திடம் கூறினேன். பயத்தினாலோ அல்லது பின்னடைவினாலோ நான் அப்படிக் கூறவில்லை. எமது நாட்டின் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டவே அப்படிச் செய்தேன்.


ஜனாதிபதியும் கட்சித் தலைவர்களும் மேடையில் காணப்படுகின்றனர்.

யுத்தம் செய்ய வேண்டிய வேளையில் அதைச் செய்ய எனக்குத் தெரியும். ஜனநாயகமும் மனித உரிமையும் பாதுகாக்கப்படும் வகையில் யுத்தத்தை சரியாகச் செய்து வருகிறோம். ஏற்கனவே அதில் வெற்றியும் அடைந்துள்ளோம். ஆனால் இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர புலிகளுடன் பேசுவதற்கு நான் இப்பொழுதும் தயாராக இருக்கிறேன்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினை குறித்து தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

புலிகள் இயக்கத் தடைக்காக மாநாட்டில் அமைச்சர் கதிர்காமருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புலிகளுடனான பேச்சில் அரசு முன்வைக்கப் போகும் தீர்வுத்திட்டம் என்ன? ஜனாதிபதி சந்திரிகா ஏற்கனவே ஒரு தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளார். நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் எழுந்த எதிர்ப்பை அடுத்து அந்த தீர்வுத் திட்டம் இடையில் கைவிடப்பட்டது தெரிந்ததே.

மாகாணசபைத் தீர்வை விடக் கூடுதலான ஒரு தீர்வு இது என வருணிக்கப்பட்டது.

சுதந்திரக் கட்சியின் 13ஆவது வருடாந்த மாநாட்டில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவும் உரை நிகழ்த்தினார். அரசமைப்பின் 13ஆவது திருத்தம் குறித்து அவர் பேசுகையில், அத்திருத்தத்தை பயன்படுத்தி வடக்கு—கிழக்கு மாகாண சபைக்கு முழு அளவிலான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும் எனக் கூறினார். புலிகளுக்காக காத்திருக்காமல் அரசு செயல்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதி வழங்கப் போகும் தீர்வா அல்லது அமைச்சர் டக்ளஸ் கோரும் தீர்வா சிறந்தது என்பது ஆராயப்பட வேண்டிய விடயம் ஆகும்.

பொ.ஐ. முன்னணி அரசின் பிரதமரான ரத்னசிறி விக்கிரமநாயக்க புலிகளை ஒழித்துக்கட்டும் வரை போர் தொடர வேண்டும் என்ற போர் முரசையே இன்னும் கொட்டி வருகிறார். படைக்கு மேலும் ஆட்களைத் திரட்டும் காரியத்தையும் செய்து வருகிறார். பிரிட்டனின் தடை அவரது கடும் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்துமோ, தெரியவில்லை.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை 'சிஹல உருமய' போன்ற அமைப்புகளும் எதிர்த்து வருகின்றன. மகா சங்கத்தினரில் ஒரு பிரிவினரும் எதிர்த்து வருகின்றனர். இது போன்ற எதிர்ப்பினாலேயே ஜனாதிபதியின் முதலாவது முயற்சி தடைப்பட்டது. அவ்வாறான எதிர்ப்பு மீண்டும் தலை காட்டவே செய்யும். அரசு எவ்வாறு சமாளிக்க போகிறது?

அன்று ஜே.ஆர்.ஜயவர்தன ஜனாதிபதியாக இருந்த பொழுது அவரது மாகாணசபைத் திட்டத்தை அரசாங்க எம்.பிக்கள் ஒரே குழுவாக ஏற்றுக் கொண்டனர். எதிர்ப்புக் காட்டிவந்த பிரதமரான பிரேமதாசாவே இறுதியில் மாகாணசபை சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றச் செய்தார். இனவாதத்தைக் கக்குவதில் முன்னின்ற சிறில் மத்தியூ, காமினி ஜயசூரிய போன்றோர் அமைச்சர் பதவிகளை இழக்க நேரிட்டது.

புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணும் ஜனாதிபதியின் திடசங்கற்பத்துக்கு பிரதமர் விக்கிரமநாயக்காவின் ஆதரவு இப்பொழுது கிடைக்குமா?

போரை ஏன் நிறுத்த வேண்டும்? சமாதானப் பேச்சை ஏன் தொடர வேண்டும்? என்ற இனவாதப் போக்கு மேலும் இறுக்கமடையுமா?

— அவதானி



மலையாள மாந்திரிகம்

மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே. சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை நன்மைக்கே இடம். நிச்சமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமணதோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்ததிகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவது, கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாணத் தடை நீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலும் இவர் விளம்பரம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல் படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு. தேவையானவர்கள் வெளிநாட்டவர்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9மணி முதல் இரவு 9மணி வரையே தொலைபேசி அல்லது ஃபெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

DR. P.K. SAAMI J.P. (Hon. Prof. IUMA)
162, KOTAHENA ST, MAYFIELD ROAD, COLOMBO - 13.
Tel : 0094-1-342463, 466271 Fax : 0094-1-344831
E-Mail: drpksamy@sltnet.lk
Web site: www.imexpolanka.com/drpksami

Tex City

தலைநகரில்
புடவை, ஷல்வார் கமிஸ் விற்பனையில்
தனக்கென தனிப்பெயர் பெற்ற
பிரபல்யமான ஸ்தாபனம் !


நாகரிக புடவை உலகின்
முன்னோடிகள்

இன்றே விஜயம் செய்யுங்கள் !



டெக்ஸ் சிட்டி
இல. 42A, காலி வீதி,
வெள்ளவத்தை.
தொ.இல. 074–514332

# குழந்தையின் வளர்ச்சியில் துணை ஆகாரங்கள்





குழந்தையின் ஆரோக்கியத்தையும் வளர்ச்சியையும் அதன் முதலாவது வயதிலேயே நிர்ணயிக்கும் பிரதான அம்சம் தாய்ப்பால் ஆகும்.

போஷாக்கிற்கு மட்டுமன்றி குழந்தையின் உடல், மனம் ஆகியவற்றின் உணர்ச்சி பூர்வமான வளர்ச்சிக்கும் தாய்ப்பால் இன்றியமையாததாகும்.

குழந்தையின் 4—6 மாத காலப் பகுதியில் எந்தவகையான திரவ, திண்ம உணவுகளையும் தாய்மார் கொடுக்கக் கூடாது.

* 4—6 மாதங்களின் பின்னர் தாய்ப்பாலுடன் கடைந்த அல்லது மசித்த உணவுகளைத் துணை ஆகாரங்களாகக் கொடுக்கத் தொடங்க வேண்டும்.
* உள்ளூரில் கிடைக்கும் தானியங்கள், கிழங்குகள், பயறுவகைகள், கனிவகைகள், காய்கறிகள் ஆகியன அடங்கிய துணை ஆகாரங்களைத் தாய்மார் தயாரித்தல் வேண்டும்.
* குழந்தைக்கு முதல் முறையாகத் துணை ஆகாரத்தைக் கொடுக்கும் போது சிறிதளவு முலைப் பாலையும் சேர்த்தால் உணவின் மணமும் சுவையும் அவர்களுக்குப் பழக்கப்பட்டதாக மாறி விடும். அத்துடன் சமிபாட்டிற்கும் உதவியாக இருக்கும்.
* தாய்ப்பால் கொடுத்த பின்னர் துணை ஆகாரங்கள் தொடர வேண்டும்.
* குழந்தைக்கு துணை ஆகாரத்தின் அளவையும் தரத்தையும் படிப்படியாகவே அதிகரிக்க வேண்டும்.
* துணை ஆகாரத்தை ஊட்டும் போது குழந்தைகள் ஆரோக்கியமாகவும் செழுமையாகவும் வளர்கிறார்களா என்பதைக் கவனித்து ஊட்ட வேண்டும்.
* துணை ஆகாரங்களைக் கொடுக்கும் போது புதிய சுவைக்குக் குழந்தை பழக்கப்பட அவகாசம் அளித்தல் வேண்டும்.
* ஒரு வகையான உணவின் சுவையை குழந்தை ஏற்கப் பழகிய பின்னரே மற்றோர் உணவைக் கொடுக்க முன்வர வேண்டும்.
* குறைந்த பட்சம் 1—2 வருடங்களுக்காவது தாய்ப்பால், ஆதார உணவாகத் தொடர்ந்து கொடுக்கப்பட வேண்டும்.

## பெண்

பிரதீபா — பரீனா

# கண்களும் பேசும்



சிந்தனையில் எழுகின்ற கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள நமக்கு உதவுவது மொழி. மொழியைப் போன்று பார்வையும் எவருக்கும் தெரியாத சங்கேத மொழி.

இதனால் ஓர் ஆணினதும் பெண்ணினதும் கண்கள் சந்திக்கும் போதுதான் 'காதல்' என்ற புனிதமான உணர்வு உருவாகின்றது.

உணர்வுகளை வெளிப்படுத்த சிறந்த மொழி பார்வை என்பதால் காதலர்களும் கணவன்-மனைவியும் பேசிக் கொள்வதற்கு மொழியை விடப் பொருத்தமானது, சிறந்தது பார்வை.

காதலர்களானாலும், கருத்தொருமித்த தம்பதியரானாலும் ''என்ன கஷ்டத்திலும் நான் உங்களுக்குத் துணையாக இருப்பேன் கவலைப்படாதீர்கள்'', ''நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா?'', ''சாப்பிட்டீர்களா?'', ''உங்களைப் பார்த்து எத்தனை நாட்களாகி விட்டன?'' இவற்றைப் பார்வையால் கேட்டால் போதும் உடலும் மனமும் தெம்படைந்து விடுகின்றன. களைப்பும் துன்பமும் அடியோடு பறந்து விடுகின்றன.

உடலால் ஒருவரை ஒருவர் தொடும் போது கிடைக்கும் சந்தோஷமும் சிலிர்ப்பும் பார்வையால் தொடும் போதும் கிடைக்கின்றன என்கிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள்.

கணவன்-மனைவி வேலைக்கு அவசரமாகச் செல்லும் போதும் பிள்ளைகளால் அவர்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படும் போதும் பார்வையால் பேசிக் கொள்வது சாத்தியப்படா விட்டாலும் தாம்பத்தியத்தில் ஏற்படுகின்ற சண்டைகளால், ஊடல்களால், பிரிவுகளால் உருவாகின்ற தாக்கங்களை பார்வை என்கிற மருந்து தீர்த்து வைத்து விடுகின்றது.

எனவே அன்பான நீங்கள் ஒருவரை ஒருவர் பார்வையால் ஸ்பரிசியுங்கள். பார்வையால் கிடைக்கும் இதத்தையும் இனிமையையும் அனுபவித்தால் வாழ்க்கை சொர்க்கம் ஆகிவிடும்.

# படித்ததில் பிடித்தது

* உலகத்தில் சில விஷயங்கள் நமக்குச் சாதகமாக இல்லை என்பதால் உலகமே நம்மை எதிர்க்கிறது என்ற முடிவுக்கு வரக்கூடாது.
சாதகமானவையும் பாதகமானவையும் கலந்ததுதான் உலகம். '' இந்த உலகமே எனக்கு எதிரி'' என்கிற அவசர முடிவை எடுக்க வேண்டாம். அவசர முடிவு ஆபத்தானது.
* உங்கள் அனுமதி இல்லாமல் உங்கள் உடலை ஒருவர் அடித்துக் காயப்படுத்தி விட முடியும். ஆனால் உங்கள் பூரண ஒத்துழைப்பு இல்லாமல் உங்கள் மனதை இன்னொருவரால் காயப்படுத்த முடியாது.
* குறைவாகச் செலவழித்து-அதிகமாகச் சேமியுங்கள். பணத்தால் சந்தோஷத்தை வாங்க முடியாது என்பது உண்மையே! ஆனால் போதிய பணம் உங்கள் வங்கிக் கணக்கில் இருக்கிறது என்ற நினைவு உங்களுக்கு மலையளவு நம்பிக்கையைத் தரும்.
* கல்வி பெண்களுக்குக் கொடுக்கும் கொடைகளில் ஒன்று தன்னம்பிக்கை.




## இரத்தினங்கள்

சித்தர்களும் ரிஷிகளும் கிரகத்திற்கும் கற்களுக்கும் உள்ள தொடர்பை தம் ஆராய்ச்சியில் கண்ட உண்மையை இன்று நாம் சரிவர கற்று உலகறிய செய்கின்றோம். அவரவர்களுக்கு ஏற்ற இரத்தினங்களை அணிந்து அதற்கேற்ப பலன்களையும் நன்மைகளையும் அடையலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட இரத்தினங்கள் உறுதிப்பத்திரத்துடன்

விலை ரூ.3000 முதல் ரூ.7500 வரை

Accredited by National Gem & Jewellery Authority

வெளிநாட்டு ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

ARUL jewellers அருள்

3, Sea Street, Colombo-11. Tel : 436331

Branch: 105, Galle Rd, Colombo-06. Tel: 580230


# இஞ்சி ஒரு சஞ்சீவி



இஞ்சியை ''வீட்டு வைத்தியன்'' எனக் கூறும் அளவிற்கு அதில் மருத்துவக் குணங்கள் காணப்படுகின்றன.

* இஞ்சிச் சாற்றுடன் பாலைக் கலந்து குடித்தால் வயிற்று நோய்கள் நீங்கும்.
* சோற்றுடன் இஞ்சித் துவையலையும் சேர்த்து உண்டால் மலச்சிக்கல் ஏற்படாது. காய்ச்சலில் இருந்து குணமடைந்தவர்களுக்கு இது நல்லது.
* இஞ்சி லேகியத்தைத் தினமும் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் பசி ஏற்படும்.

இஞ்சியைச் சுண்ணாம்பு நீரில் ஊற வைத்து வெயிலில் உலர்த்தி எடுக்கவும். இது சுக்கு என அழைக்கப்படும்.

* சுக்கை மோர் விட்டு அரைத்து ஒரு கரண்டி அளவு தினமும் இரண்டு முறை உண்டால் பேதி நின்று விடும்.
* சுக்குப் பொடியைத் தேனில் கலந்து உண்டால் பித்த நோய் குணமடையும்.

இஞ்சி, சுக்கு ஆகிய இரண்டையும் அதிகமாகப் பயன்படுத்தி நிறைந்த பயன் பெறுங்கள்.

# அழகுக்கு மட்டுமல்ல மருந்துக்கும் மருதாணி



பழங்காலத்தில் இருந்து இன்றுவரை மருதாணி இடுவது மங்களகரமானதாக இருந்து வருகின்றது.

விழாக் காலங்களிலும் திருமணங்களிலும் பண்டிகைகளிலும் இளம் பெண்கள் தங்கள் கைகளையும் பாதங்களையும் அழகுபடுத்த 'மருதாணி' இட்டுக் கொள்கிறார்கள்.

தற்காலத்தில் இதனை 'மெகந்தி' என்று அழைக்கிறார்கள். குறிப்பாக இந்தியர்கள் 'மெகந்தி' இடுவதை ஒரு கலையாகவே பயின்றிருக்கிறார்கள்.

மருதாணி ஓர் அழகு சாதனம் மட்டுமல்ல அரிய மூலிகையும் கூட.

* மருதாணி இலைகளை அரைத்து உள்ளங் கைகளில் இட்டுக் கொண்டால் சூடு தணிந்து உடல் குளிர்ச்சியடையும்.
* இளநரை உள்ளவர்கள் மருதாணியை நன்றாக விழுது போல் அரைத்து அதனை நரையுள்ள இடத்தில் அதிகமாகவும், மற்றைய இடங்களில் லேசாகவும் தடவி வர இளநரை நீங்கும்.
* மருதாணி இலைகளை நன்றாக அரைத்து அதனைத் தேங்காய் எண்ணெயுடன் காய்ச்சி வடிகட்டித் தலையில் தேய்த்து வந்தால் தலை முடி நன்றாக வளரும்.
* மருதாணிப் பூக்களை நீரிலிட்டுக் காய்ச்சி வடிகட்டிக் குடித்தால் நரம்பும் இதயமும் பலமடையும்.
* மருதாணியைப் பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் உள்ளங்கால்களில் இட்டுக் கொள்வதன் மூலம் உடற் சூட்டைத் தணித்துக் கொள்ளலாம்.


## இரத்தினங்கள்

சித்தர்களும் ரிஷிகளும் கிரகத்திற்கும் கற்களுக்கும் உள்ள தொடர்பை தம் ஆராய்ச்சியில் கண்ட உண்மையை இன்று நாம் சரிவர கற்று உலகறிய செய்கின்றோம். அவரவர்களுக்கு ஏற்ற இரத்தினங்களை அணிந்து அதற்கேற்ப பலன்களையும் நன்மைகளையும் அடையலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட இரத்தினங்கள் உறுதிப்பத்திரத்துடன்

விலை ரூ.3000 முதல் ரூ.7500 வரை

Accredited by National Gem & Jewellery Authority

வெளிநாட்டு ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

ARUL jewellers அருள்

3, Sea Street, Colombo-11. Tel : 436331

Branch: 105, Galle Rd, Colombo-06. Tel: 580230

# தடைக்குப் பின் வடக்கே படை எடுக்கும் தூதர்கள்!

தேரடிக்கு விநாசியரும் பரமலிங்கம் மாஸ்டரும் வந்து அமர்ந்தனர். சொல்லிவைத்தால்போல் செக்கியூரிட்டி டானியலும் கொம்னிக்கேசன் லோகனும் வந்து சேர்ந்தனர்.

வந்து சேர்ந்தும் சேராததுமாக "விநாசியண்ணை பயப்பட்டமாதிரியே சந்திலை சிந்துபாடிட்டுது பிரிட்டன்" என்றான் லோகன்.

அப்போது தூரத்தில் திடீரென்று சனக்கூட்டம் ஒன்று பரபரப்பாகக் கூடியது.

புதினம் அறியும் ஆவலில் ஓடிச்சென்ற லோகன் திரும்பி சிரிப்புடன் வந்தான்.

"அது ஒன்றுமில்லை, கந்தையரின் 15 வயசுப் பேரனுக்கு தமக்கைக்காரி லண்டனிலை இருந்து சேர்ட் அனுப்பினவவாம். தான் இனிமேல் லண்டன் சேர்ட் போடமாட்டன் என்று சொல்லி அந்தப் புதுச் சேர்ட்டை அந்தப் பொடியன் எரிக்குது. அதைப் பார்க்கத்தான் கூட்டம் சேர்ந்தது" என்ற விளக்கினான் அவன்.

"இந்தியாவிலை சுதந்திரப் போராட்டக் காலத்திலை பிரிட்டிஷ் அரசை எதிர்த்து நடந்த, வெளிநாட்டுத் துணிகளை எரிக்கிற போராட்டம்தான் ஞாபகம் வருகுது" என்றார் மாஸ்டர்.

"இந்திய அரசு காஷ்மீரிலை யுத்தநிறுத்தம் அறிவிச்சு அதை நீடிச்சும் வருகுது. அந்த யுத்தநிறுத்தத்தை ஒப்புக்கொள்ள மறுத்து ஹிஸ்புல் முஜாஹிதீன் உட்பட சில தீவிரவாத இயக்கங்கள் தாக்குதல்கள் நடத்திவருகின்றன. அதில் உயிர்ப்பலிகளும் ஏற்படுகுது. அந்த இயக்கங்களை பிரிட்டனில் தடை செய்ய பரிந்துரைக்கப்பட்டிருக்கு."

டானியலின் கேள்வி செல்லும் திசையைப் புரிந்துகொண்ட சின்னாச்சி அரட்டையின் பக்கம் கவனத்தைத் திருப்பினாள். இதனைக் கவனியாமல் கேள்வியைத் தொடர்ந்தான் டானியல்.

"இங்கே புலிகள் யுத்தநிறுத்தம் செய்து அதை நீடித்தும் வருகினம். அரசு யுத்தநிறுத்தத்தை ஏற்றுக்கொள்ளாமல் தாக்குதல்களை நடத்தி வருகுது. அதிலயும் உயிர்ப்பலி ஏற்படுகுது. இந்த விஷயத்தை பிரிட்டன் யோசிக்கவில்லையோ?" டானியல் கேட்டான்.

"அதுதான் பிரிட்டிஷ் அமைச்சர் சொல்லியிருக்கிறாரே, அரசியல் தலைவர்களை இலக்குவைத்து புலிகள் தாக்குதல் நடத்தி வருகினம். அது, இது என்று அவர் நிறைய அடுக்கி இருக்கிறாரே" என்றார் மாஸ்டர்.

"அப்ப மாஸ்டர் கியூபா அதிபர் பிடல் காஸ்ட்ரோவைக் கொல்ல அமெரிக்காவின் சி.ஐ.ஏ என்ற ரகசிய புலனாய்வு நிறுவனம் முயற்சிகளை மேற்கொள்வதாக செய்திகள் அடிபடுகுதே. அப்ப சி.ஐ.ஏ பயங்கரவாதக் குழுவோ?" விடாமல் கேட்டான் டானியல்.

"தம்பி இந்த மாதிரிக் கேள்விகளுக்கு பதில் சொல்ல எனக்குத் தெரியாது. ஆனால் ஒரு பழமொழி தெரியும்", என்ற மாஸ்டர் பழமொழியையும் சொன்னார். "வல்லமையுள்ளவன் வகுத்ததே நீதி".

"புலிகளைத் தடை செய்யச் சிபாரிசு செய்ததில் இந்தியாவின் பங்கும் இருக்கிறதாகக் கூறுகினமே?" கேள்வி எழுப்பினான் லோகன்.

இதற்கு விநாசியர் பதிலளித்தார். "ஓயாத அலைகளிலை ஆனையிறவும் வீழ்ந்து யாழ்ப்பாணத்தைப் புலிகள் நெருங்கினபோது, இராணுவம் யாழ்ப்பாணத்துக்குள் சிக்கிவிட்டது என்று அரசு முறையிட்டதுதான் இந்தியாவை உசுப்பிவிட்டிருக்குது என்று சொல்லுவினம்"

"அதுக்கும் தடைக்கும் என்ன சம்பந்தம்?" கேட்டான் லோகன்.

"இலங்கையிலை விடுதலைப்புலிகளின் கை ஓங்குவதை இந்தியா விரும்பவில்லையாம். அங்கேயும் அதனால் பிரிவினைவாத சக்திகள் தூண்டப்படலாம் என்று இந்தியா பயப்படுகிறதாம். அதோடை புலிகளின் கை ஓங்கினால் இலங்கையில சமாதானம் ஏற்படுத்தின கௌரவம் இந்தியாவுக்குக் கிடைக்காமல் போய்விடும் என்று கருதப்படுகிறதாம்.



## தேரடி அரட்டை

நோர்வேயின் பங்களிப்பு மட்டுமல்லாமல் தனது பங்கும் பேசப்படும் அளவுக்கு இருக்கவேண்டும் என்று இந்தியா விரும்புகிறதாம். அதனால்தான் அரசுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாகச் சொல்லப்படுகுது" என்றார் விநாசியர்.

சின்னாச்சி மௌனமாக இருந்ததால் அவளின் இடத்தைப் பிடித்த மாஸ்டர் "பூனைக்கு விளையாட்டாம் சுண்டெலிக்குச் சீவன் போகுதாம்" என்றார்.

"இந்திராகாந்தி காலத்தில் வங்காளதேசத்தை உருவாக்கிக்கொடுத்ததை காங்கிரஸ் கட்சி இன்றும் பெருமையாக சொல்லுதாம். அதுபோல இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தின பெருமையைப்பெற வாஜ்பாய் விரும்புகிறார்போல" என்று இடக்காகக் கூறினான் டானியல்.

"நேரத்துக்கு ஏற்றமாதிரி வாஜ்பாய் கதைக்கக் கூடியவர்தான். ஆப்கானிஸ்தானிலை தலிபான் ஆட்சியாளர்கள் இஸ்லாமியக் கோட்பாடுகளின்படி சிலை வழிபாடு கூடாது என்று கூறி அங்கிருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சிலைகளைத் தகர்க்கினம் எல்லோ. அப்ப அந்தச் சிலைகளை உடைக்கவேண்டாம். அவையெல்லாம் புராதன பொக்கிஷங்கள். அவற்றை இந்தியாவுக்குக் கொண்டுவந்து பாதுகாக்கத் தயார் என்று வாஜ்பாய் கூறினவர். ஆனால் அவரது பாரதிய ஜனதாக் கட்சியினர் உட்பட இந்துத்துவ அமைப்புகள் சேர்ந்து ராமர் பிறந்த இடம்என்று இவர்களால் கூறப்படும் அயோத்தியிலை பாபர் மன்னனால் கட்டப்பட்ட மசூதியை மதவெறியிலை இடித்துத் தரைமட்டமாக்கினவை-அப்ப மட்டும் வாஜ்பாய் எங்கே போயிருந்தார் என்று கேள்விகள் எழும்பியிருக்காம்." என்று முடித்தார் மாஸ்டர்.

"இந்தியா தனது லாபத்துக்காக செயற்பட்டால் பிரிட்டன் ஏன் அதன்படி கேட்க வேணும்?" சந்தேகம் எழுப்பினான் டானியல். "பிரிட்டன் மாத்திரம் அல்ல, எல்லா முதலாளித்துவ நாடுகளும் தங்கள் தங்கள் லாபத்தைக் கருதித்தான் நடக்கின்றன.

"சுயலாபத்துக்காக வளரும் நாடுகளை ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை, உள்நாட்டு மோதல்கள் ஆகியவற்றில் சிக்க வைத்து தங்களது உற்பத்திப் பொருள்களையும் ஆயுதங்களையும் விற்கும் சந்தைகளாக அவற்றை ஆக்கி வைப்பது தான் வல்லரசுகளின் நோக்கமாம்.

"போதாக்குறைக்கு வல்லரசுகளின் பிடிக்குள் ஆடும் நாடுகளில் அரசியல் வாதிகள் சொந்த நாட்டையும் மக்களையும் அழித்துத் தங்களை வளப்படுத்த முன்வருவதால் வல்லரசுகளுக்கு வேலை சுலபமாகுது" என்று தெளிவுபடுத்தினார் மாஸ்டர்.

அத்துடன் "பிரிட்டனில் புலிகளைத் தடை செய்யச் சிபாரிசு செய்யப்பட்ட பிறகு, இந்தியத்தூதர் உட்பட பல நாடுகளின் தூதர்களும் யாழ்ப்பாணத்துக்குவந்து போகினம். தடை விஷயம் எப்படி எதிரொலிக்குது என்று பார்க்கத்தான் எல்லோரும் மாறிமாறி வந்ததாக மக்கள் பேசிக் கொள்கிறார்கள்" என்று முடித்தார் மாஸ்டர்.

"தடையாலை பிரிட்டனுக்கு இன்னும் ஒரு நன்மையாம். இலங்கையில் புலிகளின் ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்திலை அரசபடைகளால் தேடப்படுகிறோம் என்று கூறிப் புதிதாக எவரும் இனிமேல் பிரிட்டனில் தஞ்சம் கோர முடியாது என்று சொல்லுகினம். இது உண்மையாக இருந்தால், அங்கு தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கை கணிசமான அளவு குறையும்" என்றான் லோகன்.

"ம்... எல்லாத்துக்கும் காலம் தான் பதில் சொல்ல வேணும்" என்று விரக்தியுடன் கூறியபடி எழுந்த விநாசியரைத் தொடர்ந்து மற்றவர்களும் எழுந்தனர்.

அதுவரை முகம் கல்லாக இறுகியிருக்க மௌனம் காத்த சின்னாச்சி, "சமாதானம் வந்தாலும், சந்தோஷம் வராது என்று அண்டைக்கு மாஸ்டர் சொல்லிப் போட்டு விட்டுட்டியள் என்று ஞாபகப்படுத்தினாள்.

"கதை ருசியிலை இன்று அதைப்பற்றி சொல்ல மறந்திட்டன். அடுத்த முறை சொல்லுறன். இப்ப நேரம் போட்டுது" என்றவாறு நடக்கத் தொடங்கினார் மாஸ்டர்.

வழக்கத்தை விட மிகப் பொறுமையாக சுடலைக் கடையை கட்டினாள் சின்னாச்சி.

—ஏகலைவன்

# ஆடைகளை ஊடறுத்து அங்கங்கள் தரிசனம்

## முப்பரிமாண உடல் ஸ்கானர் மூலம்

ஆடைகளினூடாக ஒருவரின் அங்கத்தையும் மற்றும் உடல் உறுப்புகளையும் பார்க்க உதவும் சாதனம் ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

"முப்பரிமாண உடல் ஸ்கானர்" எனப்படும் இதனை வாஷிங்டனிலுள்ள 'பசுபிக் வடமேல் தேசிய ஆய்வுகூடத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

மறைவாகக் கொண்டு செல்லப்படும் போதைப்பொருட்கள், வெடிமருந்து வகைகள், துப்பாக்கி போன்றவற்றைக் கண்டுபிடிப்பதற்காக ஆரம்பத்தில் இதனை விமான நிலையங்களில் பயன்படுத்துவதற்கென்று திட்டமிட்டிருந்தனர். பரீட்சார்த்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இதனால் இதனை வேறு உபயோகங்களுக்கு என ஒதுக்கினர்.

இந்த ஸ்கானர் கருவி முழு ஆடைகளுடன் நிற்கும் ஒருவரின் நிர்வாணநிலையை நிழற்படம்போல் காட்டவல்லது. இரண்டு மீற்றர் விட்டமுள்ள வட்டவடிவக்கூடு ஒன்றில் இதனை வைக்கலாம்.

பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டிய நபர் அதனுள் சென்று சில விநாடிகள் நின்றால் போதும். அறையின் உட்புறச் சுவரில் பரவலாகப் பொருத்தப்பட்டுள்ள உணரிகள் மற்றும் கதிர் வீச்சுக்கருவிகள், நுண் அலைகளை அவர் மீது வீசி பிரதிபலிப்புகளை பதிவு செய்யும்.

இந்த மில்லிமீற்றர் நுண்ணலைகள் 'எக்ஸ்–றே' கதிர்கள் போன்று மனித உடலின் டீ.என்.ஏ க்களை தாக்குவதில்லை. சற்று நுட்பமாகத் தயாரிக்கப் பட்டுள்ள மென்தாளொன்றில் இந்த அலைகளை முப்பரிமாணப் படமாக ஆக்கிக் கொள்ளலாம்.


முப்பரிமாணப் படம் ஒன்றைத் தயாரித்த பின் உடலுறுப்புகள் ஒவ்வொன்றினதும் துல்லியமான அளவுகளைப் பெற முடியும்.

சரியான அளவுக்கு ஆடைகளைத் தைத்து வழங்குதல் இலத்திரனியல் துறையில் இது பெரும் பயன்களைத் தரவல்லது. செயற்கை உறுப்புகள் பொருத்தும் வேலைகள் போன்றவற்றிற்கும் பயன்படக்கூடியது.

இக் கருவியில் பொருத்தமான மென்பொருளைப் பயன்படுத்தி போதை மருந்து, வெடிபொருட்கள் போன்றவற்றைத் துல்லியமாகக் கண்டுகொள்ள முடியும்.

அதே நேரத்தில் ஒருவரை நிர்வாண கோலத்தில் பார்த்து ரசிக்க விரும்பும் தகாத நோக்குடைய வர்களை ஒன்றும் செய்ய முடியாது.

– நன்றி: நியூ சயன்டிஸ்ட்



# திருமலை நோயாளர்கள் அவதி பெயருக்கே வைத்திய சாலை!

## 25 வருடப் பழைமை; ஆனால் முக்கிய வசதிகள் எதுவும் இல்லை

பல்லின மக்களும் செறிந்து வாழும் மாவட்டம் திருகோணமலை. சுமார் 3 லட்சத்து 78 ஆயிரம் பேர் இங்கு வாழ்கின்றனர்.

இதனைவிட தற்போது நாட்டில் நிகழ்ந்து கொண்டிருக்கும் இன நெருக்கடி காரணமாக இங்கு புலம் பெயர்ந்து வாழ்வோர்—

ஏனைய இடங்களில் இருந்து வந்து யாழ்ப்பாணம் செல்வோர்—

வடபகுதியில் இருந்து இங்கு வருவோர்—

தொழில் நிமித்தமாக இங்கு வசிப்போர்— என மக்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இப்படி அதிகளவில் வரும் மக்களுக்கு சேவை அளிக்கக்கூடிய நிலையில் திருகோணமலை ஆதார வைத்திய சாலை(Base Hospital) இருக்கிறதா? இதுவே இன்று எழும் பிரதான கேள்வி.

வெறுமனே பௌதீக வளத்தை மட்டும் கொண்டுள்ள ஒரு வைத்தியசாலை தரமுடையது என்று அர்த்தப்பட மாட்டாது. ஆளணியும் நிர்வாகமும் அவசியமாகின்றன.

வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்காகத் தினமும் இங்கு ஆயிரம் பேர்வரை வந்து செல்கின்றனர்.

25 வருடங்கள் பழைமை வாய்ந்த இந்த வைத்தியசாலையில் 320 கட்டில்கள் மாத்திரமே உள்ளன.

அதே வேளை இங்கு காது, மூக்கு, தொண்டை கிளினிக்குகளோ(ENT) அல்லது கண் கிளினிக்கோ கிடையாது. இவற்றுக்குரிய வைத்திய நிபுணர்களும் இல்லை.

கண், காது, மூக்கு, தொண்டை ஆகியவற்றுக்கு சிகிச்சை பெற வேண்டுமானால் கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, அனுராதபுரம், குருநாகல் போன்ற இடங்களுக்கே நோயாளர்கள் செல்ல வேண்டும்.

தற்போது நாடு உள்ள சூழ்நிலையில் வெளியிடங்களுக்குச் சென்று திரும்புவது என்பது சுலபமான காரியம் அல்ல.

இத்தகைய பயணங்களால் கால நேரம், பணவிரயம் மட்டுமன்றி பல்வேறு அசௌகரியங்களையும் நோயாளர்கள் சந்திக்க நேரிடுகின்றது.

எல்லா நோயாளிகளுக்கும் வெளி இடங்களுக்குச் சென்று சிகிச்சை பெறுவதற்கான வசதியும் கிடையாது. இதனால் நோய் அதிகரித்து உயிராபத்தும் ஏற்படுகிறது.

இத்தகைய விளைவுகளைக் கருத்தில் கொண்டு வைத்திய சாலை அபிவிருத்திக் குழுவினால் ஜனாதிபதி, வடக்கு–கிழக்கு மாகாண ஆளுநர், சுகாதார அமைச்சர் ஆகியோருக்கு பல தடவைகள் கடிதங்கள் அனுப்பப் பட்டன. ஆனால் பயன்ஏதும் இதுவரை இல்லை.

ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று பலரும் வேதனைப்படுகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, சில முக்கிய நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கும் வைத்தியர்கள் பதில்கடமை (Acting duty) புரிகின்றவர்கள் என்பதும் வேதனைக்குரியது.

ஆகவே மேற்படி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, திருகோணமலை மாவட்ட மக்களின் நன்மை கருதி இந்த வைத்தியசாலையின் தரம் உயர்த்தப்பட வேண்டும். பொது வைத்தியசாலையாக (General Hospital) இதனைத் தரமுயர்த்தும்படி தற்போது கோரிக்கை விடப்பட்டு வருகிறது. இது நடக்குமா? இது நிறைவேறினாலும் நோயாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டுவிடுமா?

— எஸ். எஸ். ஆர்.

## திருமலையில் தொடரும் சுற்றிவளைப்புகள்

திருகோணமலை பஸ் தரிப்பு நிலையம் கடந்த வியாழக்கிழமை காலை பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து எவரும் வெளியே செல்லவோ அல்லது வெளியில் இருந்து எவரும் பஸ் தரிப்பு நிலையத்துக்குள் வரவோ அனுமதிக்கப்படவில்லை.

பஸ் தரிப்பு நிலையத்தில் உள்ள கடைகளும் சோதனையிடப்பட்டன.

சுமார் முக்கால் மணி நேரம் நீடித்த இந்தச் சுற்றிவளைப்பின்போது அடையாள அட்டை இல்லாத சிலர் தடுத்துவைக்கப்பட்டு, விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இதேபோன்ற சுற்றிவளைப்புகள் என்.சி வீதியிலும் மற்றும் நகரப் பகுதிகளிலும் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன. இந்த சுற்றிவளைப்புகளினால் பொதுமக்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர்.

சுற்றிவளைப்புகளில் சிக்கிப் பெரும் சிரமப்பட்ட ஒருவர் "திருகோணமலைக்கு சமாதான நகரம் என்ற பெயர் அவசியம்தானா" என்று சலித்துக்கொண்டார்.




### கட்சி மாறலும் கலெக்ஷன் மோசடியும்

பிரகடனம் ஒன்றினால் பிரபலமானவர் அவர். அயல் நாட்டில் இருந்து சொந்த நாட்டுக்கு வந்த பின் உட்கட்சிப் பூசலில் ஈடுபட்டிருப்பவர். இதனால் கட்சி இரண்டாகப் பிரிந்து முக்கிய உறுப்பினர்களும் இரு அணிகளாக நிற்கின்றனர்.

பிரகடனத்தால் பிரபலமானவரின் அணியைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் இப்போதெல்லாம் வேறு ஒரு கட்சியின் மீது கண் வைத்துச் செயற்படுகிறார்களாம். ஒரே கட்சியின் இரு பிரிவுகளும் வேண்டாம் என்று கூறும் இவர்களுக்கு 'டக்' அமைச்சர் மீது இப்போதெல்லாம் தனி அபிமானம்.

இந்த அபிமானத்தால் யாழ். அலுவலகத்தில் இருந்து ஏறக்குறைய முக்கால் டசின் முக்கிய உறுப்பினர்கள் 'டக்' தலைவர் கட்சியுடன் ஐக்கியப்பட்டுவிட்டார்களாம்.

சிவராத்திரிக்கு முந்திய தினமும் சிவராத்திரித் தினத்தன்றும் அதற்குப் பிந்திய தினமும் இவர்கள் அங்கே தாவிவிட்டனர். இதனால் 'பிரகடனத்தால் பிரபலமானவரும் அவரது வலது கரம் போன்ற யாழ். பொறுப்பாளரும் ஆடிப்போயிருக்கிறார்களாம்.

கட்சி மாறுவதற்கு இவர்களை ஆற்றுப் படுத்தியவர் ஒரு பெரிய சக்கரவர்த்தியின் பெயரைக்கொண்டவர்.

"பிரபலமானவரின் அணியினைச்சேர்ந்த உயர்மட்ட முக்கியஸ்தர்கள் சுகமாக இருக்கிறார்கள். எங்களுக்கு சாப்பாட்டுக்குக் கூடக் காசு கொடுப்பதில்லை" என்று கட்சி மாறிய மற்றவர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள்.

ஏற்கனவே மட்டக்களப்பு அலுவலகத்தில் இருந்து 8 முக்கிய புள்ளிகள் 'டக்' அமைச்சருடன் ஐக்கியமாகிவிட்டிருக்கின்றனர். (இந்த விவரம் இப்பகுதியில் ஏற்கனவே பிரசுரமாகியிருக்கிறது). கட்சியைச் சார்ந்தவர்களுக்கு ஒழுங்கான கவனிப்பு இல்லாவிட்டால் இன்னும் பலரும் கட்சி மாறுவார்கள் என்று இவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதே நேரம் பிரபலமானவரின் கட்சிப் பிரிவின் யாழ். பொறுப்பானவர் அண்மையில் வவுனியா, மன்னார் அலுவலகங்களுக்கு விஜயம் செய்திருக்கிறார். விஜயத்துக்குக் காரணம் கலெக்ஷனில் ஏற்பட்டுள்ள கோளாறுதான் என்று தெரிவிக்கப்படுகிறது. யாழ். பொறுப்பாளருடன் மட்டக்களப்பு பொறுப்பாளரும் கூடவே சென்றாராம்.

வவுனியாவில் முழு முதற் கடவுளின் பெயரைத் தாங்கியவரும் 'இளையவர்' என்ற கருத்திலான பெயரைத் தாங்கியவரும் ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் கலெக்ஷனில் ஈடுபட்டதோடு கலெக்ஷன் திரட்டையும் சொந்தப் பைகளில் அமுக்கிக் கொண்டார்களாம். இத்தனைக்கும் இவர்கள் இருவரும் அதற்குப் பொறுப்பானவர்கள் அல்லர் என்றும் தகவல்.

இந்த இருவருக்குமிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக 'இளையவர்' என்ற கருத்திலான பெயரைத் தாங்கியவர் திருமலைக்குப் போய்விட யாழ். பொறுப்பானவர் அவரை வரவழைத்துச் சமாதானம் செய்ய முயற்சித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும் கலெக்ஷன்மோசடிப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

### திட்டல் காண்டம்

அடுத்தடுத்து வரிசையாக வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து வந்த தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் உள்ள தலைவர்களில் சிலர் மத்தியில் சிண்டுபிடி மோதல் இன்னும் தணிந்த பாடாய்க் காணோம்.

அரசியல் அம்பலக்காரருக்குத் தகவல் கொடுப்பது யார் என்று தகவல் அறிவதில் ஒரு தமிழ்க்கட்சியின் முதன்மைக்காரர் ஆர்வம் காட்டுகிறாராம். அதனால் சில தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மீது சந்தேகமும் கொண்டிருக்கிறாராம்.

நிலைமை இவ்வாறு இருக்கையில், கடைசியாக ஒரு வெளிநாட்டுத் தூதுவரைச் சந்தித்தார்கள் தமிழ்க் கட்சிகளின் சில தலைவர்கள். வரும் வழியில் இவர்களுக்கிடையில் நடந்த உரையாடல் பாதியில் திசை திரும்பி எங்கோ சென்று விட்டதாம்.

வெளிநாட்டுத் தூதுவரைச் சந்தித்தது தொடர்பான செய்திகளை ஊடகக் காரர்களுக்குத் தெரியப் படுத்துவது பற்றியதே அந்த உரையாடல். இந்த உரையாடல் திசை திரும்பிவிடக் காந்தமானவரின் காட்டமான பதிலே காரணமாக இருந்தது என்று கூறப்படுகிறது.

"இன்றையசந்திப்பைப்பற்றியதகவல்களைப் பத்திரிகைகளுக்குக்கொடுப்பதானால்தகவல்களை ஒழுங்குபடுத்திச் செம்மையாகவே கொடுக்க வேண்டும். யாராவது ஒருவர் மட்டும் தகவல் கொடுத்தால் தான் நல்லது" என்று காந்தமானவர் திருவாய்மலர்ந்து அருளினார்.

பக்கத்தில் நின்ற அடைக்கலமானவரும், தலைவர் சாமியாரும் இதற்கு "ஆமாம் சாமி" போட்டனர். "காந்தமானவரே பத்திரிகையாளருக்கு தகவல் கொடுப்பது தான் சரியானது" என்றும் இவர்கள் தெரிவித்தனராம்.

ஆனால் அடுத்த கணமே காந்தமானவரிடம் இருந்து காட்டமான பதில் வந்தது.

"நீங்கள் சொல்வது போல் பத்திரிகைகளுக்கு தகவல் கொடுக்க முடியும். நான் தகவல் கொடுக்க வேண்டுமானால் 'அதர்ஸ் மஸ்ட் ஷட் தெயர் மவ்த்ஸ்' (Others must shut their mouths) என்று சர்வாதிகாரமாய்ச் சொன்னாராம்.

இதுவரை உரையாடலை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த மனோகரமான வருக்கும் சாந்தமானவரின் இந்தப் பதிலால் உள்ளூரக் கோபம். விருட்டெனக் கிளம்பிப் போனார். போன கையோடு தொலைக்காட்சிக் காரர்களுக்குசந்திப்புப்பற்றியதகவல்களையும் வழங்கினாராம்.

தலைவர்கள் தமது இருப்பிடங்களுக்குச் சென்றபின்பு தொலைபேசித் திட்டல் காண்டம் ஆரம்பமாகியது.

ஆள் மாறி ஆள் தொலைபேசியினூடாக காந்தமானவர் மீது தமக்குள்ள எரிச்சலை இவ்வாறு வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

"இவர் தகவல் கொடுத்தால் தனது பெயருக்கு மட்டும் மகுடம் சூட்டிக் கொண்டு மற்றவர்களின் பெயர்களை மறைத்து விடுவார்" என்று ஒரு தலைவர் தொலைபேசியில் வசை பாடினார்.

"நாங்கள் என்ன பாதாள உலக இயக்கமா நடத்துகிறோம். நாங்கள் மக்களின் பிரதிநிதிகள். எமது நடவடிக்கைகளை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே மீடியாக் காரர்களுடன் பேசுகிறோம். எங்களுக்கு கட்டளை போட இவரால் முடியுமா?" என்று இன்னொரு தலைவர் கேள்வி எழுப்பினார்.

"வயதில் பெரியவர், அனுபவஸ்தர் என்று தான் அவருக்கு விட்டுக்கொடுக்கிறோம். பெரியவர் செய்கையிலும் பேச்சிலும் சிறியவர் ஆகிவிட்டார்" என்று ஒரு செயலர் திட்டினார்.

"இந்த வயதில் அவர் இப்படிப் பொறுப்பற்ற தனமாகப் பேசியிருக்கக்கூடாது. எனக்கும் ஆத்திரமாகத்தான் இருந்தது" என்று இன்னொரு கட்சியின் செயலர் எரிகிற நெருப்பில் எண்ணெய்யை ஊற்றினார்.

இவைகள் திட்டல் காண்டத்தில் சில வசனங்கள் மட்டுமே.

### விநாயகர் சித்தம்

மேடைகளில் புலி ஆலாபனை பாடும் எலி வாகனக்காரருக்கு தலைநகரில் வண்டி வழி முதல் கொண்டு மெய்ப்பாதுகாவலர் வரை வழங்குவது வவுனியாக் கழகமணிகள் தானம். எதிரும் புதிருமான அணிகளைச் சேர்ந்த தலைவர்கள் தோளுக்கு மேல் கைபோடாத குறையாகக் கூட்டுச் சேர்ந்து திரிவதைப் பார்த்து 'விநாயகர் சித்தம்' என்று மூக்கில் கை வைக்கின்றார்கள் ஏனையோர்.

GREEN CARD

அமெரிக்காவில் தங்கி வேலை செய்வதற்கும் கல்வி பயிலவும் உங்களுக்கும் முடியும்

அமெரிக்காவில் வதிவுரிமை பெறுவதற்காக 55,000 விசா சீட்டிழுப்பில் வழங்கப்படும். நீங்களும் போட்டியிட நாங்கள் உங்களை சரியாக போட்டிக்கு உட்படுத்துவோம். ஆயிரக்கணக்கில் செலவு செய்து கவலைப்பட வேண்டாம். நாங்கள் அறவிடுவது தபால் கட்டணம் மட்டுமே.

பெயர், முகவரி, மாவட்டம் போன்ற விவரங்கள் எழுதி ரூபா.13.50 பெறுமதியான முத்திரையுடன் கீழ்க் காணும் விலாசத்திற்கு தபாலில் விண்ணப்பிக்கவும். தற்போது வெளிநாட்டிலுள்ளவர்களும் இதில் பங்குபற்றலாம். பெயர், முகவரி, இலங்கை முகவரியையும் எழுதியனுப்பவும். வெளிநாட்டிலுள்ளவர்கள் முத்திரையனுப்பத் தேவையில்லை.

TAURUS LANKA
P.O.Box - 84, Kotte, Sri Lanka.
பதிவு எண் : W/C 3791

# மலையகத் தொழிலாளர் உரிமைக்கு மலையென எழுந்து நிற்கும் தலைவர்கள்

## சமூகத்துக்குப் பெருமகிழ்ச்சி, கம்பெனிகளுக்குப் பேரிடி

மலையகச் சத்தியாக்கிரகத்தின் வெற்றி தோல்வியைவிடச் சத்தியாக்கிரகம் ஏற்படுத்திய எழுச்சியும் ஒற்றுமையுமே முக்கியமானவை.

அனுபவம் கற்பித்த பாடத்தின் காரணமாக மலையகத் தலைவர்கள் அரைநூற்றாண்டு காலத்தின் பின் தொழிலாளர் நலனுக்காகப் போராட ஒன்றுபட்டுவிட்டார்கள்.

இது மலையக சமூகத்துக்குப் பெரு மகிழ்ச்சியையும் தோட்டக் கம்பனிக்காரர்களுக்கும் முதலாளிமாருக்கும் பேரிடியையும் தருவதாக அமைந்திருக்கிறது.

வடக்கு கிழக்கில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகள் எப்படி எல்லோருடைய பங்களிப்புடனும் உணர்ச்சிப் பேரலைகளை எழுப்பினவோ அப்படியே மலையத்தில் சத்தியாக்கிரகம்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 400 ரூபா சம்பள உயர்வு கோரி இ.தொ.கா பொதுச் செயலாளர் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் துணிவுடன் ஆரம்பித்த சத்தியாக்கிரகப் போராட்டம் மலையகத்தில் புதிய வரலாறு படைத்து விட்டது.

400 ரூபா சம்பள உயர்வுடன் வேறு இரண்டு கோரிக்கைகளையும் ஏனைய தொழிற் சங்கங்கள் முன்வைத்தன. அவற்றை அமைச்சர் ஆறுமுகம் அங்கீகரித்து ஏற்றுக் கொண்டார். இது இதர தொழிற்சங்கத் தலைவர்கள் மத்தியில் பெரும் திருப்தியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இதனால் அமைச்சர் ஆறுமுகத்தால் முன்வைக்கப்பட்ட சம்பள உயர்வு 400 ரூபா கிடைக்கும்வரை போராட்டம் நடத்துவோம். அடுத்த கட்டமாக தொழிலாளர்களின் நாட்சம்பளமாக 121/- ரூபா ஊர்ஜிதப்படுத்தப்பட வேண்டும். தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டுமே மறுக்கப்பட்டுள்ள வாழ்க்கைச் செலவு புள்ளிகளுக்கான கொடுப்பனவு அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்துப் போராட அவர்கள் உறுதிபூண்டுள்ளனர்.

மூன்று துருவங்களாக இருந்து வந்த அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன், தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எம். எஸ். செல்லச்சாமி ஆகியோருடன் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் இணைச் செயலாளரும் ஊவா மாகாணசபை உறுப்பினருமான கே. வேலாயுதம் ஆகியோர் சத்தியாக்கிரக மேடையில் அணையா தீபத்தின் முன் இந்த ஒற்றுமைப் பிரகடனத்தை வெளியிட்டனர்.

1948 ஆம் ஆண்டு பிரஜா உரிமை சட்டத்தை எதிர்த்து



மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் அன்று கொழும்பில் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தப் பட்டது. அதன் பின்னர் நடத்தப்பட்ட முக்கிய சத்தியாக்கிரகப் போராட்டம் இதுவாகும். அமரர் தொண்டமானால் உருவாக்கப்பட்ட தொழில் பயிற்சிக் கேட்போர் கூடத்தில் மொத்தமாக 22 தொழிற்சங்கத் தலைவர்கள் ஒன்று கூடி ஏகமனதான தீர்மானங்களை மேற் கொண்டனர்.

தொழிலாளர் உரிமைகளை வென்றெடுக்க சங்கங்கள் ஒன்று பட்ட இந்நிகழ்ச்சி மலையகச் சமுதாயத்தின் மத்தியில் ஒரு புதுத்தெம்பை ஏற்படுத்திவிட்டது. அமரர் தொண்டமானின் வழியில் ஆறுமுகம் தொண்டமான் மேற் கொண்ட அரசியல் சாணக்கியத்திற்குக் கிடைத்த வெற்றி இது என்று கூறலாம்.

### மலையகக் கண்ணோட்டம்

அட்டனில் இருந்து

இரா. புத்திரசிகாமணி – ப.பன்னீர்செல்வம்

இப்போராட்டத்தில் மலையகத்தின் பல பாகங்களிலும் இருந்து தமிழ், சிங்கள, முஸ்லிம் தொழிலாளர்களும் வர்த்தகர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் உத்தியோகத்தர்களும் சர்வமத குருமார்களும் ஆளும் கட்சி-எதிர்க்கட்சி எம்.பிக்களும் அமைச்சர்களும் பேதமின்றிக் கலந்து கொண்டு ஆதரவளித்தனர். டிக்கோயா நோர்வூட், பொகவந்தலாவ, கினிகத்தேன, கொட்டகலை, தலவாக்கலை, லிந்துலை ஆகிய நகரங்களில் இருந்து பேரணிகளும், வாகனத் தொடரணிகளும் அட்டனில் வந்து குவிந்தது கண்டு மலையகம் வியந்தது. பெரும் ஆர்ப்பாட்டமின்றி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் ஒன்று பத்தாகி பத்து நூறாகி நூறு ஆயிரமாகி ஆயிரம் பல லட்சமாகி இன்று ஆட்சியாளர்களையும் சிந்திக்க வைத்து விட்டது.

சாத்வீக வழியில் நடத்தும் இப்போராட்டத்திற்கு நல்ல பதில் கிடைக்கா விட்டால் அடுத்த கட்ட நடவடிக்கை மிகத் துணிவானதாக இருக்க வேண்டு மென இப்பொழுதே தொழிலாளர்கள் தீர்மானித்து விட்டனர். தோட்டங்கள் தோறும் ஆராதனைகள், தொழிற்சாலைகள் முன் சத்தியாக்கிரகம், காலையும் மாலையும் கூட்டுப் பிரார்த்தனைகள் , சட்டப்படி எட்டு மணி நேர வேலைகள் என அவர்கள் போராட்டத்தை ஆரம்பித்து விட்டனர். இதனால் பெருந்தோட்டத்துறை படிப்படியாக ஸ்தம்பித நிலையை அடைந்து வருகிறது. பல தோட்டங்களில் தோட்ட அதிகாரிகள் விடுமுறையில் சென்று விட்டனர்.

அரைப் பேர் போடுவோம், குறைச் சம்பளம்தான் கொடுப்போம், வீட்டிற்கு விரட்டுவோம் என்ற மிரட்டல்கள் எல்லாம் தொழிலாளர்களிடம் பலிக்கவில்லை. கூட்டு ஒப்பந்தம் தொழிலாளர்களின் உணர்வலைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதையும் மீறி அவர்கள் போராட்டத்திற்குத் தயாராகிவிட்டார்கள். உற்சாகம் கரை புரண்டு ஓடுகிறது. வெற்றி நிச்சயம் என நம்புகின்றனர். தொழிலாளர்களின் இந்த நம்பிக்கை எதிர்பார்ப்புகள் வீண் போகக்கூடாது.

# அசைந்து கொடுக்க மறுத்துவந்த கம்பெனிகள் இறங்கி வந்து பேச்சு

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பார்கள். அந்த நிலை தான் இன்று மலையகத் தொழிலாளர் போராட்டத்தால் ஏற்பட்டுள்ளது. சம்பள உயர்வுப் பிரச்சினையில் சற்றுக் கூட அசைந்து கொடுக்க மறுத்து வந்த தோட்டக் கம்பெனிகள் இப்பொழுது அது குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன. சம்பள உயர்வுப்பற்றி பேசவும் கூடாது என்று கூறிய பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளார்.

தோட்டக் கம்பெனிகளுடன் தொழிற்சங்கங்கள் ஏற்கனவே ஒருபுறத்தில் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளன. மறுபுறத்தில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இப்பேச்சுவார்த்தைகளில் இன்னமும் இறுதி முடிவு எட்டப்படவில்லை. இதனால் இறுதி முடிவு கிட்டும் வரை சத்தி யாக்கிரகப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதென அனைத்துத் தொழிற்சங்கங்களும் தீர்மானித்துள்ளன. அந்தத் தீர்மானத்தை மலையகத் தொழிற்சங்கத் தலைவர்கள் கடந்த புதனன்று பத்திரிகையாளர் மாநாட்டில் கூட்டாக அறிவித்தனர்.

தோட்டக் கம்பெனிகளும் பிரதமரும் சம்பள உயர்வு குறித்து பேச்சுவார்த்தைக்கு முன்வந்திருப்பது சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு கிடைத்த ஒரு வெற்றியாகும் என்று அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரனும் அம்மாநாட்டில் வருணித்தனர்.

இ.தொ.கா.பிரதிநிதிகளான ஆர் யோகராஜன் முத்து சிவலிங்கம் எம்.பி. ஹெரி சந்திரசேகர ஆகியோர் தோட்டக் கம்பெனிப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர் .22 கம்பெனிகளில் 6 கம்பெனிகளின் பிரதிநிதிகள் மட்டுமே சமூகமளித்திருந்தனர். எனினும் ஏனைய கம்பெனிகளுடனும் பேசி நல்லதொரு முடிவைத் தெரிவிப்பதாக வந்திருந்த கம்பெனிப் பிரதிநிதிகள் பொறுப் பேற்றுக் கொண்டனர் என முன்னாள் எம்.பி. யோகராஜன் தெரிவித்தார்.

அமைச்சர் ஆறு முகம் தொண்டமான் ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். அங்கு ஜனாதிபதி சில மாற்று யோசனைகளை முன்வைத்துள்ளார். அமைச்சர் ஆறுமுகம் அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் பெருந்தோட்டத்துறை அமைச்சர் என்ற வகையில் இப்பிரச்சினையில் தலையிட்டுத் துரித முடிவு காணவேண்டும் எனப் பிரதமரை ஜனாதிபதி பணித்துள்ளார்.

பேச்சுவார்த்தை மூலம் உடனடித்தீர்வு காணப்படாவிட்டாலும் ஜனாதிபதியின் வார்த்தையில் எமக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது என்றாலும் வெற்றி கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் எனவும் மலையகத் தலைவர்கள் கூறினார்கள்.

பத்திரிகையாளர் மாநாட்டில் மலையக மக்கள் முன்னணி நிதிச் செயலாளர் சரத் அத்துகோரள ,மாரிமுத்து எம்.பி. முத்து சிவலிங்கம் எம்.பி , முன்னாள் எம்.பி. ஆர். யோகராஜன், இ.தே.தோ.தொ.ச. இணைச் செயலாளரும் ஊவா மாகாண சபை உறுப்பினருமான கே.வேலாயுதம் மற்றும் கூட்டுக் கமிட்டி உறுப்பினர்களும் கலந்து கொண்டு செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்தனர்.

இன்று முழு மலையகமுமே ஒன்றுபட்டு விட்டது .இது எமக்கு கிடைத்த முதல் வெற்றி! எமது கோரிக்கை நியாயமானது என்பதை, சகல தரப்பினரும் ஏற்றுக் கொண்டு ஆதரவளிக்கின்றனர் .பேசவே மறுத்தவர்கள் பேச்சு வார்த்தைக்கு வந்துவிட்டனர் .இது அடுத்த வெற்றி என்றார் அமைச்சர் ஆறுமுகம்.

தென் பகுதி சிங்களவர்களும் வடக்கு-கிழக்குப் பிரதேச தமிழ் அமைப்புகளும் அரசியல் வாதிகளும் அமைச்சர்களும் சர்வமதத் தலைவர்களும் எமது கோரிக்கை நியாயமானது என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர். இது மலையக சமூகத்தை தேசிய ரீதியாக அங்கீகரித்து விட்டதாகவே கருதுகிறோம் என சந்திரசேகரன் எம்.பி . குறிப்பிட்டார்.

பிந்துனுவெவ சம்பவத்தின் போது எமக்கெதிராகத் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட பிரசாரம் இன்றைய சத்தியாக் கிரகத்தால் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. கண்டியிலும் காலியிலும் கூட சத்தியாக்கிரகம் நடத்த முடிகிறது .இது தனிப்பட்ட சம்பளப் போராட்டமாக அன்றி மலையக சமூகத்தின் எழுச்சிப் போராட்டமாகிவிட்டது .இதனை எவராலும் முறியடிக்கமுடியாது என கே.வேலாயுதம் அங்கு குறிப்பிட்டார்.

உங்களுடைய ஒற்றுமை சம்பள உயர்வுடன் முடிந்து விடுமா? இந்திய வம்சாவளிப் பேரணிக்கு ஏற்பட்ட கதி ஏற்படுமா எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

அன்றைய நிலைமை வேறு. அன்று ஒருவர் போராட்டம் நடத்தினால் மற்றவர் குழி பறிப்பார் .அதனால் ஏற்பட்ட விளைவுகள் விபரீதமாக இருந்தன .ஆனால் இன்று எல்லோரும் திறந்த மனதுடன் மனம்விட்டுப் பேசி ஒன்றுபட்டுவிட்டோம். எல்லோரும் ஒன்றிணைந்து மலையகத் தொழிற்சங்க/ அரசியல் சம்மேளனம் ஒன்றை உருவாக்கிவிட்டோம். இதில் எந்த சந்தேகமும் இல்லை .நிச்சயமாக எமது நட்பும் ஐக்கியமும் நிலைத்து நிற்கும் என்று அமைச்சர் ஆறுமுகம் உறுதியாகப் பதிலளித்தார்.

இ.தொ.காவில் இருந்து பிரிந்து சென்றவர்களின் புதிய தொழிற்சங்கம் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ள வில்லையே எனச் சுட்டிக்காட்டியபோது "மக்கள் அவர்களை மறந்துவிட்டார்கள், நாமும் அலட்டிக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை" என அமைச்சர் ஆறுமுகம் பதில் அளித்தார்.

வரவு செலவுத் திட்டத்தையும் அவசரகாலச் சட்ட நீடிப்பையும் எதிர்த்து வாக்களிப்பீர்களா என ஒரு பத்திரிகையாளர் கேட்டபோது ..அரசியலுக்கும் தொழிற்சங்கப் போராட்டத்துக்கும் முடிச்சுப்போட வேண்டாம் என்றார் அமைச்சர் ஆறுமுகம்.

# அரசியல், மத வேறுபாடின்றி தேடி வந்து குவிந்த ஆதரவு

'எல்லாப் பாதைகளும் அட்டனை நோக்கி' என்று கூறுமளவுக்கு சத்தியாக்கிரகப் போராட்டம் வேறுபாடின்றி தொழிற்சங்க வாதிகளை, அரசியல் வாதிகளை, சமயத் தலைவர்களை, பிரமுகர் களைக் கவர்ந்திழுத்து வருகிறது.

கண்டி உதவி இந்தியத் தூதுவர் மல்ஹோத்ரா அமைச்சர்களான இந்திக குணவர்தன, டக்ளஸ் தேவானந்தா, புதிய இடதுசாரி முன்னணித் தலை வர்களில் ஒருவரான வாசுதேவ நாணயக்கார, நவீன் திசாநாயகா எம்.பி மற்றும் எம்.எஸ்.செல்லச்சாமி எம்.பி.பெ.சந்திரசேகரன் ஆகியோர் சத்தியாக்கிரக மேடையில் அமர்ந்திருந்து ஆதரவளித்தவர்களில் முக்கியமானவர்கள்.

மலையக மக்கள் முன்னணி, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், அஸிஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய காங்கிரஸ், புதிய செங்கொடிச் சங்கம், விவசாய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தோட்டத் தொழிலாளர் யூனியன், அகில இலங்கை ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ், அகில இலங்கை ஐக்கிய சேவையாளர் காங்கிரஸ், தொழிலாளர் முன்னணி, மலையக மாணவர் இளைஞர் மன்றம், ஐக்கிய தொழிலாளர் அமைப்பு, தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி, ஆகியவற்றின் தலைவர்கள் , பிரதிநிதிகள் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆசிரியர் சங்கங்கள், கல்வி அதிகாரிகள் சங்கம், தொண்டர் நிறுவனங்கள் என்பன ஆதரவளிக்கின்றன.

இந்த பங்குபற்றல், ஆதரவளிப்பு ஆகியவற்றுக்கு மத்தியில் இப்போராட்டத்தில் கலந்து கொள்ளாது ஒதுங்கியிருக்கும் சங்கம் ஒன்றும் உள்ளது. ரி.வி.சென்னன் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியே அச்சங்கமாகும்.

இவர்கள் ஒதுங்கிக் கொண்டார்களா அல்லது ஓரம்கட்டப்பட்டுவிட்டார்களா? என்பதே இன்று மலையகத்தில் எழுப்பப்படும் கேள்வியாகும்.

இது பற்றி ஏ.எம்.டி.இராஜனிடம் 'சுடர் ஒளி' கேட்டபோது, தங்கள் சங்கம் 400 ரூபாவுக்கான சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆதரிப்பதாகக் கூறினார்.

ஆயினும் ஆறுமுகம் தொண்டமான் போராட்டத்தை ஆரம்பித்ததால் அதில் தங்களால் கலந்து கொள்ள முடியவில்லை என்றார்.

# ராசி பலன்

**11.03.2001 முதல் 17.03.2001 வரை**
**பொ.சந்திரன்.**



### மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை1

இராசிநாதன் எட்டாம் வீடான மறைத் தானத்தில் ஆட்சியாக இருப்பது நன்மை செய்யும். பொருளாதாரம் தாராளமாகும். கல்வியில் ஆர்வம் இருக்கும் சமூகத்தில் நல்ல மதிப்பு இருக்கும். சகோதரங்கள் நட்புடன் செயல்படுவர். வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார், உறவினர் விசுவாசமாக இருப்பர். மனம் தன் சுய பிரகாசத்தை இழந்து வீண் கற்பனையில் சுகம் காணும். எதிரிகள் பகையை மறந்து நண்பர்களாவர். குடும்ப சுகம் உண்டு. விசுவாசமும் ஐக்கியமும் இருக்கும். காதலர்கள் உள்ளார்ந்த அன்போடும் மனமகிழ்வோடும் இருப்பர். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் சில பிணக்குகள் தோன்றும். சமாளிப்பீர்கள்.



### இடபம்: கார்த்திகை 2, 3, 4 ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

இராசிநாதன் பலம் பெற்று இருப்பது விசேஷம். இன்பத்தானாதிபன் இராசியை நோக்குவது நல்லது. பணத்தட்டுப்பாடு தோன்றி மறையும். கல்வியில் ஆர்வம் வரும். உங்களுக்கு உள்ள மதிப்பு பாதுகாக்கப்படும். சகோதரர்கள் விசுவாசமாக இருப்பர். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். உறவினரோடு மனக் கசப்பிற்கு இடம் உண்டு. மனம் தன் இயல்பு நிலையில் இருக்கும். ஆரோக்கியமான எண்ணங்கள் தோன்றும். எதிரிகள் பலம் பெற்றாலும் நட்புடன் பழகுவார்கள். கணவன் மனைவி இருவரும் சமபலம் பெற்றிருப்பதால் இயல்பாக விட்டுக் கொடுத்து அமைதியைப் பேணுவார்கள். காதலர் வாழ்வு ஆனந்தமயம். தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழிலில் போட்டியுண்டு. முன்னேற்றம் உண்டு.



### மிதுனம்: மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

இராசிநாதன் புதன் பாக்கியத்தில் இருப்பது நலம். இராசியில் உள்ள ராகுவை சனி பார்ப்பது நல்லதல்ல. பொருளாதாரம் நன்றாக இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். உங்கள் மதிப்பு குறையாது. சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார், உறவினர் விசுவாசமாக இருப்பர். மனச் சஞ்சலம் இருக்கும். மிதமிஞ்சிய கற்பனையில் நேரம் செலவாகும். எதிரி பலம் பெற்று உங்களை நேருக்கு நேராகப் பார்க்கும் சந்தர்ப்பம் உண்டு. குடும்ப உறவு பாதிக்கலாம். கருத்து மோதல் வரலாம். காதலர்கள் சந்திக்க வாய்ப்பில்லாது போகலாம். தேக சுகம் நன்றாக இருக்கும். தொழில் விருத்தியுண்டு.



### கடகம்: புனர்பூசம், பூசம், ஆயிலியம்

இராசிநாதன் சந்திரன் மூன்று முதல் ஆறாம் வீடு வரை சஞ்சரிக்கும் போது பெரும்பாலும் எல்லாக் கிரகங்களின் பார்வையும் பெறுவதால் நன்மை உண்டு. கையில் காசு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மதிப்பு உயரும். சகோதரங்களுக்கிடையில் மனக் கசப்பு உருவாகலாம். வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார், உறவினர் விசுவாசமாக இருப்பர். மனத்தைரியம் இருக்கும். தீர்க்கமாக சிந்தித்து நல்ல முடிவுகளை எடுப்பீர்கள். எதிரிகள் பகையை மறந்து நண்பர்கள் ஆவார்கள். குடும்பத்தில் எச்சரிக்கையுடன் கூடிய சமாதானம் உருவாகும். காதலர் வாழ்வு களை கட்டும். தேக சுகம் சிறிய பாதிப்புக்கு உள்ளாகக் கூடும். தொழில் விருத்தியுண்டு.



### சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1

இராசிக்கு சுக்கிரன், புதன் ஆகிய சுபக்கிரகங்களின் பார்வை கிடைப்பது நலம். கையில் காசு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சமூகத்தில் மதிப்பு உயரும். சகோதரச் சிறப்பு உண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். இனபந்துக்கள் விசுவாசமாக இருப்பர். மனப் போராட்டம் இருந்தாலும் நடைமுறைச் சாத்தியமான முடிவுகளை எடுக்கும். எதிரிகள் பலவீனமுற்று இருப்பதால் ஆறுதல் அடையலாம். குடும்ப அமைதியுண்டு. சுகம் குறைதான். காதலர் வாழ்வில் தென்றல் வீசும். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிரயாணம் அமையலாம். தொழில் முன்னேற்றம், பதவி உயர்வு அல்லது இடமாற்றம் ஏற்படலாம்.



### கன்னி: உத்தரம் 2, 3, 4 அத்தம். சித்திரை 1, 2

இராசிநாதன் மறைவுத் தானத்தில் இருந்தாலும் சுபக் கிரகங்களின் பார்வை பெறுவதால் ஆறுதல் அடையலாம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். உங்கள் கௌரவத்துக்கு சவால் விட்டாலும் மதிப்பு உயரும். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். இனபந்துக்கள் அன்பாய் இருப்பர். மனம் அதீத கற்பனையில் காலவிரயம் ஆக்கும். கற்பனையில் சுகம் காண முயலும். எதிரிகள் செயல் அற்று இருப்பதால் நீங்கள் ஆறுதல் அடையலாம். குடும்ப சுகம் உண்டு. அமைதியுண்டு. காதலர்கள் பயபக்தியோடு செயல்படுவார்கள். தேக ஆரோக்கியம் நன்று. தொழில் செய்யும் இடத்தில் பிரச்சினை ஏற்படலாம்.



### துலாம்: சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1, 2,3

இராசிநாதன் சத்துருஸ்தானத்தில் பூரண பலம் பெற்று இராசியை நோக்குவது நல்லது. கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மதிப்பு உயரும். சகோதரங்களுக்கு இடையில் பிணக்கு தோன்றலாம். வீடு, வாகனம் தொல்லை தரும். இனபந்துக்கள் தாமரை இலைத் தண்ணீர் போல் இருப்பர். மனம் கற்பனையில் கோட்டை கட்டுவதோடு நில்லாமல் குடிபுக முயலும். எதிரி பலம் பெற்று இருப்பதால் அவதானமாக நடக்க வேண்டும். குடும்பத்தில் தர்க்கம் இருக்கும். விசுவாசம் குறையலாம். காதலர் வாழ்வில் இலேசான புயல் வீசலாம். தேக சுகம் நன்று. தொழில் சிறப்பு உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு.



### விருச்சிகம்: விசாகம் 4, அனுஷம், கேட்டை

இராசிநாதன் செவ்வாய் தன்னிச்சையாக சொந்த வீட்டில் சுயபார்வை பெற்று இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும் சமுதாயத்திற்கு உங்கள் சேவை தேவைப்படும். சகோதரங்களுக்கிடையில் மனக் கசப்பு தோன்றலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். உற்றார், உறவினர் ஏனோ தானோ என்று இருப்பர். மனம் பூரண அமைதி பெறும். நடைமுறைச் சாத்தியமான எண்ணங்களை மனம் எண்ணும். எதிரிகள் வீடு தேடி வந்து தொல்லை தருவார்கள். அவதானம் வேண்டும். குடும்ப சுகம் உண்டு. அமைதியுண்டு. காதலர்களுக்கு ஆனந்தமான காலம். தேக சுகம் நன்று. தொழில் சிறப்புண்டு.



### தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.

இராசியில் கேது இருப்பதும் இராசிக்கு ராகுவின் பார்வை கிடைப்பதும் மத்திம பலன்தான். பணத் தட்டுப்பாடு வரலாம். சமாளிப்பீர்கள். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி குறையலாம். வீட்டாரினால் சுகம் உண்டு. வாகனம் செலவை ஏற்படுத்தும். இனபந்துக்களின் ஆதரவு குறையலாம். சமூகத்தில் உங்கள் பெயருக்கு சவால் விட ஆள் வரலாம். மனம் ஒருகால் அமைதியாகவும் மறுகால் சஞ்சலமாகவும் இருக்கும். எதிரியின் கை ஓங்கி உள்ளதால் உங்கள் கை ஓங்கும் வரைக்கும் காத்திருப்பது நல்லது. குடும்ப அமைதி இல்லை சுகமும் இல்லை. சண்டையும் இல்லை. காதலருக்குள் புரிந்துணர்வு இருக்கும். தொழில் சிறப்புண்டு.



### மகரம்: உத்தராடம் 2,3,4. திருவோணம். அவிட்டம் 1,2.

இராசிநாதன் சுகஸ்தானத்தில் நீச பங்கராஜ யோகம் அடைந்திருப்பது விசேஷம். பணப்புழக்கம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சமூக அந்தஸ்து பாதுகாக்கப்படும். சகோதரச் சிறப்புண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். இனபந்துக்கள் விசுவாசமாக இருப்பர். மனப் போராட்டம் இருக்கும். இனம் புரியாத பயம் இருக்கும். எதிரிகள் இடம்மாறி அலைந்து திரிவதால் உடனடி ஆபத்தில்லை. குடும்ப சுகம் உண்டு. அமைதி உண்டு. காதலர் வாழ்வு சந்தோஷமாக இருக்கும். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் யோகம் உண்டு. பதவி உயர்வு உண்டு. புதுத் தொழில் வாய்ப்பு உண்டு.



### கும்பம்: அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3.

இராசியில் புதன் இருப்பதும் செவ்வாயின் பார்வை இராசிக்கு கிடைப்பதும் நன்மையே. கையில் காசு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சமூகத்தில் உங்கள் மதிப்பு உயரும். சகோதரச் சிறப்புண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார், உறவினர் விசுவாசமாக இருப்பர். மனச் சஞ்சலம் இருக்கும். மனப் பயம் இருக்கும். எதிரிகள் பலமிழந்து அலைந்து திரிவதால் நீங்கள் ஆறுதலாக இருக்கலாம். குடும்ப சுகம் உண்டு. அமைதியுண்டு. காதலர் வாழ்வில் யோகமயம். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் சிறப்புண்டு. பிரயாண வாய்ப்புகளும் உண்டு.



### மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

இராசியில் சுக்கிரன் பூரண பலம் பெற்று இருப்பது யோகமே. கல்வியில் ஆர்வம் இருக்கும். பணம் இருக்கும். சமூக அந்தஸ்து உயரும். சகோதரச் சிறப்பு உண்டு. வீடு, வாகனம் செலவை உண்டாக்கும். சுற்றத்தார் அயலாரோடு உறவைப் பேணுவது கஷ்டமான காரியம். மனம் அமைதியாய் இருக்கும். உலகத்தில் அளவு கடந்த நாட்டம் உண்டாகும். எதிரிகள் வலுவாக இருப்பதால் அவதானம் வேண்டும். குடும்ப சுகம் உண்டு. அமைதியுண்டு. காதலர் வாழ்வில் தென்றல் வீசும். தேக சுகம் உண்டு. இதுவரை இருந்த நோய் விலகும். தொழில் துறையில் போட்டி நிலவும். வெற்றியுண்டு.

---

**ட்ரைகோ பெஹார் நோய் பிடித்த பெண்ணுக்கு**

# கால் பந்து அளவு தலைமுடி வயிற்றில் சுருண்டு இருந்தது

பத்து ஆண்டுகளாகத் தலைமுடியைச் சாப்பிடும் வழக்கமுள்ள பெண்ணுக்கு சத்திரசிகிச்சை செய்து 'கால்பந்து' அளவில் சுருண்டிருந்த 'தலைமுடிக் கொத்தை' டாக்டர்கள் வெளியே எடுத்தனர்.

தமிழ்நாட்டின் திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்த 20 வயது மதிக்கத்தக்க ஒரு பெண் மதுரை அரச ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குச் சேர்ந்தார்.

அவரை அரச ஆஸ்பத்திரி அறுவைச் சிகிச்சைப் பிரிவு தலைமை டாக்டர் இளங்கோவன் பரிசோதித்தார். ஸ்கேன், எக்ஸ்ரே மற்றும் என்டாஸ்கோபி ஆகியவை எடுக்கப்பட்டன. அந்தப் பெண்ணின் இரைப்பையில் ஏதோ பெரிய கட்டி இருப்பது தெரியவந்தது. அதே சமயம் அந்தப் பெண்ணின் தலையிலும் முடிகள் உதிர்ந்திருந்தன.

டாக்டர்கள் ஆபரேசன் செய்தனர். பெண்ணின் இரைப்பையில் 'தலைமுடிக் கொத்து' கால்பந்து அளவுக்கு உருண்டையாக இருந்தது தெரியவந்தது.

அதனை வெளியே எடுத்த டாக்டர்கள் அதிர்ச்சி அடைந்தனர். 30 செ.மீ., உயரம், 10 செ.மீ, அகலத்தில் அந்தத் தலை மயிர் பந்து இரைப்பையின் வடிவத்திலேயே 'மோல்ட்' செய்யப்பட்டிருந்தது போன்று உருமாறியிருந்தது.

இந்தப் பெண் பத்தாண்டு காலமாக எவருக்கும் தெரியாமல் தனது தலைமுடியைப் பிய்த்தெடுத்துத் தின்று வந்திருக்கிறார். பத்து இலட்சம் பேர்களில் ஒருவருக்கு இப்படியான நோய் ஏற்படுவதுண்டு. 'ட்ரைகோ பெஹார்' என்பது இந்த நோயின் பெயர்.

அது வயிற்றுக்குள் சென்று ஜீரணமாகாமல் இப்படி பந்து போல உருண்டு இரைப்பையின் வடிவத்திற்கு மாறி விட்டது. இதனால் இந்தப் பெண் ஒரு கை சோறு சாப்பிட்டாலும் வயிற்றில் இடமில்லாமல் வயிறு நிறைந்தது போன்ற உணர்வு. இந்த நிலை நீடித்திருந்தால் போதிய உணவு கிடைக்காமலோ, அல்லது இரத்தவாந்தி எடுத்தோ, அவர் இறக்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கலாம்.

தலைமுடி ஜீரணமாகாத ஒரு பொருள். எனவே குழந்தைகள் தலைமுடியை வாயில் வைத்திருப்பதைக் கூட பெற்றோர் அனுமதிக்கக் கூடாது. சாப்பாட்டில் தலை முடி இல்லாதவாறு விழிப்புடன் இருக்க வேண்டும்.

---

டாக்டர்: ஒரு மாதமாக என்னிடம் வாறீங்களே... ஏதாவது, 'இம்ப்ரூவ்மென்ட்' தெரியுதா..?

நோயாளி: "பரவாயில்லை டாக்டர்! இப்ப கொஞ்சம் உங்க நேர்ஸ் என்னைப் பார்த்துச் சிரிக்கிறா..."

க.நாகேந்திரன், நாவலப்பிட்டி



---



# உதை பந்தாட்டத்தில் இயந்திர மனிதன் ஆர்வம்

விஞ்ஞானிகள் தமது நவீன நுண்ணறிவுக்கு ஏற்றபடி "ரோபோ" எனப்படும் இயந்திர மனிதனை உருவாக்கி வருகிறார்கள்.

தொழிற்சாலைகளில் மனிதன் செய்யும் வேலைகளை இயந்திர மனிதன் மூலம் செய்து முடிக்கும் நோக்குடன் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரு வேலையைச் செய்து முடிக்க மனிதன் செலவிடும் நேரத்திலும் பார்க்க வெகுவிரைவாகவே அந்த வேலையைச் செய்து முடித்துவிடக் கூடிய திறமை இயந்திர மனிதனுக்கு உண்டு.

ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்ட இயந்திர மனிதன் இனிமேல் பொழுது போக்குகளுக்கும் பயன்படப் போகிறான்.

ஜப்பானில் சொனி நிறுவனம் உருவாக்கியுள்ள இந்த இயந்திர மனிதன் 50 செ.மீ. உயரமுள்ளது. அதன் எடை 5 கிலோ. 24 இணைப்புகளால் உருவாக்கப்பட்ட இந்த இயந்திர மனிதனால் நடக்க முடியும். ஆட முடியும், ஒற்றைக்காலில் நிற்க முடியும், பந்தை உதைக்க முடியும்.

# திருக்கேதீஸ்வரப் பெருமானுக்கு தடுப்புக்காவல்; சித்திரவதை!

## ஆலயச் சூழலில் அடர்ந்த காடு; பாலாவி புனித தீர்த்தம் சாக்கடை நாற்றம்



ஆலய முகப்புப் பகுதியின் முன்னைய தோற்றம்

பாடல் பெற்றதும் வரலாற்றுச் சிறப்புமிக்கதுமான பழம்பெரும் சைவத் திருத்தலம் திருக்கேதீஸ்வரம். அது இன்று இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் பாழ்பட்டுக் கிடக்கிறது.

ஆலயச் சூழல் அடர்ந்த காடாகக் காட்சி அளிக்கிறது. பாலாவிப் புனித தீர்த்தப் பகுதியில் சாக்கடை நாற்றமடிக்கிறது

கேதீஸ்வரப்பெருமான் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர் போல் ஆகி விட்டார்.

அவருடைய நெற்றியில் இருந்த தங்கக்கண் தோண்டி எடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் பெருமானே சித்திரவதைக்கு உள்ளாகி விட்டார்.

இந்தக் கொடுமைகளையும் அலங்கோலங்களையும் இம்முறை சிவராத்திரி வழிபாட்டுக்காகத் திருக்கேதீஸ்வரம் சென்ற பக்தர்கள் நேரில் கண்டு கலங்கிப் போனார்கள்.

கடந்த பெப்ரவரி 21ஆம் திகதி அன்று பாதுகாப்புப் படையினர் மனம் இரங்கி பக்தர்கள் திருக்கேதீஸ்வரம் செல்வதற்கு அனுமதி வழங்கினர். இதற்காக 10 பஸ் வண்டிகள் மன்னாரில் இருந்து திருக்கேதீஸ்வரம் செல்வதற்குச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

மன்னாரின் மைய சோதனைச் சாவடியின் முன்பாக திருக்கேதீஸ்வரம் செல்வதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் காலை 6 மணியளவில் இருந்து வரிசையில் காத்து நின்றனர். ஒவ்வொருவராக பரிசோதனை செய்யப்பட்டனர். அடையாள அட்டை இலக்கங்கள் பதியப்பட்டன. பின் அவரவர்க்குரிய பஸ் எண்கள் வழங்கப்பட்டன. ஒருவாறாக ஒவ்வொரு பஸ் வண்டியிலும் நூறு பேர் ஏற்றி அனுப்பப்பட்டனர்.

திருக்கேதீஸ்வரத்தை வந்தடைந்தவுடன் எல்லோருக்கும் அங்கே அதிர்ச்சி தான் காத்திருந்தது. திருக்கேதீஸ்வரத்துக்கே சிறப்பாக அமைந்த வெண் மணற் பரப்பை அங்கே காணவில்லை. திருக்கேதீஸ்வரமா இது என்று ஒவ்வொருவரும் தம்மைத் தாமே கேட்டுக் கொண்டார்கள்.

ஏனெனில் வானளாவிய மரங்களுடன் எங்கும் நெருஞ்சி முட்களும் பற்றைகளும் நிறைந்திருந்தன. அடர்ந்த காடாகவே அந்த இடம் காட்சி அளித்தது. ஒரு காட்டினுள் இருக்கும் பாழடைந்த கோயிலை நோக்கிச் செல்லும் உணர்வே அனைவருக்கும் ஏற்பட்டது.

அது மட்டுமா? தீராத நோய்களை எல்லாம் தீர்க்க வல்ல புனித தீர்த்தம் என்று பெயர் பெற்றது பாலாவி. அதன் அருகே சென்றவுடன் மூக்கைப் பொத்த வேண்டிய நிலை. அந்தளவிற்குத் துர்நாற்றம். சாக்கடைத்தோற்றம். சகித்துக் கொண்டு நடந்தால் நெருஞ்சி முட்கள் கால்களைப் பதம் பார்க்கின்றன. முள்பற்றைகள் முதுகைக் கீறுகின்றன.

எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு சில அடியார்கள் நீரில் இறங்கி ஆண்டவன் பெயரை உச்சரித்த வண்ணம் தீர்த்தமாடினர்.

அந்த நேரத்தில் சீருடையணிந்த சில பெண்களின் சப்பாத்துகளும் அங்கே ஜலக்கிரீடை செய்தன. என்ன செய்வது யாரைத்தான் கேட்பது?

ஆலயத்துக்குள் நுழைந்தால் அங்கே பூசை புனஸ்காரங்களுக்கு அர்ச்சகர்கள் இல்லை. மணியோசை இல்லை. மந்திர ஒலியும் கிடையாது எங்கும் ஒரே சூனியம்.

வந்தவர்கள் அனைவரும் தாமே கற்பூரத்தைக் கொளுத்திக் கையெடுத்துக் கும்பிட்டார்கள். கோயில் பிரகாரத்தைச் சுற்றி வந்தார்கள். இப்படிச் சுற்றி வந்தவர்களுக்கு அதிர்ச்சிமேல் அதிர்ச்சி!

சோமாஸ்கந்தர் விக்கிரகத்தில் இருந்த நகைகள் ஒன்றுமே இல்லை. எல்லாம் திருட்டுப் போய்விட்டன. விக்கிரகத்தின் நெற்றியில் பதிக்கப்பட்டிருந்த பொன்னினால் ஆன கண் தோண்டியெடுக்கப்பட்டு இருந்தது. என்ன சித்திரவதை இது!

ஆலயத்திருப் பணிகள் நடைபெற்ற சுவடுகள் தெரிந்தன. எனினும் எல்லாம் அரை குறையாகவே இருந்தன. ஒன்றும் நிறைவு பெறவில்லை. அனைவருக்கும் ஒரே மனவருத்தம்.



இ. நமசிவாயம்

வசந்த மண்டபத்தில் வழங்கப்பட்ட அன்னதானம் அனைவருக்கும் ஓர் உண்மையைப் புலப்படுத்துவதாக அமைந்தது. அதாவது எவ்வளவு குறைகள் இருந்தாலும் கொடுமைகள் நடந்தாலும் கேதீஸ்வரப்பெருமானின் அருட்கடாட்சம் சிறிதும் குறையாமலே இருக்கிறது என்பதே அந்த உண்மை.

22ஆம் திகதி மாலை வரை ஆலயம் சென்று வர அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

கொழும்பில் இருந்து திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபைத்தலைவர் இ.நமசிவாயமும் வந்திருந்தார். அவரிடமிருந்து பல விவரங்களை அறிய முடிந்தது.

**கே : கோயில் பூசைகள் நடைபெறவில்லையே காரணம் என்ன?**

ப : ஆகம விதிப்படி கும்பாபிஷேகம் நடத்தாமல் பூசைகள் செய்ய முடியாது.

**கே : சோமாஸ் கந்தரின் விக்கிரகத்திலிருந்து தங்கத்தாலான நெற்றிக் கண்ணும் மற்றும் சில தங்க ஆபரணங் களும் தோண்டி எடுக்கப் பட்டும் களவாடப் பட்டும் இருக்கின்றனவே இதையார் எடுத்திருப்பார்கள்?**

ப : இராணுவத்தினரின் தடுப்புக் காவலில் இருக்கும் கோயிலில் யார் இவற்றைச் செய்திருப்பார்கள் என்பதை அவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.



மிக நேர்த்தியாக இருந்த ஆலய விக்கிரகங்கள்

**கே : கோயிலின் நிர்மாணப் பணிக்காக ஒரு கோடியே இருபது லட்சம் ரூபா அரசாங்கத்திடம் கேட்டீர்களாமே?**

ப : ஆம் கேட்டிருந்தோம். ஆனால் கிடைத்ததோ இருபது லட்சம் ரூபாதான்.

**கே : அதை வைத்துக்கொண்டு என்ன செய்தீர்கள்?**

ப : கோயில் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பத்து லட்சம் ரூபா அதற்குச் செலவாகியது. இராணுவத்தினர் வந்து கோயிலைத் தம் வசம் ஆக்கியதும் அங்கு வேலை செய்தவர்கள் அனைவரும் தம்மிடங்களுக்குத் திரும்பிச் சென்று விட்டார்கள். இதனால் மிச்சமாயிருந்த பத்து லட்சம் ரூபாவை கச்சேரியில் ஒப்படைத்துவிட்டேன்.

**கே : இங்கிருந்து இராணுவத்தினர் அகன்றால் உங்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?**

ப : முதலில் கும்பாபிஷேகத்தை நடத்திவிட்டு வழமை போன்று நாளாந்த பூசைகளைச் செய்யவேண்டும். அதன் பிறகு அழித்தொழிக்கப்பட்ட சிவாச்சாரியார் இல்லங்கள் மீளமைக்கப்படவேண்டும். அறங்காவலர், பணியாளர்கள் ஆகியோரின் தங்குமனைகள் அமைக்கப்படவேண்டும். அடியார்களின் வசதிக்காக அமைந்திருந்த 28 பெருமடங்களை மீண்டும் அமைக்க வேண்டும். திருக்கேதீஸ்வரத்தைச் சூழவுள்ள பிரதேசங்களில் பொது மக்களைக் குடியமர்த்த வேண்டும். தபாலகம், மருந்தகம், அனாதை இல்லம், பாடசாலைகள், நூலகம் என்பனவற்றை முன்போல் மீண்டும் அமைத்துக் கொள்ள வேண்டும். இவையே எமது தலையாய பணிகளும் இலட்சியமும் ஆகும்.

**கே : இது தொடர்பாக நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறீர்கள்?**

ப : வெகுவிரைவில் எடுக்கப் போகிறேன். முதலில் ஜனாதிபதி சந்திரிகாவுடன் நேரடியாகப் பேசப் போகிறேன் அடுத்த படியாக உலக இந்துகலாசார அமைப்புகளை ஒன்று கூட்டி இது தொடர்பாகவும் பேசப்போகிறேன்.

**கே : உலக சைவ மக்களுக்கு நீங்கள் விசேஷமாக ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?.**

ப : உலகத்துச் சைவ மக்கள் மட்டுமல்ல சைவ இந்துப் பெருமன்றங்களும் ஏனைய வெளிநாட்டு உள்நாட்டு அமைப்புகளும் முன்வந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

— ஜெ.பிறேம்குமார்















இப்பத்திரிகை கொழும்பு 06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் எண்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 மார்ச் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.